# மன்னா


# மடுமாதா திருத்தல ஆடித் திருவிழா வழமைபோன்று நடைபெறும்!

## மடு ஆலய திருவிழாவிற்குச் செல்லும் மக்களுக்கு முக்கிய அறிவிப்பு






மடுத் திருத்தலத்தின் ஆடிமாத திருவிழா வழமைபோன்று நடைபெறும். 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி வழமைபோன்று ஒவ்வொருநாளும் சிறப்பு மாலை ஆராதனை வழிபாடுகளும், காலை முதல் மாலை வரை ஏனைய வழிபாடுகளும் நடைபெறும். மடு அன்னையின் திருத்தலம் நோக்கி வருகின்ற பக்தர்கள் மடுத் திருத்தலத்தின் புனிதத் தன்மையை மனதிற் கொண்டு திருத்தலத்தின் ஒழுங்கு விதிகளிற்கு அமைய நடந்துகொள்ள அன்போடு அழைக்கின்றோம்.

மேலும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையை அடுத்து இத் திருவிழாவிற்கு வரும் அனைத்துப் பக்தர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அனைவரும் சோதனைக்கு உட்படுவார்கள் என மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மடு அன்னையின் ஆடி மாத திருவிழா தொடர்பான கலந்துரையாடல் 10.06.2019 திங்கட்கிழமை அன்று மாலை 3.45 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது. மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்தாஸ் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் மன்னார் மறைமாவட்ட ஆயர், மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. அன்ரனி விக்டர் சோசை அடிகளார், மடு பரிபாலகர், அருட்பணி. பெப்பி சோசை அடிகளார் இராணுவம், பொலிஸ் அதிகாரிகள், 15 திணைக்களங்களின் அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர். பாதுகாப்பு, குடி நீர், போக்குவரத்து, சுகாதாரம், வைத்திய உதவிகள் உள்ளிட்ட பல்வேறு விடையங்கள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. இதன்போது மன்னார் மறைமாவட்ட ஆயர் கருத்துத் தெரிவிக்கையிலேயே மடு அன்னையின் ஆடி மாத திருவிழா எதிர்வரும் 2ஆம் திகதி நடத்துவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வழமை போல் இவ்வருடமும் ஆடி மாத திருவிழா நடத்துவதற்கு எதிர் பார்க்கின்றோம்.

13

## மன்னார் மறைசாட்சிகளை இறைஊழியர் நிலைக்கு உயர்த்தும் முயற்சி



மன்னார் மறைசாட்சிகளை இறை ஊழியர் நிலைக்கு உயர்த்தும் முயற்சிகள் பல்வேறு மட்டங்களில் நடைபெற்று வருகின்றது. கடந்த 23.04.2019 அன்று தோட்டவெளி புனித மறைசாட்சிகளின் இராக்கினி ஆலயத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களின் தலைமையில் இதற்கென நியமிக்கப்பட்ட குழுக்கூட்டம் நடைபெற்றது. அக் கூட்டத்தில் மன்னார் மறைசாட்சிகள் தொடர்பான ஆவணங்களை, சான்றுகளை மறைமாவட்டம் ரீதியாக ஆவணப்படுத்துமாறு ஆயர் அவர்கள் அழைப்பு விடுத்திருந்தார். ஆகவே மன்னார் மறைசாட்சிகள் பற்றிய பழைய ஏட்டுச்சுவடிகள், படங்கள், ஓவியங்கள், சுரூபங்கள், நாட்டுக்கூத்து, நாடகங்கள், கவிதைகள், கல்வெட்டுக்கள், 425ஆம் ஆண்டு நினைவுவிழா மலர் போன்றவை வைத்திருப்பவர்கள் எம்முடன் தொடர்புகொண்டு அவற்றைத் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

13

## கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருவிழா சிறப்பாக நடைபெற்றது





கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேசிய திருத்தலத் திருவிழாத் திருப்பலி பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. பல ஆயர்கள், குருக்கள், இறைமக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். உயிர்ப்பு விழா அன்று நடைபெற்ற குண்டுவெடிப்பின் பின் மீண்டும் ஆலயம் புணரமைக்கப்பட்டு அழகான ஆலயமாக தோற்றம் அளிக்கின்றது.

## குருத்துவ அருட்பொழிவு நிகழ்வு



கடந்த 23.05.2019 அன்று மன்னார் மறைமாவட்ட அருட்சகோதரர்கள் 4பேர் மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்களினால் குருக்களாக திருநிலைப்படுத்தப்பட்டுள்ளார்கள். புதிய குருக்களையும், அவர்களது பெற்றோர்களையும், உருவாக்குனர்களையும் மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றது.

## குருத்துவ அருட்பொழிவு நிகழ்வு




மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை தனது 149வது அகவையில் தடம் பதித்து 150வது ஆண்டை எட்டவிருக்கும் இந்நிலையில் (1870 – 2020) 150வது யூபிலி ஆண்டிற்கான கால்கோள் விழா கடந்த திங்கட்கிழமை 10.06.2019 காலை 08.00 மணிக்கு கல்லூரியின் முதல்வர் அருட்சகோ. றெஜினோல்ட் அவர்களின் தலைமையில், மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்களின் கூட்டுத் திருப்பலியோடு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து விருந்தினர்கள் இசைக்குழுவினரின் மகிழ்வொலியோடும், மற்றும் சாரணர், சென். ஜோண்ஸ் குழு, கடேற் குழு ஆகியோரின் அணிவகுப்புடன் விழா மேடையை நோக்கி அழைத்து வரப்பட்டனர். அதன்பின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

## மாவிலங்கேணி புனித அலைக்கல அன்னை ஆலய அபிஷேக விழாவும், திறப்பு விழாவும்



மன்னார் மறை மாவட்டத்தில் அளவக்கைப் பங்கின் மாவிலங்கேணி கிராமத்தின் பாது காவலியாம் புனித அடைக்கல அன்னையின் புதிய ஆலயமானது 20.05.2019 திங்கட்கிழமை அன்று மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்களினால் அபிஷேகம் செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. இவ் ஆலய நிர்மாணப்பணியில் ஆரம்பகாலமுதல் இறுதிவரை பணியாற்றிய முன்னைநாள் பங்குத்தந்தையர்கள், மற்றும் தற்போதைய பங்குத்தந்தை அருட்பணி. நியூட்டன் அடிகளார், பங்குமக்கள் அனைவரையும் பாராட்டுகின்றோம்.

**மன்னார் மறைசாட்சிகளின் யூபிலி ஆண்டை முன்னிட்டு சிறப்புக் கட்டுரை**

# மன்னார் மறைசாட்சிகள்

## மானிடவியல் கண்ணோட்டத்தில் சமூகவியல் வரலாற்று ஆய்வு

## – அருட்பணி. ம.க. அருள்பிரகாசம் –

### தொடர் – 1

**முன்னுரை**

மன்னார் மறைசாட்சிகள் பற்றிய வரலாற்று உண்மைகளை அனைவரும் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும் என்னும் நோக்கிலே நீண்டகால விவாதத்திற்கு உட்பட்டுக்கிடக்கின்ற மன்னார் மறைசாட்சிகளின் வரலாற்றை ஆய்வு செய்ய முனைந்தேன். இம் மறைசாட்சிகளின் வரலாற்று உண்மையை யாவரும் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக இவ் ஆய்வை நான்கு அத்தியாயங்களாக வகுத்துள்ளேன்.

முதலாவது அத்தியாயத்தில் மன்னார் மாதோட்ட சுதேச மக்களின் வரலாற்றைச் சமூகவியல் ரீதியில் ஆய்வு செய்துள்ளேன். போத்துக்கேயர் காலத்தில் மன்னார் கத்தோலிக்கர்களின் வரலாறு ஆரம்பமாகின்றது. போத்துக்கேயருக்கு முற்பட்டகால மக்களின் குடியிருப்புப் பற்றி பல நூல்களை ஆதாரமாகக் கொண்டு விவரிக்க முனைந்துள்ளேன். மன்னார் மறைசாட்சிகளின் வரலாற்றைத் தெளிவாக விளங்கிக்கொள்ள மன்னார் மாதோட்ட சுதேச மக்கள் பற்றிய வரலாற்று சமுகவியல் ரீதியாக ஆய்வு செய்து அறிந்திருப்பது மிக அவசியமாகும். ஓர் இடத்தின் வரலாற்றையும், அங்கு வாழ்ந்த குடியிருப்பாளர்களின வரலாற்றையும் தெரிந்தால்தான் அவ்விடத்தில் நடந்த நிகழ்வுகளின் உண்மைத் தன்மையை அறிந்து கொள்ளலாம். இரண்டாவது அத்தியாயத்தில் போத்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது இலங்கையின் அரசியல் நிலை எவ்வாறு இருந்தது என்பன பற்றியும் இந்தியாவில் புனித பிரான்சிஸ் சவேரியார் திருமறையைப் போதித்துக் கொண்டிருந்தபோது அவரை அழைத்த மன்னார் தூதுக்குழுவினர் பற்றியும் கூறமுன்வந்துள்ளேன். அத்துடன் புனித சவேரியாரால் அனுப்பப்பட்ட மறையுரைஞர் பற்றியும் தெளிவுபடுத்த விளைகின்றேன்.

புதுக் கத்தோலிக்கர்களின் மதமாற்றத்தை கேள்விப்பட்ட யாழ்ப்பாண இராச்சிய மன்னன் கிறிஸ்தவர்களை சிரைச்சேதம் செய்து கொன்றதைப் பற்றியும் கூறமுற்பட்டுள்ளேன். அதாவது சாட்சிய நிகழ்வு நடந்தவிதம் பற்றி விளக்கப்பட்டுள்ளது. இவ் அத்தியாயத்தின் இறுதியில் புனித சவேரியார் இலங்கை வந்து மன்னார்த்தீவிலே கொள்ளை நோய் இல்லாமல் செய்து மக்கள் அனைவரையும் மீண்டும் கத்தோலிக்க விசுவாசத்தில் வாழ ஊக்குவித்தது பற்றியும் விவரித்துள்ளேன்.

மூன்றாவது அத்தியாயத்தில் இம் மறைசாட்சிய நிகழ்வுக்கு காரணமான அரசன் யார்? எத்தனை பேர் மறைசாட்சிகளாக மரித்தனர்? இச்சரித்திர நிகழ்வு எங்கே எப்போது நிகழ்ந்தது? மறைசாட்சிகளாக மரித்தவர்கள் யார்? போன்ற விடயங்கள் விபரிக்கப்பட்டுள்ளது. நான்காம் அத்தியாயத்திலே மறைசாட்சிய நிகழ்வு இறையியல் கண்ணோட்டத்தில் விளங்கப்படுத்தப்பட்டள்ளது. அதாவது இந்த மன்னார் கத்தோலிக்கர்கள் உண்மையாகவே கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டு கத்தோலிக்க விசுவாசத்திற்காக தம்மையே இரத்த சாட்சியமாக அர்ப்பணித்தவர்கள் என்பதை இறையியல் ரீதியாக விளங்கப் படுத்தப்பட்டுள்ளது..

இவ்வாய்வின் முழு நோக்கம் என்னவென்றால், மன்னார்த்தீவிலே புனித பிரான்சிஸ் சவேரியாரால் அனுப்பப்பட்ட மறையுரைஞரால் மதம் மாற்றப்பட்ட கத்தோலிக்கர்கள் கிறிஸ்வுக்காக திருமறைக்காக தம்மைக் கையளித்தனர் என்பது உண்மை என உறுதிப்படுத்தி அவர்களை புனிதர் நிலைக்கு திருச்சபை விரைவில் உயர்த்த வேண்டும் என்பதற்காகவேயாகும்.

### அத்தியாயம் - ஒன்று

**1. மன்னார் மாதோட்ட வரலாறு**

மன்னார் மாவட்டமானது இலங்கையின் வடமேற்கே அமைந்துள்ள ஒரு மாவட்டமாகும். இது தொடக்கத்தில் மன்னார் தீவு, மாதோட்டம் என இரு பிரிவாகவே காணப்பட்டது. பின்னர் இம்மாவட்டமானது மன்னார் தீவு, மாந்தை, முசலி என மூன்று பிரதான பிரிவுகளாக விளங்கியது. மாதோட்டப் பெருநிலப்பரப்பிற்கும், மன்னார் தீவுக்கும் இடயே மண்ணிறத்தில் ஓர் ஆறு ஓடிக்கொணடிருக்கின்றது. இதன் காரணமாக **'மண்ணாறு'** என்ற ஆற்றுக்குரிய பெயர் **'மன்னார்'** என இப்பிரதேசத்திற்கு உரிய பெயராக உருப்பெற்றதென போக் (Boake) என்ற ஆய்வாளர் தனது **'மன்னார்'** என்னும் ஆய்வு நூலில் (1888ஆம் ஆண்டு) கூறியுள்ளார்.

மாதோட்டம் என்னும் பெருநிலப்பரப்பில் அமைந்திருந்த புராதன மாந்தை நகரானது கி.மு 300ஆண்டுகளுக்கு முன்னரே இலங்கையிலும் சர்வதேசத்திலும் பிரசித்தி பெற்ற நகரமாகவும், துறைமுகமாகவும் விளங்கியது. மாந்தை நகரை மையமாகக் கொண்ட மாதோட்டமானது நாகர்களினால் கட்டப்பட்ட பிரதான குளமாகிய கட்டுக்கரைக்குளத்தை முன்னிறுத்தி வலைப்பின்னல் கட்டமைப்பில் ஏராளமான குளங்களைக் கொண்டு நீர்வள நாகரீகத்தில் சிறப்புற்று விளங்கிய பிரதேசமாகும். அதேவேளை வள்ளங்கள் செய்தல், கடற்பயணங்களை மேற்கொள்ளல், கடல் வாணிபத்தில் ஈடுபடுதல், சர்வதேச தொடர்புகள், கடல் பாதுகாப்புப் படையாக செயற்படுதல் போன்ற கடல்வளத்துறையிலும் பெரும் வளர்ச்சி கண்ட இடமாக மாதோட்டத் துறமுகமும், மாந்தை நகரும் விளங்கியது. மன்னார் தீவு 18மைல் நீளமும் 2, மைல் அகலமும் கொண்டது. மன்னார் தீவில் **பெரியகரையார் சிறியகரையார்** என்ற இரு பட்டணங்கள் இருந்ததாகவும் அப்பட்டணங்களில் வாழ்ந்தவர்கள் தான் மறைசாட்சிகளாக மரித்தனர் என்றும் **சுறாமர்** என்னும் ஆய்வாளர் **'புனித பிரான்சிஸ் சவேரியார்"** என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.●

*(அடுத்த இதழில் தொடரும்)*

# மன்னார் மறைமாவட்டம்

## திருவழிபாட்டு நாட்காட்டி - 2019

### யூன்

01. புனித அந்தோனியார் - சிற்பியாறு
  - புதுமை மாதா திருவிழா - காஞ்சிரங்குளம் - சேமமடு
02. புனித அந்தோனியார் - நரிகலைச்சான் (குஞ்சுக்குளம்)
  - குழந்தை இயேசு ஆலயம் - செம்மண்தீவு
03. சகாயமாதா திருவிழா - கல்நாட்டினகுளம்
09. திருஇருதய ஆண்டவர் - புதிய வேலர் சின்னக்குளம்
  - அன்பியவாரம் ஆரம்பம்
13. புனித அந்தோனியார் - தள்ளாடி, 2ம் கட்டை (மடுறோட்), இறம்பைக்குளம், செட்டிகுளம், சுவாமிதோட்டம், துவரங்கேணி, பள்ளக்கோட்டை, மணற்குளம், பொந்தீவுகண்டல், தரவன்கோட்டை, தட்சனாமருதமடு, கறுக்காக்குளம், கொக்குப்படையான், சிறுத்தோப்பு, பிடாரிகுளம், உவரி, கனகராயன்குளம், ஒலிமடு, சிறுக்கண்டல், நெடுங்கண்டல், மன்னார் டிப்போ, பெரிய தம்பனை, கல்மடு, பள்ளிமுனை.
15. புனித அந்தோனியார் திருவிழா - பணிக்கர் புளியங்குளம்
16. திருஇருதய ஆண்டவர் ஆலயம் - வேப்பங்குளம் (நேரியகுளம்)
  - புனித அந்தோனியார் திருவிழா - கூமாங்குளம்.
17. புனித அந்தோனியார் திருவிழா - பாலைப்பெருமாள்கட்டு, சிறுகட்டு(செல்பெட்டி), ஆச்சிபுரம், பெரிய பண்டிவிரிச்சான்.
18. புனித அந்தோனியார் திருவிழா - பண்டியன்கட்டு
  - திரு இருதய ஆண்டவர் திருவிழா - இருதயபுரம்
19. புனித பிரான்சிஸ்கு சவேரியார் - சவேரியார்புரம்
  - புனித அந்தோனியார் திருவிழா - கோவிற்குளம், பலகைமுனை, ஸ்ரேசன் - அன்பியதினம்
20. புனித அந்தோனியார் திருவிழா - சவுத்பார்
22. புனித அந்தோனியார் திருவிழா - முதலியார்குளம், பன்றிக்கெய்தகுளம் (ஓமந்தை), மூன்றாம்பிட்டி, சாவற்கட்டு, சின்னப்பண்டிவிரிச்சான்.
23. நற்கருணை ஆண்டவர் - யோசேவ்வாஸ் நகர், கீரி.
  - அன்புக் கன்னியர் அருட்சகோதரிகள் விழா
  - மடுத்திருப்பதியின் ஆடித் திருவிழாவிற்கான நவநாள் ஆரம்பம் - திரு இருதய ஆண்டவர் விழா - பிகாரிகண்டல், மூன்றாம்பிட்டி
24. சதாசகாய அன்னை ஆலயம் - கோதண்டர் நொச்சிக்குளம்
  - திரு இருதய ஆண்டவர் திருவிழா - கவயன்குடியிருப்பு
25. திரு இருதய ஆண்டவர் திருவிழா - சின்னக்குளம், காயக்குடியிருப்பு.
  - புனித அந்தோனியார் திருவிழா - குருக்கள் புதுக்குளம்
28. இயேசுவின் திரு இருதயப் பெருவிழா - குருக்கள் மறைக்கோட்ட ரீதியில் நற்கருணை வழிபாட்டில் ஈடுபடுவர்.
29. புனித இராயப்பர் ஆலயம் - உயிலங்குளம், முறியாகுளம்
  - திரு இருதய ஆண்டவர் விழா - விளக்குவைத்தகுளம் (ஓமந்தை)

■ வியாழக்கிழமைகளில் மாலை 4 மணி தொடக்கம் 7 மணி வரை செபவழிபாடு - தோட்டவெளி ஆன்மீக இல்லம்

### யூலை

02. மடுமாதா திருவிழா
06. செபமாலை அன்னைத் திருவிழா - பாலையடி புதுக்குளம்
  - மன்னார் மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை ஆயர் நியமனம் பெற்ற தினம் (1992).
08. இயேசுவின் திருஇருதயப் பெருவிழா - சிதம்பரபுரம்
  - புனித தோமையார் - கல்நாட்டி
  - புனித தோமையார் திருவிழா - முருங்கன்
  - குழந்தைஇயேசு ஆலயம் - இத்திக்கண்டல்
10. புனித ஆரோக்கிய அன்னை திருவிழா - நானாட்டான் பங்குத்திருவிழா
12. திருஇருதய ஆண்டவர் - இலந்தைவான் (பள்ளக்குளி)
13. நல்லாயன் கோவில் திருவிழா - மெண்டிஸ்பண்ணை
  - செபஸ்ரியார் திருவிழா - மருதமடு.
14. கார்மேல் அன்னை - நாகர் இலுப்பைக்குளம்
  - மடுமாதா ஆலயம் - மகாறம்பைக்குளம்
  - குழந்தையேசு திருவிழா - மன்னார்.

# நினைவுகூர்ந்து செபிப்போம்

**10ஆம் ஆண்டு நினைவு**



**நோபேட் அடிகளார்**
**யூன் 20**

**6ஆம் ஆண்டு நினைவு**



**விக்ரர் குரூஸ் அடிகளார்**
**யூலை 04**

**4ஆம் ஆண்டு நினைவு**



**அவிதப்பர் அடிகளார்**
**யூன் 22**

**41ஆம் நாள் நினைவு**



**ஜீவனதாஸ் பெர்னாண்டோ அடிகளார் - ஏப்ரல் 16**

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அமரர் அருட்பணி. சீமான்பிள்ளை நோபேட் அடிகளார் (2009) இறைபதம் எய்திய 10ஆம் ஆண்டு நிறைவு யூன் 20ஆம் திகதி ஆகும். அமரர் அருட்பணி. சவிரி விக்ரன் அவிதப்பர் அடிகளார் (2015) இறைபதம் எய்திய 4ஆம் ஆண்டு நிறைவு யூன் 22ஆம் திகதி ஆகும். அமதிகள் சபையைச் சேர்ந்த அமரர் அருட்பணி. விக்ரர் குரூஸ் அடிகளார் (அருட்பணி. ஏ. சேவியர் குரூஸ் அடிகளாரின் சகோதரர்) (2013) இறைபதம் அடைந்த 6ஆம் ஆண்டு நிறைவு யூலை 4ஆம் திகதி ஆகும். அமரர் அருட்பணி. ஜீவனதாஸ் பெர்னாண்டோ (அமதி) அடிகளார் (2019) இறைபதம் எய்திய 41ஆம் நாள் நிறைவு ஏப்ரல் 16ஆம் திகதி ஆகும். இறைபதம் சேர்ந்த அருட்பணியாளர்களுக்காக இத்தினங்களில் சிறப்பாக வேண்டிக்கொள்வோம்.●

# மன்னார் மறைமாவட்ட இளைப்பாறிய குருக்களுக்கான இல்லம், சுவிஸ் ஆன்மீகப் பணியகத்தின் நிதியுதவியில் ஏற்பாடு



கடந்த வைகாசி மாதம் 31ஆம் திகதி மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்கள் குருக்களுக்கான இளைப்பாறும் இல்லத்தினை அமைப்பதற்காக அடிக்கல் வைத்து வேலைகளை ஆரம்பித்து வைத்தார். இதற்கான அன்பளிப்புக்களை தாராள உள்ளத்தோடு வழங்கவுள்ள அனைத்து நல் உள்ளங்களுக்கும் சிறப்பாக சுவிஸ் ஆன்மீக பணியகத்திற்கும் மன்னார் மறைமாவட்டம் சார்பாக மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றோம்.

மன்னார் மறைமாவட்டத்தில் மூத்த குருக்களுக்கான இளைப்பாறும் இல்லம் நெடுங்காலத் தேவையாக இருந்துவருகின்றது. ஆகவே மன்னார் மறைமாவட்ட ஆயர் சுவிஸ் ஆன்மீகப் பணியகத்தின் இயக்குனர் அருட்பணி. டக்ளஸ் மில்ரன் லோகு மற்றும் சுவிஸ் ஆன்மீகப் பணியக சபையோடு இணைந்து மேற்கொள்ளவிருக்கும் இம் முயற்சியை மறைமாவட்டம் ரீதியாகப் பாராட்டுகின்றோம்.●

## உண்மை உறைக்கும் கமிலஸ்




(நன்றி - தி மெசஞ்சர்)

மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# உறுதிப்பூசுதல் கொண்டாட்ட நிகழ்வுகள்

## கனகராயன்குளம்
### புனித அந்தோனியார் ஆலயம்



கனகராயன்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் கடந்த 19ஆம் திகதி சனிக்கிழமை அன்று 67 பிள்ளைகளுக்கு மறைமாவட்ட ஆயர் மேன்மை தங்கிய இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களால் உறுதிப்பூசுதல் திருவருட்சாதனம் வழங்கப்பட்டது. திருத்தந்தையின் பிரதிநிதி, அவரின் செயலர், மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை, அருட்பணியாளர்கள் ஒல்பன் இராஜசிங்கம், லக்ஸ்ரன் டி சில்வா, அந்தோனிமுத்து, வென்ஸஸ்லொஸ், ஸ்ரனிஸ்லொஸ், மரியதாஸ், நிக்ளஸ் ஆகியோரும் பிரசன்னமாக இருந்தனர். பங்குத்தந்தை அருட்பணி. யேசுராசா ஜெரால்ட் அடிகளார் வழிபாடுகளை சிறப்பாக ஒழுங்குபடுத்தியிருந்தார்.●

## செட்டிகுளம்
### புனித அந்தோனியார் ஆலயம்



கடந்த 19 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு செட்டிகுளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் 31 மாணவ மாணவிகளுக்கு மன்னார் மறைமாவட்ட ஆயரினால் உறுதிப்பூசுதல் திருவருட்சாதனம் வழங்கப்பட்டது. அருட்பணியாளர்கள் ஒல்பன் இராஜசிங்கம், நிக்ளஸ், பங்குத்தந்தை செபமாலை, உதவிப்பங்குத்தந்தை சதாஸ்கர் ஆகியோரும் இத்திருப்பலியில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். ●

## ஓமந்தை
### புனித பத்திமா ஆலயம்





எம் மறைமாவட்ட ஆயர் அவர்கள் ஓமந்தைப் பங்கை கடந்த 02.06.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று தரிசித்தார். அவர் புதியசின்னக்குளம் புனித பற்றிமா ஆலயத்தில் காலை 7.45 மணிக்கு 50 மாணவ மாணவிகளுக்கு உறுதிப்பூசுதல் திருவருட்சாதனம் வழங்கிவைத்தார். ஆயருடன் சிறப்புத் திருப்பலியில் மன்னார் மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. லக்கோன்ஸ் பிகறாடோ, அருட்பணி. விமல் அமதி, அருட்பணி. நீக்ளஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர். ஓமந்தை புனித வேளாங்கண்ணி ஆலயம், பணிக்கர் புளியங்குளம் புனித அந்தோனியார் ஆலயம் ஆகிய இடங்களையும் தரிசித்தார்.●

## பள்ளிமுனை புனித லூசியா ஆலயம்



பள்ளிமுனை புனித லூசியா ஆலயத்தில் கடந்த 18.05.2019 அன்று உறுதிப்பூசுதல் திருவருட்சாதனக் கொண்டாட்டம் நடைபெற்றது.●

## பம்பைமடு
### இறை இரக்க திருத்தலம்





பம்பைமடு இறை இரக்க ஆண்டவர் ஆலயத்தில் கடந்த 01.06.2019 சனிக்கிழமை அன்று 37 மாணவ மாணவிகளுக்கு உறுதிப்பூசுதல் என்னும் அருட்சாதனம் மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்களினால் வழங்கப்பட்டது. அருட்பணியாளர்கள் வவுனியா மறைக்கோட்ட முதல்வர் இராஜநாயகம், பங்குத்தந்தை றெஜினோல்ட், வரோட் நிறுவனத்தின் குழுமத்தலைவர் சீலன், வரோட் இணை இயக்குனர் ஜெகன், வறோட் இணை இயக்குனர் றொனால்ட் ஆகியோரும் திருப்பலியில் இனைந்து சிறப்பித்திருந்தார்கள்.●

## விடத்தல்தீவு புனித மரியன்னை ஆலயம்



விடத்தல்தீவு புனித மரியன்னை ஆலயத்தில் கடந்த 26.05.2019 அன்று உறுதிப்பூசுதல் திருவருட்சாதனக் கொண்டாட்டம் நடைபெற்றது.●

### பொதுநிலையினர் அருட்பணி மையத்தின் நுழைவாயிலில்
## புனிதரின் திருச்சுரூபம் ஸ்தாபிக்கப்பட்டது.



மன்னார் மறைமாவட்ட புனித யோசேவ்வாஸ் பொதுநிலையினர் அருட்பணி மையத்தின் நுழைவாயிலில் இலங்கையின் திருத்தூதரான புனித யோசேவ்வாஸ் அடிகளாரின் திருவுருவம் 09.06.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி பிடெலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது.

➡ 13

## கொழும்பு உயர் மறைமாவட்டத்திற்கு பத்து புதிய குருக்கள்



கடந்த 02.06.2019 அன்று கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் பத்துத் தியாக்கோன்கள் குருக்களாக அபிஷேகம் செய்யப்பட்டனர். புதிய குருக்களை மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றது.●

### கணேசபுரம் வைகறை இளம் பெண்களுக்கான
## பயிலகத்தில் சான்றுதல் வழங்கும் நிகழ்வு





கடந்த 30.03.2019 அன்று வவுனியா கணேசபுரம் வைகறை நல்லாயன் இல்லத்தில் இளம் பெண்களுக்கான சான்றுதல்கள் வழங்கும் நிகழ்வு மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்விலே நல்லாயன் துறவறசபையின் இலங்கைக்கான முதல்வி அருட்சகோதரி. பிரான்சின் முத்துகல பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்தார். இன்னும் ஏராளமான இளம் உள்ளங்கள் இப்பயிலகத்தில் பயிற்சிபெற்று பயன்பெற வாழ்த்துகின்றோம்.●

## சமாதான நீதவானாக நியமனம்
### திரு. அலஸ் செபஸ்தியாம்பிள்ளை



நானாட்டான் வஞ்சியன்குளத்தைச் சேர்ந்த திரு. அலஸ் செபஸ்தியாம்பிள்ளை 09.05.2019ஆம் திகதி மாவட்ட நீதிமன்ற நீதவான் உயர்திரு. ரி. சரவணராஜா அவர்கள் முன்னிலையில் இலங்கைத் தீவு முழுவதற்குமான சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

➡ 13


## புத்தக வெளியீடுகள்

### மன்னார் முருங்கன் ஜெயாபாலாஜியின் "தலைப்பிரசவம்"




மன்னாப் பத்திரிகையின் எழுத்தாளர் பட்டியலில் பல ஆண்டுகள் அனுபவம் வாய்ந்த திருமதி. ஜெயாபாலாஜி அவர்களின் "தலைப்பிரசவம்" கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை 01.06.2019 அன்று நானாட்டான் கலாசார மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இக்கவிதை நூலில் 35 கவிதைகள் மன்னா பத்திரிகையில் வெளிவந்த கவிதைகள் என தெரிவிப்பதில் மன்னா மகிழ்ச்சியடைகின்றது.●

### கற்கிடந்தகுளம் ச. யேசுதாசனின் "கிளிநொச்சி மாவட்ட அரங்க மரபு"




மன்னார் மாவட்டத்தின் கற்கிடந்தகுளம் கிராமத்தைச் சேர்ந்த திரு.ச.யேசுதாசன் அவர்களின் "கிளிநொச்சி மாவட்ட அரங்க மரபு" புத்தக வெளியீடு கடந்த 11.04.2019 அன்று கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இவர் சிலுவைதரும் நம்பிக்கை, சற்பிரசாத வாசாப்பு, துளிர், பூநகரிக் கூத்துக்கலைக் காவலர்கள் எனும் நூல்களையும் வெளியிட்டுள்ளார். ➡ 13

## உலகத் திருச்சபைச் செய்திகள்

# உலக சுற்றுச்சூழல் தினத்திற்கான திருத்தந்தையின் செய்தி

"நமது மூச்சாக விளங்குவது பூமியின் காற்று மற்றும் நமக்குப் புத்துயிர் வழங்கி நம்மை கட்டியெழுப்புவது அதன் நீர் என்பதை இன்று நினைவுகூர்ந்து இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம்"

யூன் 05ஆம் திகதி சுற்றுச்சூழல் உலக நாள் சிறப்பிக்கப்பட்டதையொட்டி காற்று, நீர், மற்றும் இயற்கையின் அனைத்து கூறுகளையும் நமது உடல் கொண்டுள்ளது என்பதை நினைவுறுத்தும் வண்ணம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் டுவிட்டர் செய்தியை வெளியிட்டுள்ளார்.

"நமது உடல், பூமிக்கோளத்தின் கூறுகள் அனைத்தையும் கொண்டுள்ளது என்பதையும் நமது மூச்சாக விளங்குவது அதன் காற்று. மற்றும் நமக்குப் புத்துயிர் வழங்கி நம்மை கட்டியெழுப்புவது அதன் நீர் என்பதையும் நாம் இன்று நினைவுகூர்ந்து இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம்" என்ற சொற்கள் திருத்தந்தையின் டுவிட்டர் செய்தியில் இடம்பெற்றன.

ஒவ்வோர் ஆண்டும் யூன் 5ஆம் திகதி சுற்றுச்சூழல் உலக நாளை சிறப்பிக்கும் தீர்மானம் 1972ஆம் ஆண்டு ஐ.நா. அவையால் பரிந்துரைக்கப்பட்டது. 1974ஆம் ஆண்டு "ஒரே ஒரு பூமிக்கோளம்" (Only one Earth) என்ற மையக்கருத்துடன் சுற்றுச்சூழல் உலக நாள் முதல் முறையாக சிறப்பிக்கப்பட்டது. 2018ஆம் ஆண்டு Beat Plastic Pollution என்ற மையக்கருத்துடன் சிறப்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் உலக நாளை இந்தியா முன்னின்று நடத்தியது. "காற்று மாசுபாட்டை வெல்க" (Beat Air Pollution) என்ற



மையக்கருத்துடன் இவ்வாண்டு சிறப்பிக்கப்பட்ட 46வது சுற்றுச்சூழல் உலக நாளை முன்னின்று நடத்தும் பொறுப்பு சீனாவுக்கு வழங்கப்பட்டது. இவ்வாண்டின் மையக்கருத்தையும், 'இறைவா உமக்கே புகழ்' என்ற திருமடலையும் (Beat Air Pollution, Laudato Si) திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் டுவிட்டர் செய்தியுடன் இணைத்து வெளியிட்டுள்ளார்.●

# FAO பன்னாட்டு கருத்தரங்கிற்கு

### – திருத்தந்தையின் செய்தி –



குடும்பங்கள் வேளாண்மையில் ஈடுபடும்போது அங்கு பெண்களின் பங்களிப்பு கூடுகின்றது என்பதையும் பெண்களின் அறிவுத்திறன் பல பிரச்சனைகளைத் தீர்க்கும் என்பதையும் திருத்தந்தையின் செய்தி உணர்த்துகின்றது. உறவுகளின் வலைத்தளத்தால் உருவாகும் குடும்பம் மற்றவர்களோடும் நம்மைச் சுற்றியுள்ள உலகோடும் எவ்வாறு வாழ்வது என்பதைச் சொல்லித் தருகின்றது என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பன்னாட்டு கருத்தரங்கிற்கு அனுப்பிய செய்தியில் கூறியுள்ளார்.

➡ 13

# நம் ஒன்றிப்பின் வழியாக சான்று பகர்வோமாக

### – திருத்தந்தை பிரான்சிஸ் –



தொடக்க காலத்திலிருந்தே திருஅவையானது ஓர் ஆன்மீகக் கூட்டுறவாகவும், இறைமக்கள் சமூகமாகவும் இருந்து வருவதைக் காண்கின்றோம் என்று கடந்த 12.06.2019 அன்று திருத்தந்தை பிரான்சிஸ் உரோம் நகரில் புனித பேதுரு வளாகத்தில் கூடியிருந்த திருப்பயணிகளுக்கு மறைக்கல்வியுரை ஆற்றினார். முதலில் திருத்தூதர்பணிகள் நூல் முதலாம் அதிகாரத்திலிருந்து ஒரு பகுதி பல்வேறு மொழிகளில் வாசிக்கப்பட திருத்தந்தையும் தன் மறைக்கல்வியுரையைத் தொடர்ந்தார்.

➡ 13

# குழந்தைகளின் கனவுகாணும் திறனை களவாடக்கூடாது

யூன் 12ஆம் திகதி குழந்தைத் தொழிலை எதிர்க்கும் உலக நாள் சிறப்பிக்கப்பட்டதையொட்டி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் குழந்தைகளின் கனவுகளைக் களவாடவேண்டாம், சிதைக்கவேண்டாம் என்று தன் டுவிட்டர் செய்தியில் பதிவுசெய்துள்ளார். "குழந்தைகளின் கனவுகாணும் திறனை வயதில் வளர்ந்த நாம் களவாடக்கூடாது. அவர்களது கனவுகளை வளர்த்து அவற்றைப் பகிர்ந்துகொள்ளும் நம்பிக்கை நிறைந்த ஒரு சூழலை பேணிக்காக்க நாம் முயற்சி செய்வோமாக. பகிர்ந்துகொள்ளப்படும் கனவு புதிய வாழ்வை நோக்கிய பாதையைத் திறந்துவிடுகின்றது" என்ற சொற்களை திருத்தந்தை தன் டுவிட்டர் செய்தியாக வெளியிட்டிருந்தார். @pontifex என்ற டுவிட்டர் முகவரியில் ஒவ்வொரு நாளும் 9 மொழிகளில் தன் கருத்துக்களைப் பதிவு செய்துவரும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 'குழந்தைத் தொழில் வேண்டாம் நாள்" (No Child Labour Day) யூன் 12ஆம் திகதிக்குரிய டுவிட்டர் செய்தியை பதிவு செய்திருந்தார்.

ஐந்து வயதுக்கும், 17 வயதுக்கும் இடைப்பட்ட பருவத்தைச் சேர்ந்த 15 கோடியே 20 இலட்சம் குழந்தைகளும், வளர் இளம் பருவத்தினரும், தொழில் செய்யும் கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என்று ஐ.நா.வின் குழந்தைகள் நல அமைப்பான யூனிசெப் (Unicef) அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. 2025ஆம் ஆண்டுக்குள் உலகெங்கும் குழந்தைத் தொழில் முற்றிலும் நீக்கப்படவேண்டும் என்ற இலக்கை ஐ.நா.



அவை முன்மொழிந்துள்ள போதிலும் 2008ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டு வரை குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 1வீதம் மட்டுமே குறைந்துள்ளது என்பதையும் யூனிசெப் அமைப்பு கூறியுள்ளது. வறுமை ஒழிப்பு, கல்வி வசதி என்ற இரு திட்டங்களில் உலக அரசுகள் தகுதியான நிதி ஒதுக்கீடு செய்வதால் மட்டுமே உலகில் குழந்தைத் தொழிலை நீக்கமுடியும் என்று Save the Children உலக அமைப்பின் சார்பாக வத்திக்கான் செய்திக்கு பேட்டியளித்த திருவாளர் Filippo Ungaro அவர்கள் கூறினார்.●

# திருச்சட்டத்தைத் தாண்டி அன்பின் சட்டம் உள்ளது

சட்டங்களைக் காப்பதும் அவற்றைக் கடைப்பிடிப்பதும் திருஅவை அதிகாரிகளின் முக்கிய கடமை என்றாலும், இச்சட்டங்கள் அனைத்துமே அன்புச் சட்டத்தின் கீழ் செயல்வடிவம் பெறவேண்டும். திருச்சட்டத்தையோ, இறைவாக்குகளையோ அழிப்பது குறித்தும், நிறைவேற்றுவது குறித்தும் நற்செய்தியில் கூறப்பட்டுள்ள கருத்து திருத்தந்தையின் பிரதிநிதிகளாக உலகெங்கும் பணியாற்றுவோருக்கு வழிகாட்டும் கருத்தாக அமைந்துள்ளது என்று வத்திக்கான் உயர் அதிகாரி வழங்கிய மறையுரையில் கூறினார்.

திருத்தந்தையின் பிரதிநிதிகளாக உலகெங்கும் பணியாற்றுவோருக்கு யூன் 12ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை வத்திக்கானில் நடைபெறும் கூட்டத்தின் தொடக்கத் திருப்பலியை புனித பேதுரு பசிலிக்காவில் நிறைவேற்றிய திருப்பீடச் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்கள் தன் மறையுரையில் இவ்வாறு கூறினார். மோசே வழங்கிய சட்டத்தைக் குறித்து இரு வாசகங்களும் பேசுகின்றன என்பதை (2கொரி. 3:4-11 மத். 5:17-19) தன் மறையுரையின் தொடக்கத்தில் குறிப்பிட்ட கர்தினால் பரோலின் அவர்கள் சட்டங்களைக் குறித்த விவாதங்கள் திருஅவையின் வரலாற்றில் தொடக்கத்திலிருந்தே நிலவி வருகின்றது என்பதை எடுத்துரைத்தார். திருச்சட்டத்தின் ஒரு சிற்றெழுத்தையோ, புள்ளியையோ மாற்றாமல் நிறைவேற்ற தான் வந்துள்ளதாகக் கூறும் இயேசு ஒய்வுநாள் சட்டத்தை மீறியதையும் காண்கின்றோம் என்பதை தன் மறையுரையில் சுட்டிக்காட்டிய கர்தினால் அவர்கள் திருச்சட்டத்தைத் தாண்டி அன்பின் சட்டம் ஒன்று உள்ளது என்பதை இயேசு இவ்வுலகில் நிலைநாட்டினார் என்று எடுத்துரைத்தார். திருத்தந்தையின் பிரதிநிதிகள் என்ற முறையில் திருஅவை சட்டங்கள் மற்றும் உலக அரசுகளின் சட்டங்கள் ஆகியவற்றுடன் நாம் கொண்டுள்ள உறவை இரு வழிகளில் காணலாம் என்பதை கர்தினால் அவர்கள் குறிப்பிட்டுப் பேசினார். சட்டங்களைக் காப்பதும், அவற்றைக் கடைப்பிடிப்பதும் திருஅவை அதிகாரிகளின் முக்கிய கடமை என்றாலும், இச்சட்டங்கள் அனைத்துமே அன்புச் சட்டத்தின் கீழ் செயல் வடிவம் பெறவேண்டும் என்பதை கர்தினால் அவர்கள் தன் மறையுரையில் வலியுறுத்திக் கூறினார்.

➡ 13

# பிறருக்கு இலவசமாகப் பணியாற்றுங்கள்

### – திருத்தந்தை பிரான்சிஸ் –

கடவுளோடு நமக்குள்ள உறவு முற்றிலும் இலவசமானது. எனவே அவரின் அருளைப் பெறுவதற்கு நம் இதயங்களைத் திறந்து வைத்திருக்க வேண்டியது அவசியம். கடவுள் உங்களை இலவசமாக அன்புகூர்வது போன்று நீங்களும் பிறருக்கு இலவசமாகப் பணியாற்றுங்கள் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மறையுரையாற்றினார். திருத்தூதர் புனித பர்னபாவின் திருவிழாவாகிய யூன் 11ஆம் திகதி காலையில் வத்திக்கானின் சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் நிறைவேற்றிய திருப்பலியில் இயேசு திருத்தூதர்களை மறைப்பணியாற்ற அனுப்பியது பற்றிய மத்தேயு நற்செய்திப் பகுதியை (மத்.10,7-13) மையப்படுத்தி ஆற்றிய மறையுரையில் இவ்வாறு கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கடவுளோடு நமக்குள்ள உறவு முற்றிலும் இலவசமானது. எனவேஅவரின் அருளைப் பெறுவதற்கு நம் இதயங்களைத் திறந்து வைத்திருக்க வேண்டியது அவசியம் என்றுரைத்த திருத்தந்தை கடவுள் நம்மை அன்புகூர்வது போன்று நாமும் நம் சகோதரர், சகோதரிகளுக்குப் பணிவிடை புரியவும் அவர்களை அன்பு செய்யவும் அழைக்கப்பட்டுள்ளோம் என்று கூறினார். "விண்ணரசு நெருங்கி



வந்துவிட்டது எனப் பறைசாற்றுங்கள், நலம் குன்றியவர்களைக் குணமாக்குங்கள், இறந்தோரை உயிர் பெற்றெழச் செய்யுங்கள், தொழுநோயாளரை நலமாக்குங்கள், பேய்களை ஓட்டுங்கள்" என்ற மறைப்பணியை இயேசு நம்மிடம் ஏற்கனவே கொடுத்துள்ளார் என்றும் திருத்தந்தை கூறினார்.

➡ 13

# திருத்தந்தையின் றுமேனியா பயணம்



"எல்லாவற்றிலும் ஊடுருவும் மற்றும் மீட்பின் மகிழ்வோடு நாம் மக்களை நிரப்பும் புளிக்காரமாக நற்செய்தியை விளங்கச் செய்வதற்கு நாம் ஒன்றிணைந்து நடை பயில்வோம்." என்ற இலக்கோடு திருத்தந்தை அவர்கள் கடந்த மே மாதம் 31ஆம் திகதி காலை றுமேனியா நாட்டிற்கான தனது முதல் பயணத்தையும் உலக நாடுகளிற்கான பயணங்களின் முப்பதாவது திருத்தூதுப் பயணத்தையும் ஆரம்பித்தார். இத்திருத்தூதுப் பயணத்தில் பன்னாட்டு ஊடகவியலாளர்களும் திருத்தந்தையுடன் இணைந்து பயணித்தனர். அதில் ஹங்கேரி நாட்டு ஊடகவியலாளர் ஹங்கேரி நாட்டு தேசிய கால்பந்தாட்ட விளையாட்டுச் சட்டையில் "Francesco" எனப்பதித்து திருத்தந்தைக்கு அளித்தார். மேலும் கர்தினால் Luliu Hossu அவர்களின் நினைவாக நூல் ஒன்றை றுமேனியா நாட்டில் ஊடகவியலாளர்கள் வழங்கிய அதேவேளை கர்தினால் Hossu உட்பட ஏழு ஆயர்களை அருளாளர்களாக திருத்தந்தை அறிவிப்பார் எனவும் குறிப்பிட்டனர்.

➡ 13

புதுப்பித்தல் ஆண்டு சிறப்புக் கட்டுரைகள்

# புதுப்பித்தல் ஆண்டு – ‘சரியான பொருத்தம்’

அருட்சகோ. S. அருள்தாஸ் குரூஸ்,
புனித சவேரியார் குருமடம், யாழ்ப்பாணம்.



## முகவுரை

திருஅவையிலே அதிகூடிய பக்தர்களின் வணக்கத்துக்குரிய இடத்தை கோடி அற்புதரான புனித அந்தோனியாரும், திருஅவையின் பாதுகாவலருமாகிய புனித செபஸ்தியாரும் பெறுகின்றனர். இந்த இருவருக்கும் பக்தர்கள் கோடி. அவ்வளவு புதுமைகள்! ஆனால் இன்று இவர்களுக்கும் ஆயுதம் ஏந்திய படையினரின் பாதுகாப்பு. இப்படி ஒரு நிர்க்கதியான நிலையில் இருக்கின்றது. இலங்கைத் திருஅவை கடந்த உயிர்த்த ஞாயிறு அன்று கட்டவிழ்த்து விடப்பட்ட பயங்கரவாதத்தால் பல்வேறு சவால்களுக்கும், சோதனைகளுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளதென்பது எல்லோரும் அறிந்த ஒன்று. ஆனால் பல உயிர்களை பறித்தும் பசி அடங்காமல் மதத்தின் போர்வையால் பழிவாங்க துடிக்கும் கயவர்களின் மத்தியில்தான் இன்னமும் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். ஆகவே இந்தக் காலகட்டத்தில் எம் கிறிஸ்தவ வரலாற்றை சிறிது பின்னோக்கி படித்தால், ஒரு ஆழமான புரிதலும், தெளிதலும் கிடைக்கப்பெறும். அந்தத் தெளிவில் எம்மையும் எம் மறைமாவட்டத்தையும் புதுப்பித்து அதன்மூலம் இலங்கைத் திருஅவையையும் புதிதாக்குவோம்.

## வேதகலாபனையோடே வளர்க்கப்பட்ட நம்பிக்கை

பெந்தக்கோஸ்து அனுபவத்திற்குப் பின்னர் சிதறுண்டு வாழ்ந்த கிறிஸ்தவர்கள் பலவாறு மன்னர்களால் சித்திரவதைக்கும், வேதகலாபனைகளுக்கும் உட்படுத்தப்பட்டனர். ஆகவே தொடக்கத்திலிருந்தே கிறிஸ்தவ சமயம் பல துன்புறுத்தல்கள் வழியாக மிகப்பெரிய விருட்சமாக வளர்ந்திருப்பதை நாம் காணலாம். எம் தலையாகிய கிறீஸ்து எவ்வாறு துன்புறுத்தப்பட்டு சிலுவையில் அறையப்பட்டு, கொல்லப்பட்டாரோ அவரின் மறை உடலாகிய திருஅவையும் பலவாறு துன்புறுத்தப்படும் என்று கிறிஸ்து முன்னறிவித்திருக்கின்றார். “என் பொருட்டு உங்களை பலவாறு துன்பப்படுத்துவர்”. மத் 10:18-22, 24:9 அந்த வகையில் எல்லா அப்போஸ்தலர்களும் இயேசுவுக்காக மறைசாட்சியாக மரித்தனர். குறிப்பாக அதிகார பூர்வமான கலாபனை என்று சொல்லப்படும் கி.பி. 54-68 இல் நீரோ பேரரசன் காலப்பகுதியில், பொதுமக்கள் மத்தியில் தான் நன்மதிப்பு பெற கிறிஸ்தவர்கள் மீது பொய் குற்றம் சுமத்தி அவர்களை சித்திரவதை செய்தார்கள். அதற்காக தன் அரண்மனை தோட்டத்தையே பயன்படுத்தினான். திருத்தூதர்களான பேதுருவையும், பவுலையும் தலைகீழாக சிலுவையில் அறைந்தும், சிறைச்சேதம் செய்தும் துன்புறுத்தினான். ஆகவே இவர்கள் மரித்ததோடு கிறிஸ்தவம் அழிந்துவிட்டதா? இல்லை மாறாக புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்தில் கூறுவதுபோல “நாங்கள் எல்லாச் சூழ்நிலைகளிலும் இன்னலுற்றாலும் மனம் உடைந்து போவதில்லை. துன்புறுத்தப்பட்டாலும் கைவிடப்படுவதில்லை. வீழ்த்தப்பட்டாலும் அழிந்து போவதில்லை” 2கொரி 4:8-10 என்று இவர்களின் இரத்த சாட்சியத்தில் இன்னும் ஆழமாக வேரூன்றியது. 2000 ஆண்டுகள் கிறிஸ்தவ வரலாற்றில் 7 கோடி நம்பிக்கையாளர்கள் கிறிஸ்துவுக்காக மரித்துள்ளனர். இதைத்தான் தெர்த்தூலியன் கூறுவார் “மறைசாட்சியரின் இரத்தமே திரு அவையின் விதையாகும்.” ஆகவே இந்தக் காலகட்டத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் ஒரு முன்மாதிரிகையான வாழ்க்கை முறையை வாழ்ந்து சென்றிருக்கின்றனர். அதுதான் திருப்பணி நூலில் நாம் காணும் நம்பிக்கை கொண்டவர்களின் வாழ்க்கை முறையாகும். எந்தச் சூழ்நிலையிலும் ஒன்றாயிருந்து தாம் பெற்றுக்கொண்ட நம்பிக்கையின் அடிப்படையின் தம் வாழ்வை சிறப்பாக மாற்றினர்.

## ஈழத்து மறைசாட்சியம்:

போர்த்துக்கேயரினால் 1505இல் கொண்டுவரப்பட்ட கிறிஸ்தவம் பின்னர் வந்த மதக் கொள்கையினால் அழிந்து போகின்ற தருணத்தில் அதனை மீளவும் புதுப்பித்து அதற்கு நீர் பாய்ச்ச 1687இல் இந்தியாவில் இருந்து இலங்கைதேசம் வந்தவர்தான் புனித யோசேவ்வாஸ். அவர் இங்கு வந்தபோது அவருக்கிருந்த சோதனைகளும், துன்பங்களும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாதவை. வெளிப்படையாக கிறிஸ்தவ சமயத்தை பின்பற்றமுடியாத நிலைமை. ஆலயங்கள் இல்லை, வழிபாடுகள் இல்லை, திருப்பலிகள் இல்லை. பின்னர் எப்படித்தான் தனி ஒரு மனிதரால் கிறிஸ்தவம் எம் நாட்டில் வளர்க்கப்பட்டது.

‘சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும்’ என்பதற்கமைய, இது எம் முன்னோர்கள் கொண்டிருந்த ஆழமான நம்பிக்கையை எடுத்துக் காட்டுகின்றது. இந்த நம்பிக்கையினை இன்னமும் ஆழப்படுத்தி கிறிஸ்துவுக்காக மன்னாரிலும், யாழ்ப்பாணத்திலும் மறைசாட்சியாக மரித்து, தங்களின் இரத்தத்தினால் எம் திரு அவையை நிலைநிறுத்தியிருக்கின்றார்கள் எம் முன்னோர்கள். இவர்களும் ஆதிக் கிறிஸ்தவர்கள் கொண்டிருந்த அதே நம்பிக்கை கொண்டோரின் வாழ்க்கை முறையினை வாழ்ந்து காட்டியிருக்கின்றனர். ஆகவே இனியும் என்ன செய்ய போகின்றோம்.

## ஆழமான புரிதல் அவசியம்

நாம் வாழும் பிரதேசங்களிலும், சூழலிலும் இப்படியானதொரு நிலைமைதான் இன்றும் காணப்படுகின்றது. ஆனால் நம்பிக்கை கொண்ட கிறிஸ்தவர்கள் என்று சொல்லும் எம்மவர்களின் நிலைமையோ இன்னும் கவலைக்கிடமாகவே உள்ளது. ஆலயங்களுக்குச் செல்வதற்கு பயம் ஒரு புறம், பாதுகாப்பின்மை மறுபுறம் என்ற காரணங்களைக் காட்டி இன்னும் கிறிஸ்துவில் இருந்து தொலைதூரம் சென்று கொண்டிருக்கின்றோம். சரி ஆலயங்களுக்குத்தான் செல்ல முடியவில்லை. வீட்டிலாவது குடும்ப செபமாலை பிள்ளைகளுக்குரிய மறைக்கல்வி வழங்கப்படுமா என்று பார்த்தால்? பிள்ளைகளை முந்தி நிற்கும் பெற்றோர்களின் தொடர் நாடகங்களும், பெற்றோர்களை பின்தள்ளும் பிள்ளைகளின் அதி நவீன நாகரிக நுகர்வுக் கலாசாரமும் கிறிஸ்துவையும், கிறிஸ்தவத்தையும் ஆலயங்களில் உள்ள கண்ணாடி பேழைக்குள் தள்ளி விடுகின்றது. ஆகவே காலங்களுக்கூடாகப் பேசும் இறைவன் இந்தச் சூழ்நிலையில் நமக்குச் சொல்ல விளைவது என்ன?

## புதுப்பித்தல் தேவையானதொன்று

‘எம்மை புதுப்பித்து வாழ்வோம்’ இதுவே இறைவன் நமக்கு விடுக்கும் அழைப்பு. ஆதிக் கிறிஸ்தவர்கள் புனித யோசேவ்வாஸ் காலத்து எம் முன்னோர்கள் வாழ்ந்த அதே வாழ்க்கை முறையை அவர்கள் கிறிஸ்துவின் மட்டில் கொண்ட நம்பிக்கையிலான வாழ்க்கை முறையை வாழ அழைப்பு விடுக்கின்றார். குடும்பங்களில், அயலவர்களில், அன்பியங்களில் எமது வாழ்க்கை முறையை கட்டியெழுப்ப இதுவே தகுந்த காலமாய் அமைந்துள்ளது. தி.ப. 2: 42-47 இல் காணப்படும் நம்பிக்கை கொண்டோரின் வாழ்க்கை முறையை பின்பற்றி அனைவரும் ஒன்றாய் இருக்கவும் இல்லாதவர்களோடு இருப்பதைப் பகிர்ந்து கொள்ளவும், நாள்தோறும் இறைவேண்டலில் ஒரே மனத்தோடு ஈடுபடவும், கடவுளைப் போற்றிப் புகழவும், இறுதியாக எல்லா மக்களின் நல்லெண்ணத்தையும் பெற்று ஒரு முன்மாதிரியான வாழ்க்கை முறையை வாழ முற்படுவோம். நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையை காரணம் காட்டி கிறிஸ்துவை விட்டு தூரம் செல்லாமல் புதுப்பிக்கப்பட்ட மனிதர்களாக எமது மறைமாவட்டம் தந்திருக்கும் இந்தப் புதுப்பித்தல் ஆண்டை பயனுள்ளதாக்க காலங்களுக்கூடே பேசும் இறைவன் குரல் கேட்டு, ஆதிக் கிறிஸ்தவ வாழ்க்கை முறையை எம் வாழ்வாக்குவோம். அதனூடே எம் முழு மறைமாவட்டமும் புதுப்பித்தலைக் காணச் செய்வோம். ●

# இன்றைய கல்வியும் பெற்றோரின் ஈடுபாடும்

“எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே, அவர் நல்லவராவதும், தீயவராவதும் அன்னை வளர்ப்பதிலே…” என்கின்றது புலமைப்பித்தன் பாடல். “தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தி யிருப்பச் செயல்” என்கிறது வள்ளுவரின் குறள்.

நல்லவராய், அவையத்து முந்தியிருப்பதில் வல்லவராய் தம் குழந்தைகளை உருவாக்க நினைக்கும் பெற்றோர், எதிர்கால வெற்றி குறித்த தம் குழந்தையின் மன உணர்வின் மீது வலிமையான தாக்கம் கொண்டு தம் கருவூலத்தைக் கரைத்தேனும் தரமான கல்வியைத் தம் பிள்ளைகளுக்குத்தர தவிக்கின்றனர்.

## தரமான கல்வியின் மாண்பு

அறிவு, அனுபவம், ஆற்றல் ஆகியவற்றின் தொகுப்பே கல்வி. ஒருவரை மற்றவர்களிடமிருந்து தனித்துவம் மிக்கவராக, நுட்பமாகச் சிந்தித்துச் செயலாற்றும் அறிவுடையவராக மற்றவர்களுக்கு வழிகாட்டி தானும் நல்வழி நடக்கும் மாமனிதராக, இவ்வுலகையே தமதாக்கி ஆன்மாவையும் ஆதாயமாக்க வல்ல புனிதமாக வாழ மாற்ற வல்லதே தரமான கல்வி.

## இன்றைய கல்வி நிலை

இன்றைய கல்வி என்பது ‘வெற்றி பெறுதல்’ என்ற நிலைக்குச் சுருங்கி மதிப்பெண் மட்டுமே வெற்றியின் இலக்காக உள்ளது. அரச பாடசாலைகளில் வசதிக்கேற்ப எளிதில் அனைவருக்கும் கல்வி கிடைக்கின்றது. அன்று ஒரு மாணவனின் தரத்தை உரசிப்பார்க்க உரைக்கல்லாகப் பயன்பட்ட பாடசாலை இன்று மாணவர் மனநிலை, ஆசிரியர்களின் உயிர், பணி, பாதுகாப்பு, அரச சட்ட திட்டங்கள் ஆகியவற்றின் காரணமாக மாணவரின் பண்பு, ஒழுக்கங்களில் அதிக கவனஞ் செலுத்த இயலா சூழ்நிலை. போட்டி நிறைந்த உலகில் சாதிக்கத் துடிக்கும் மாணவர் ஒரு புறம் கலாச்சாரத்தில் சரியும் மாணவர் மறுபுறம்.

## பெற்றோரின் கடமை

கல்வியாளராகிய லொக்கி என்பவர் நாம் சந்திக்கின்ற மனிதரில் காணப்படுகின்ற நல்லதோ, கெட்டதோ அனைத்திலும், பத்தில் ஒன்பது பங்கு அவர்களுக்குக் கிடைத்த கல்வியிலும், வளர்ப்பு முறையிலும் இருந்தே வந்திருக்கின்றது’ என்று கூறியுள்ளார். எனவே ஒரு மாணவனுக்கு உலகை ஆதாயமாக்க பாடசாலைக்கல்வி உதவினாலும், அவன் ஆன்மாவை ஆதாயமாக்க அவனது பெற்றோரின் வளர்ப்பு முறையே இன்றியமையாததாகும். தம் குழந்தையின் வெற்றியில் ஆர்வமுடைய பெற்றோர் சிறுபராயக் கல்வி தொடங்கி, உயர் கல்வி வரை பாடசாலையிலும் வெளியுலக வாழ்க்கையிலும் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த தொடக்கத்தை உருவாக்கிக் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

## பெற்றோரே முதல் ஆசிரியர்

நல்ல வழியில் நடக்கப் பிள்ளைகளைப் பழக்கு: முதுமையிலும் அவர் அந்தப் பழக்கத்தை விட்டுவிட மாட்டார். (நீமொ 22:6). பெற்றோரே பிள்ளைகளின் முதல் மற்றும் நல்லொழுக்க ஆசிரியர்கள். கற்றுத் தெரிந்து, கேட்டறிந்து கற்றுக் கொள்வதைவிட மற்றவர்களது வாழ்க்கை முறையைப் பார்த்துக் கற்றுக் கொள்வது பிள்ளைகளிடம் இயல்பாக உள்ளது. ஆகவே யாவரும் வாசித்து அறிந்து கொள்ளும் முறையில் எழுதப்பட்ட நற்சான்று கடிதங்களாக (2கொரி 3:2) பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு எல்லா நற்பண்புகளிலும் சிறந்த முன்மாதிரியாகத் திகழ்தல் சிறப்பு.

தம் பிள்ளைகள் கல்வியில் பல சிகரங்களைத் தொடவும் இறைப்பற்றுடன் கலந்து இறை அச்சத்தில் ஆழமாக வேரூன்றவும் பெற்றோர் கற்றுக்கொடுப்பது மிகவும் சிறப்பாக அமையும். இறையச்சமே ஞானத்தின் தொடக்கம் (நீமொ 9:10). இறையச்சத்தில் வளரும் பிள்ளைகளுக்குக் கல்விச் செல்வத்தையும், தன்னையும், (Know Thyself) இவ்வுலகையும் அறிந்துகொள்ள வேண்டிய ஞானத்தையும் இறைவன் நிறைவாக அருளுகின்றார்.

## பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரின் செபம்

பெற்றோர் தம் பிள்ளைகளுக்குத் தூய ஆவியை அருளும்படி செபிப்பது சிறப்பாக அமையும். (லூக்.11:13).

தூய ஆவியானவர் தானே ஓர் ஆசிரியராக, வழிகாட்டியாக, துணையாளராக இருந்து மாணவர்களுக்கு புரியாதவைகளை எளிமையாகக் கற்றுத்தருவார். “என் பெயரால் தந்தை அனுப்பப் போகின்ற தூய ஆவியாராம் துணையாளர் உங்ளுக்கு அனைத்தையும் கற்றுத்தருவார்” (யோவா. 14:26)

மாணவர் நண்பர் குழுவில் இணைந்து தொலைபேசி, போதைப் பொருள், தனிமை, கோபம், வெறுப்புணர்வு, பழிவாங்குதல் போன்ற தீய பழக்கங்களால் நிலை தடுமாறும்போது நன்மை தீமையை உய்த்துணரும் அறிவை அவர்களில் குடிகொண்டிருக்கும் தூய ஆவியின் வல்லமையால் அவர்கள் பெற்று விடுதலை அடைவர்.

## கல்வியில் பெற்றோர் ஈடுபாடு

கற்றலை குழந்தையுடைய உள்ளத்திலே ஒரு முக்கிய பகுதியாக்குவது, வீட்டிலும் பாடசாலையிலும் படிக்கத் தகுந்த சூழலை ஏற்படுத்துவது, அனைத்து நிகழ்வுகளிலும் (பாடசாலை, சமூக சமய கலை கலாசார நிகழ்வுகள்) பங்கேற்கச் செய்வது இவற்றில் பெற்றோர் அதிகூடிய அக்கறை செலுத்த வேண்டும்.

## பெற்றோர் பிள்ளைகளில் அதிக அக்கறை காட்டுவதால் அடையும் நன்மைகள்

மாணவர் தீய வழிகளை நாடுதல் குறைதல், மாணவரின் தனித்துவமிக்க சாதனைகள், உயர் வகுப்பு மதிப்பெண்களில் அதிக விழுக்காடு, பாடசாலை மற்றும் சமூக நிகழ்வுகளில் ஈடுபடும் வாய்ப்பு, ஓர் ஒளிமயமான எதிர்காலம்.

## பெற்றோரின் ஈடுபாடு மேலோங்க சிறந்த வழிகள்

***1. ஆர்வத்தை விளக்கிக் காட்டுங்கள்***

‘இன்று பள்ளியில் என்ன நடந்தது? எனக் கேட்டு தொடர்ச்சியாக ஓர் உரையாடலை தினமும் மேற்கொள்வது, பிள்ளைகளின் ஆர்வத்தை அறியவும், மாணவர் பெற்றோர் கூட்டு முடிவு செய்யும் கட்டத்தை உருவாக்கவும் உதவும்.

***2. படிக்க நல்ல சூழலை உருவாக்குங்கள்***

வீட்டுப்பாட பணிகளுக்குக் குறுக்கீடுகள் நேராமல், அப்பணிகளில் பெற்றோர் உதவி செய்வது, போசாக்கு உணவு, தேவையான உறக்கம் மற்றும் பொழுதுபோக்குகளுக்கும் உரிய நேரத்தை அமைத்துக் கொடுப்பது சிறந்தது.

3.***பெற்றோர் ஆசிரியர் கூட்டங்களில் கலந்து கொள்ளுங்கள்.***

சிறப்புக் கவனம் தேவைப்படுவோர்க்கு திட்டம் உருவாக்கவும், வகுப்பு மற்றும் பாடசாலையில் என்ன நடக்கின்றது என தகவல் அறியவும் மற்றும் மாணவர் வெற்றிக்கும் இது உதவியாக இருக்கும்.

***4. பாராட்டுங்கள், ஊக்குவியுங்கள், மதிப்பளியுங்கள்***

வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் பிள்ளைகளைப் பாராட்டுங்கள். தனித்திறன்களைக் கண்டறிந்து ஊக்குவியுங்கள். பிள்ளைகளின் கருத்துகளுக்கு மதிப்பளியுங்கள்.

## பெற்றோர் கவனத்திற் கொள்ள வேண்டியவை.

1. பெற்றோரின் சிந்தனைகளையும், விருப்பங்களையும் குழந்தைகள் மேல் திணித்து, அவர்களை தங்கள் கட்டுப்பாட்டில் வைக்க பெற்றோர் முற்படக்கூடாது. அவர்களுக்கென்று சிந்தனைகள், விருப்பங்கள் இருக்கும். எனவே அவர்களை சுதந்திரமாக சிந்தித்து, சுயமாக முடிவெடுக்க பெற்றோர் விட்டுவிடுதல் நல்லது.

2. குழந்தைகள் எப்படி இருக்கின்றார்களோ அப்படியே ஏற்றுக்கொள்வதுதான் உண்மையான அன்பு. மாறாக நெருக்கடி கொடுத்தால் மன உளைச்சலுக்கு ஆளாகி பெற்றோரை வெறுப்பர். “பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்டாதீர்கள். அப்படிச் செய்தால் அவர்கள் மனம் தளர்ந்து போவார்கள்” (கொலோ 3:21)

3. தோல்வியில் தோழமையாக மாறி ஆதரவளியுங்கள். மாறாக சவுல் யோனத்தானிடம் பேசியது போல பேசினால் (1சாமு 20:30) பிள்ளைகளைக் கவர இயலாது.

➡ 13

புனித அந்தோனியாரின் கட்டுரை

# பதுவை நகர் புனிதர் - புனித அந்தோனியார்

## வாழ்க்கை வரலாறு

அந்தோனியார் 1195ஆம் ஆண்டு ஓகஸ்ட் 15ஆம் நாள் போர்த்துக்கல் நாட்டில் உள்ள லிஸ்பன் நகரில் பிறந்தார். பெர்னாடின் என்பதே அந்தோனியாரின் இயல்பெயரும் திருமுழுக்குப் பெயருமாகும். ஆனால் அந்தோனியார் என்பது புனித வனத்து அந்தோனியார்மீது அவர் கொண்ட பற்றினால் அவருக்குச் சூட்டப்பட்டதாகும். இவருடைய தந்தை மார்டின், இவருடைய தாய் தெரசா பயஸ் தவேரா ஆவார்கள். இவருடைய குடும்பம் லிஸ்பனில் அரசராக இருந்த இரண்டாம் அல்போன்சாவுக்கு மிக நெருக்கமான குடும்பம். அந்தோனியார் தன்னுடைய கல்வியை லிஸ்பனில் உள்ள கதீட்ரல் பாடசாலையில் பயின்றார். தன்னுடைய பதினைந்தாவது வயதில் புனித அகுஸ்தினார் சபையில் சேர்ந்து கொயிம்ரா என்னும் குருமடத்தில் இணைந்து குருவாக படிக்கத் தொடங்கினார். இவர் 1219ஆம் ஆண்டு குருவாக அருட்பொழிவு செய்யப்பட்டார்.

ஒருசமயம் மொரோக்கோ நாட்டிற்கு நற்செய்தி அறிவிக்கச் சென்ற புனித பிரான்சிஸ்கன் சபைத் துறவிகள் சிலர் கொல்லப்பட்டு அவர்களுடைய உடலானது அந்தோனியார் இருந்த இடத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இதைப்பார்த்த அந்தோனியார் தானும் பிரான்சிஸ்கன் சபையில் சேர்ந்து மொரோக்கோ நாட்டிற்குச் சென்று அங்கே மறைசாட்சியாக உயிர்துறக்கத் துணிந்தார். அதன்படி இவர் கப்பலில் மொரோக்கோ நாட்டிற்குப் பயணமானார். ஆனால் போகும் வழியில் நோய்வாய்ப்பட்டு நலிவுற்ற நிலைக்குத் தள்ளப்படவே தன்னுடைய சொந்த நாட்டிற்குத் திரும்பவேண்டிய நிலை ஏற்பட்டது. அவர் கப்பலில் திரும்பிக்கொண்டிருந்தபோது கடலில் ஏற்பட்ட புயலின் காரணமாக கப்பல் சிசிலியில் தஞ்சம் அடைந்தது. எனவே அவர் சிசிலியில் தரை இறங்கினார். சிசிலியில்தான் அந்தோனியார் புனித பிரான்சிஸ் அசிசியாரைச் சந்தித்தார். அவருடைய வேண்டுகோளுக்கு இணங்க அவர் அருகே இருந்த ஒரு பங்கில் மறைப்போதகப் பணியை ஆற்றி வந்தார்.

இந்த நேரத்தில் போர்லி என்ற இடத்தில் குருப்பட்டம் நடைபெற்றது. குருப்பட்டத்திற்கு அந்தோனியாரும் சென்றிருந்தார். அந்த குருப்பட்டத்தில் மறையுரை ஆற்றவேண்டிய குருவானவர் வராமல் போகவே சபைத் தலைவர் அந்தோனியாரைக் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவர் மறையுரை ஆற்றத் தொடங்கினார். அவர் மறையுரை ஆற்றுவதைப் பார்த்த மக்கள் கூட்டம் வியப்பில் ஆழ்ந்தது. இறைவார்த்தையை அவர் விளக்கிய விதம் மடைதிரண்ட வெள்ளம்போல அவரிடமிருந்து வந்த வார்த்தைகள் எல்லாவற்றையும் பார்த்தவர்கள் மெய்மறந்து நின்றார்கள். இந்நிகழ்ச்சிக்குப் பிறகு அந்தோனியாருடைய புகழ் எங்கும் பரவியது. அவர் லாம்பர்டி என்ற பகுதி முழுவதும் நற்செய்தி அறிவிக்கப் பணிக்கப்பட்டார். அந்தோனியார் இறைவார்த்தையை விளக்கிய விதத்தைக் கண்டு மக்கள் பல இடங்களிலிருந்தும் அவருடைய போதனையைக் கேட்க வந்தார்கள். அவர் ஆற்றிய புதுமைகள் ஏராளம். இவ்வாறு அந்தோனியார் பல்வேறு இடங்களுக்குச் சென்று மறைபோதகப் பணியைச் செய்ததால் அவருடைய உடல் தளர்வுற்றது. விரைவில் தான் இறக்கப் போவதை உணர்ந்திருந்த அவர் தனது உடலை பதுவை நகருக்கு எடுத்துச் செல்லும்படி தனது சகோதரர்களைக் கேட்டுக்கொண்டார். ஆனால் அவர் அர்செல்லா நகரை அடைந்தபோதே அவருடைய ஆவி இந்த மண்ணுலகை விட்டுப் பிரிந்தது. அவர் இறக்கும்போது அவருக்கு வயது 36. பின்னர் சகோதரர்கள் அவரை பதுவை நகரில் அடக்கம் செய்தார்கள். அந்தோனியார் இறந்த அடுத்த ஆண்டிலேயே அவருக்குப் புனிதர் பட்டம் வழங்கப்பட்டது.

அவர் இறந்து முப்பது ஆண்டுகளின் பின் அதாவது 1263ஆம் ஆண்டு அவரது உடலை இடமாற்றம் செய்ய கல்லறையைத் திறந்துபார்த்தபோது அவருடைய நாவு மட்டும் அழியாமல் இருந்தது. இதைப் பார்த்த பொனவெந்தூர் ***“ஓ பரிசுத்த நாவே நீ எப்போதும் இறைவனைப் போற்றி புகழ்ந்ததால் அழியாமல் காக்கப்பட்டாய்”*** என்றார். அந்தோனியார் இறந்து எழுநூறு ஆண்டுகளைக் கடந்தும் அவருடைய நாவு இன்றைக்கும் அழியாமல் இருப்பதைப் பார்க்கும்போது அந்தோனியார் தன்னுடைய நாவினால் இறைவனுக்கு எந்தளவுக்கு மகிமை சேர்த்திருப்பார் என்று புரிந்துகொள்ள முடிகின்றது. 1946ஆம் ஆண்டில் திருத்தந்தையாக இருந்த பன்னிரெண்டாம் பத்திநாதர் அந்தோனியாரை திருச்சபையின் மறைவல்லுனராக உயர்த்தினார்.

புனிதர்கள் நம் வாழ்க்கையில் வழிகாட்டுபவர்களாகவும், நம் தேவைகளிலும், துன்பங்களிலும் ஆறுதலாகவும், புனித வாழ்வுக்கு இட்டுச் செல்பவர்களாகவும் விளங்குகின்றார்கள். புனித பதுவை அந்தோனியாரின் சிறப்பினையும், அவரது வழிகாட்டுதலையும், அவர் இறைவனில் வைத்திருக்கின்ற ஆழமான நம்பிக்கையையும் அதன் மூலமாக இறைவன் அவருக்குக் கொடுத்த புதுமைகள் செய்கின்ற வரத்தையும் அவருடைய வாழ்க்கையிலிருந்து நாம் கண்டுகொள்ளலாம். அவற்றில் சில உண்மை நிகழ்வுகளை நாம் காண்போம்.

## உயிர்களைக் காப்பவர் புனித அந்தோனியார்

ஓரிடத்தில் அந்தோனியாரின் போதனையைக் கேட்பதற்காக பெண்ணொருத்தி தன்னுடைய குழந்தையைத் தொட்டிலில் தூங்கவைத்துவிட்டு வந்துவிட்டார். அவர் அந்தோனியாரின் போதனையைக் கேட்டுவிட்டு வீட்டுக்குச் சென்றபோது குழந்தை அருகே கொதித்துக் கொண்டிருந்த தண்ணீரில் விழுந்து இறந்துபோனது. அப்போது அந்தப் பெண்மணி அடைந்த துக்கத்திற்கு அளவே இல்லை. எனவே அவர் அந்தோனியாரை அணுகி தன்னுடைய குழந்தையைக் காப்பாற்றும்படி கெஞ்சிக் கேட்டார். அந்தோணியாரும் அவர்மீது இரக்கம் கொண்டு அந்தக் குழந்தையை உயிர்பித்துக் கொடுத்தார்.

## நற்கருணையில் அதீத நம்பிக்கை கொண்ட புனிதர்



அந்தோனியார் வாழ்ந்த காலத்தில் நற்கருணையில் ஆண்டவரின் பிரசன்னம் இல்லை என்று ஒருவன் மறுத்து வந்தான். அந்தோனியார் அவரிடத்தில் “நீ உன்னிடத்தில் இருக்கும் கழுதையை மூன்று நாட்கள் பட்டினி போடு. மூன்று நாட்களுக்குப் பிறகு அதை இங்கே அழைத்துவா. அதன்முன்பாக உணவையும் நற்கருணை ஆண்டவரையும் வைப்போம். ஒருவேளை அது நற்கருணை ஆண்டவருக்கு அடிபணிந்தால் நீ நற்கருணையில் ஆண்டவர் இருப்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும்” என்று அவரிடத்தில் சொன்னார். அந்த மனிதரும் அதற்குச் சரியென்று சொன்னார். மூன்று நாட்களுக்குப்பின் தனது கழுதைக்கு உணவு கொடுக்காமல் அந்தோனியாரிடத்தில் கொண்டுவந்தார். அந்த கழுதைக்கு முன்பாக உணவும், இன்னொரு பக்கம் அந்தோனியார் நற்கருணை ஆண்டவரைக் கையில் ஏந்தியும் இருந்தார். மூன்று நாட்கள் கழுதை ஒன்றும் சாப்பிடாமல் இருந்ததால் உணவையே உட்கொள்ளும் என்று அந்த மனிதர் நினைத்தார். ஆனால் அக்கழுதை நற்கருணை ஆண்டவர் முன்பாக முழந்தாள்படியிட்டு வணங்கியது. இதைக் கண்ட அந்த மனிதர் அந்தோனியாருடைய காலில் விழுந்து தனது தவறை ஒப்புக்கொண்டார்.

## தீய சக்திகளுக்கு அடங்காப் புனிதர்

ஒருசமயம் ஷரூமினி நாட்டில் இருந்த யூதர்கள் சிலர் அந்தோனியார் மீது பொறாமை கொண்டு அவருடைய உணவில் விஷம் கலந்து கொடுத்து கொல்லப் பார்த்தார்கள். ஆனால் அந்தோனியாரோ விஷம் கலந்த அந்த உணவின்மேல் சிலுவை அடையாளம் வரைந்து உண்டு அவர்களுடைய சூழ்ச்சியை வெற்றிகொண்டார்.

## வழிகாட்டும் புனிதர் புனித அந்தோனியார்

1729ஆம் ஆண்டிலிருந்து பாரம்பரியமாக புனித அந்தோனியாரிடம் மன்றாடி அவரது பாதுகாப்பை வேண்டும் வழக்கம் இருந்து கொண்டே இருக்கின்றது. ஒரு குறிப்பிட்ட வியாபாரி ஸ்பெயினிலிருந்து பெருவுக்கு சென்றிருந்தார். அவரது மனைவி பல கடிதங்கள் எழுதியும் பதிலில்லை. இதனால் அவள் மிகுந்த துயரத்தில் வாழ்ந்து வந்தாள். இறுதியாக புனித அந்தோனியாரிடம் குழந்தைக்குரிய நம்பிக்கையுடன் செபித்தாள். ஓரிடாவில் உள்ள பிரான்ஸிஸ்கன் கோயிலில் இருக்கும் அந்தோனியார் கைகளில் ஒரு கடிதம் எழுதி வைத்து அதனை தன் கணவருக்கு அனுப்புமாறு இறைஞ்சி மன்றாடினாள். பின்னர் அந்த கோயிலுக்கு வந்தபோது தான் வைத்த கடிதத்திற்குப் பதிலாக கணவனின் பதில் கடிதமும், சில தங்க நாணயங்களும் இருந்ததைப் பார்த்து மிக்க மகிழ்ச்சி அடைந்தாள். இன்று வரை இக்கடிதத்தை ஓரியோடோவில் காணலாம். அக்கடிதத்தில் லீமா, ஜீலை 23, 1729 என எழுதியுள்ளது.

## புனித அந்தோனியார் வாழ்க்கைத் துணையைக் கொடுப்பவர்

ஸ்பெயினில் ‘பாங்கே’ என்னுமிடத்தில் புனித பதுவை அந்தோனியார் (“Santo Casamentara”) இளம் பெண்களுக்கு துணைவர்களைக் கொடுக்கும் புனிதராக அழைக்கப்படுகின்றார். பெண்கள் புனித யாத்திரையாக ‘குயுரான்கோ’ கெபிக்குச் சென்று நல்ல வாழ்க்கைத் துணைவரைக் கொடுக்குமாறு செபிக்கின்றார்கள். அதேபோல இளைஞர்களும் தங்களுக்கு நல்ல வாழ்க்கைத் துணையாக பெண்கள் கிடைப்பதற்காகவும் அங்கு சென்று செபிக்கின்றார்கள். புனித அந்தோனியார் இவ்வாறு தன்னை நாடி வருபவர்களுக்கு அனைத்து உதவிகளும் அளித்து வழிநடத்துகின்றார். காணாமற்போன பொருட்களைக் கண்டெடுத்துக் கொடுக்கின்றார். வாழ்க்கைத் துணையை அமைத்துக்கொடுத்து இல்லற வாழ்வு சிறப்பாக அமைய வழிநடத்துகின்றார். மக்கள் புனித அந்தோனியார் மீது ஆழமான பக்திகொண்டு நம்பிக்கை உள்ளவர்களாக அருள்பெற்றவர்களாக வாழ்கின்றார்கள். அனைவராலும் எண்ணற்ற கோடி புதுமைகள் செய்யும் புனித அந்தோனியாராக வாழ்த்தப்பெறுகின்றார்.

## அந்தோனியாரின் கரங்களில் லில்லி மலர்கள்

18ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சுப் புரட்சிக்குப் பின் பிரான்சிஸ்கன் துறவிகள் ‘கோர்ஸிகா’ அந்தோனியார் கோயிலிலிருந்து அனுப்பப்பட்டார்கள். மக்கள் செல்லாததால் கோயிலும் பராமரிக்கப்படவில்லை. அந்தோனியார் விழா யூன் 13ஆம் நாள் முடிந்து ஒரு வருடத்திற்குப்பின் அங்கு சென்றபோது லில்லி மலர்கள் வாடாமல் அப்படியே புதிதாக இருந்தன. அநேக கோயில்களில் லில்லி மலர்கள் மந்திரித்துக் கொடுக்கப்படுகின்றன. அவைகளை உலரவைத்து துணிகளுக்குள் பத்திரப்படுத்தி பாதுகாக்கின்றனர். புனிதரின் தூய்மையை அவை காட்டுகின்றன. நாமும் சோதனை நேரத்தில் தூய்மையுடனும், சமாதானமாகவும் வாழவும், தீமையிலிருந்து எம்மைப் பாதுகாக்கவும், புனித வாழ்வு வாழ புனிதர் நமக்கு வழிகாட்டுகின்றார். திருத்தந்தை 13ஆம் சிங்கராயர் இந்தப் பக்தியை அங்கீகரித்தார்.

## இறைவனிடத்தில் அன்பு

நற்செய்தியில் ஆண்டவர் இயேசு தன்னிடத்தில் “திருச்சட்ட நூலில் தலைசிறந்த கட்டளை எது?” என்று கேட்ட திருச்சட்ட அறிஞரைப் பார்த்துச் சொல்வார் “உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து.’ இதுவே தலைசிறந்த கட்டளை. உன்மீது நீ அன்பு கூர்வதுபோல உனக்கு அடுத்திருப்பவர்மீதும் அன்பு கூர்வாயாக’ என்பது இதற்கு இணையான இரண்டாவது கட்டளை” என்பார் (மத் 22:35-40). இயேசுவின் இக்கட்டளைகளை தன்னுடைய வாழ்வில் கடைப்பிடித்து வாழ்ந்தவர் புனித அந்தோனியார் என்று சொன்னால் அது மிகையாகாது. ஏனென்றால் அந்தோனியார் ஆண்டவரிடத்தில் அளவு கடந்த அன்பு கொண்டிருந்தார். அந்த அன்பை வெளிப்படுத்தத்தான் அவர் மொரோக்கோ நாட்டிற்குச் சென்றதும் அல்லாமல் தன்னுடைய உயிரையும் இழக்கத் துணிந்தார். ஆனால் இறைவனின் திருவுளம் வேறு மாதிரியாக இருந்தது. அந்தோனியார் ஆண்டவர்மீது எந்தளவுக்கு அன்புகொண்டிருந்தாரோ அதே அளவுக்கு ஆண்டவரும் அந்தோனியார் மீது அளவுகடந்த அன்பு கொண்டிருந்தார். அதனால்தான் அவர் குழந்தையாக அந்தோனியாரின் கைகளில் தவழ்ந்தார்.

புனித அந்தோனியாரை எம் பாதுகாவலராகவும், எம் ஆன்மீக வாழ்வின் நெருக்கமானவராகவும் நினைத்து விழாக் கொண்டாடும் நம்மிடத்தில் அவரைப்போன்று ஆண்டவர் மீது ஆழமான அன்பு இருக்கின்றதா? “உங்கள் செல்வம் எங்கு உள்ளதோ, அங்கே உங்கள் இதயமும் இருக்கும்” என்று ஆண்டவர் சொன்ன வார்த்தையை அந்தோனியார் அடிக்கடி சுட்டிக்காட்டுகின்றார்.

## அயலாரிடத்தில் அன்பு

அந்தோனியார் ஆண்டவரிடத்தில் எந்தளவுக்கு அன்பு கொண்டு வாழ்ந்தாரோ அதே அளவுக்கு அவர் அயலாரிடத்திலும், ஏழைகளிடத்திலும் அன்புகொண்டு வாழ்ந்தார். அந்தோனியார் வாழ்ந்த காலத்தில் பதுவை நகரில் பணக்காரர்கள் தங்களது பணத்தை வட்டிக்குக்கொடுத்து வட்டிப்பணத்தைத் தராத ஏழைகளைக் கொடுமைப்படுத்தி வந்தார்கள். இதைக் கேள்விப்பட்ட அந்தோனியார் ஏழைகளை துன்புறுத்தும் பணக்காரர்களை கடுமையாகச் சாடினார். மேலும் அந்தோனியார் இறந்த அதே ஆண்டில் பதுவா நகரில் வாழ்ந்த ஏழைகளது கடன்கள் அத்தனையும் தள்ளுபடி செய்யப்பட்டது. அந்தோனியார் தான் இருந்த துறவுமடத்திற்கு வரக்கூடிய ஏழை எளியவருக்கு உணவு கொடுத்து அவர்களது பசியைப் போக்கி வந்தார். அதனால்தான் இன்றைக்கும் அவருடைய ஆலயங்களில் ஏழைகளுக்கு (நேர்த்தி, அன்னதானம்) உணவு கொடுக்கப்படுகின்றது. அவர் சொல்வார், “நம்முடைய கைகளும், கால்களும் துன்பத்தில் இருப்பவர்களைத் தேடிச்சென்று உதவுவதற்காகக் கொடுக்கப்பட்டன”

அந்தோனியாரை நம்முடைய பாதுகாவலராகக் கொண்டிருக்கும் நாம், அவரிடத்தில் காணப்பட்ட ஏழைகள்மீதான அன்பும் கரிசனையும் நம்மிடத்தில் இருக்கின்றதா? நற்செய்தியில் இயேசு “மிகச் சிறியோராகிய இவர்களுக்குச் செய்ததெல்லாம் எனக்கே செய்தீர்கள்” என்பார் (மத் 25: 40). நாம் புனித அந்தோனியாரைப் போன்று ஏழைகளுக்கு உதவி செய்வோம். அதன்வழியாக இறைவனின் அன்புக் கரங்களாக மாறுவோம்.

## உயிர்களிடத்தில் அன்பு

புனித அந்தோனியார் உயிர்களிடத்தில் அன்பு கொண்டு வாழ்ந்தார் என்று சொன்னால் அது மிகையாகாது. எப்படியென்றால் ஒருசமயம் அந்தோனியார் போதிக்கச் சென்ற இடத்தில் மக்கள் அவருடைய போதனையைக் கேட்க விருப்பமில்லாதவர்களாய் இருந்தார்கள். எனவே அவர் மக்கள் கேட்காவிட்டால் என்ன, உயிரினங்கள் கேட்கட்டும் என்று கடலில் இருந்த மீனினங்களுக்கு நற்செய்தி அறிவித்தார். உண்மையிலே அவர் உயிரினங்களிடத்தில் அன்பு கொண்டிருந்ததனால்தான் அவரால் இப்படி செய்ய முடிந்தது.

அந்தோனியார் மீனினங்களிற்கு என்ன போதித்திருப்பார் என்பது பற்றிய விவாதங்கள் எழுகின்றன. அவர் என்ன போதித்தார் என்பதை புனித பிரான்சிஸ் அசிசியார் தன்னுடைய புத்தகத்தில் அழகுபட எழுதி வைத்திருக்கிறார். “மீனினங்களே நீங்கள் பேறுபெற்றவர்கள். ஏனென்றால் நோவாவின் காலத்தில் கடவுள் உலகை அழிக்க நினைத்தபோது நீங்கள் அந்த அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டீர்கள். யோனாவை நீங்கள் மூன்று நாட்கள் உங்களுடைய வயிற்றினில் பாதுகாப்பாக வைத்திருந்தீர்கள். ஆண்டவர் இயேசு அப்பங்களையும், மீன்களையும் பலுகச் செய்து புதுமை செய்தபோது, நீங்கள் அதற்கு உறுதுணையாக இருந்தீர்கள். இயேசுவுக்கு வரிசெலுத்தும் சூழ்நிலை ஏற்பட்டபோது நீங்கள் ஒரு நாணயத்தைத் தந்து அவருக்கு உதவினீர்கள். இப்படியெல்லாம் உதவி செய்த நீங்கள் கடவுள் பார்வையில் பேறுபெற்றவர்கள்” என்று எழுதப்பட்டிருக்கிறது. இப்படி பல்வேறு விதங்களில் அந்தோனியார் உயிர்களிடத்திலும், இயற்கையிடத்திலும் தனிப்பட்ட அன்பு கொண்டிருந்தார்.

உயிர்களிடத்தில், இயற்கையிடத்தில் தனிப்பட்ட அன்பு கொண்டிருக்கிறோமா? இயற்கையை நாம் நேசித்தால், இயற்கை நம்மை நேசிக்கும் என்பது ஆன்றோர் வாக்கு. ஆகவே புனித அந்தோனியாரைப் போன்று இறைவனிடத்தில், நம்மோடு வாழும் சக மனிதரிடத்தில், இயற்கையிடத்தில் அன்புகொண்டு வாழ்வோம்.●

# என் பார்வையில் திருக்குடும்ப கன்னியர் சபை

– அருட்சகோதரி. மேரி றுபினா, திருக்குடும்ப கன்னியர் மடம், நானாட்டான் –

**திருக்குடும்ப சபையின் வளர்ச்சி வரலாறு**

2020ஆம் ஆண்டு 200வது ஆண்டு நிறைவு விழாவைச் சிறப்பிக்க இருக்கும் இச்சபையானது பிரான்சிய அரசியல் புரட்சியின்பின் பீற்றர் பியன்வெனு என்னும் குருவானவரின் உள்ளத்தில் எழுந்த ஒரு சிந்தனையின் ஒரு சிறப்பு அம்சமாகும். அந்தக் காலத்தில் மக்கள் அன்னை மரியாவிலும் திருக்குடும்பத்தின் மேலும் சிறந்த பக்தியுடையவர்களாகக் காணப்பட்டார்கள். இறை ஏவுதலினால் தூண்டப்பட்ட இக் குருவானவர் திருக்குடும்பத்தில் அதிகப் பற்றுடையவராக இருந்தார். அவருக்கிருந்த பக்தி மேலோங்கியதன் விளைவாக தூய திருத்துவத்தில் விளங்கிய அன்பு, உறவு, ஐக்கியம் என்பவற்றை திருக்குடும்பத்தில் கண்டார். எனவே இந்த அன்பு, ஐக்கியம், உறவு, தாழ்மை, எளிமை நிறைந்த திருக்குடும்ப வாழ்வைப் பின்பற்றி வாழவேண்டுமென்ற ஆவல் கொண்டவராய் திருக்குடும்ப சபையை நிறுவ முயற்சி எடுத்தார். எனவே ஆரம்பத்தில் மூன்று இளம் பெண்களைக் கொண்டு இச்சபையை ஆரம்பித்தார். இறைவனின் பராமரிப்பு அவர்களை வழிநடத்தியது. படிப்படியாக பல இளம் பெண்கள் இச்சபையில் இணைந்து கொண்டார்கள். பக்தியும், ஆர்வமும், ஆவலும் கொண்ட நிறுவுனர் சபை வளர்ச்சி அடைவதைக் கண்டு திருத்தந்தையிடம் சென்று இச்சபையை நிறுவுவதற்கு அங்கீகாரம் பெற்றுக்கொண்டார். திரு அவையில் அங்கீகாரம் பெற்ற சபையாக மிளிர்ந்தது. 1822 மாசி மாதம் 3ஆம் திகதி ஒரு சிற்றாலயத்தில் எழுந்தேற்றம் செய்யப்பட்டு அருட்சகோதரிகளும், குருவானவரும், பீடப்பணியாளர்களும் செபித்துக் கொண்டிருந்த வேளையில் நற்கருணையில் இயேசு முப்பது வயது மதிக்கக்கூடிய ஒரு இளைஞனாக சிவப்புப்போர்வை அணிந்தவராக காட்சியளித்து "இருக்கின்றவர் நானே" என்ற குரலொலிக்க இச்சபையை ஆசீர்வதித்தது ஒரு பெரும் பாக்கியமாக, அற்புதமாக அமைந்திருந்தது.

பிரான்சிய அரசியல் புரட்சியினால் பாதிக்கப்பட்டு சிதறடிக்கப்பட்ட மக்கள் மத்தியில் ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும் பணிகளை ஆரம்பித்தனர். ஒவ்வொரு பணிக்கென ஏழு கிளைகள் ஆரம்பிக்கப்பட்டன. அவர்களுடைய வாழ்வாதாரத்திற்கு இறைபராமரிப்பில் நம்பிக்கை வைத்து வாழ்ந்தார்கள். பல வழிகளிலும் அவர்களுக்கு உதவிகள் கிடைக்கப்பெற்றன. அவர்களுடைய ஏழ்மை, தாழ்மை, ஐக்கியம் அன்புறவு கொண்ட வாழ்வினால் கவரப்பட்டவர்கள் இச்சபையில் வந்து சேர்ந்ததினால் சபை வளர்ச்சியடையத் தொடங்கியது. நிறுவுனரின் கனவும் "ஒருமரம்" மரத்தின் கிளைகளில் பல நாட்டுப் பறவைகளும் வந்து ஒரே குரலில் "இறைவனுக்கே மகிமை" எனும் கீதம் பாடுவார்கள் என்ற நிறுவுனரின் இக்கனவு நிறைவேறியிருப்பதை நாம் காண்கின்றோம். இன மத மொழி வேறுபாடுகள் கடந்து உலகின் பல நாடுகளிலும் இச்சபை பரந்து விரிந்து சிறந்த பணி ஆற்றிவருவதை நாம் கண்டு மகிழ்ச்சி அடைகின்றோம். இலங்கைக்கும் திருக்குடும்ப சபை சகோதரிகளை அனுப்பவேண்டுமென்ற ஆவல் நிறுவுனருக்கு இருந்தது. அந்தக் காலத்தில் யாழ்ப்பாண ஆயராக இருந்த அமல மரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த சமேரியா ஆண்டகை அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க நிறுவுனர் இறந்த அடுத்த ஆண்டில் அதாவது 1862ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 2ஆம் திகதி நான்கு அருட்சகோதரிகளும் சில அமல மரித்தியாகிகள் அருட்பணியாளர்களின் துணையுடன் யாழ் மண்ணில் கால் பதித்தனர். இலங்கைக்கு முதன் முதலாக வந்த பெண் துறவிகள் திருக்குடும்ப சபை கன்னியர்கள் என்ற பெருமையும் இச்சபைக்கே உரியதாகும். 1862இல் யாழ் வடமாகாணம் என்ன நிலையில் இருந்திருக்கும் என்பது யாவரும் அறிந்தது. ஆனால் கஸ்ரங்கள், துன்பங்கள், வித்தியாசமான உணவுகள், மொழி, கலாசாரம் அனைத்து வேறுபாடுகள் மத்தியிலும் ஆர்வத்தோடும், மகிழ்ச்சியோடும் பணி செய்தார்கள். முதலில் கல்விப்பணியே முக்கியமாக இருந்தது. ஆங்கிலமொழி கற்பிக்கப் பாடசாலைகளை ஆரம்பித்தார்கள். படிப்படியாக மன்னார், வவுனியா போன்ற பல இடங்களிற்கும் தங்களுடைய நகர்வை ஆரம்பிக்கத் தொடங்கினார்கள். மக்களை கிறிஸ்தவ விசுவாசத்தில் உறுதிப்படுத்தி ஒழுக்கம், கல்வி விசேட விதமாக ஆங்கிலக்கல்வி ஆகியவற்றில் முன்னேற்றம் காண வைத்தார்கள். அழைத்தல்களும் பெருகத் தொடங்கின.

இன்றைய கால கட்டத்தில் தொடர்பு சாதனங்கள் அனைத்தும் பிள்ளைகளை பிழையான வழிகளில் நகர்த்திச் செல்வதனால் விசுவாச வாழ்வு குறைபடுவதையும் திருப்பலி, செப வாழ்வு, இறையன்பு, பிறரன்பு குறைபடுவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. இதனால் குடும்பங்களில் அழைத்தல்களும் குறைவதைக் காணலாம். இன்னும் இலங்கையில் பல புதிய துறவறசபைகள் முளைத்து வருவதனால் அழைத்தல்கள் பல கிளைகளாக பரிணாமம் அடைந்திருக்கின்றது. முதிர்ந்த வயதுடைய எமது சபைக்கு தற்போது அழைத்தல்கள் மிகவும் குறைவுபடுகின்றது. சகோதரர்களின் பற்றாக்குறை காரணமாக பல மடங்கள் மூடப்படுவதையும் காண்கின்றோம். ஆனாலும் எமது சபையில் ஐந்து கிளைகள் உருவாக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கின்றன.

1. அப்போஸ்தலிக்க சகோதரிகள்
2. தியானயோக சகோதரிகள்
3. திருமடச் சார்பற்ற சகோதரிகள்
4. திருக்குடும்ப பொது நிலையினர்
5. திருக்குடும்பக் குருக்கள்

**அப்போஸ்தலிக்க சபை சகோதரிகள்**

பாடசாலைகளை தலைமைதாங்கி நடத்தல், பாடசாலைகளில் கற்பித்தல், வைத்தியசாலைகளில் வேலை செய்தல், மாற்றாற்றல் திறனுடையவர்களை பராமரித்தல், திருவருட்சாதனங்களுக்கு ஆயத்தம் செய்தல், நோயாளிகளைச் சந்தித்தல், நற்கருணை வழங்கல், குடும்ப தரிசிப்பு மக்களுடைய இன்ப துன்பங்களில் பங்கெடுத்தல், மறைக்கல்வி விடுதிச்சாலை மாணவர்களைப் பராமரித்தல், வேதபோதனை நாடுகளுக்குச் சென்று பணிபுரிதல் போன்ற பல பணிகளைச் செய்துவருகின்றார்கள்.

**தியானயோக சகோதரிகள்**

மடத்தினுள் நற்கருணை ஆண்டவர் முன்னிலையிலிருந்து தங்களுடைய செபம், தியாக வாழ்வால் சபைக்கும், மக்களுக்கும் இறைவனின் அருளை சக்தியை பெற்றுக் கொடுக்கின்றார்கள்.

**திருமடசார்பற்ற சகோதரிகள்**

உலகின் மத்தியில் தங்களை யாரென்று வெளிப்படுத்தாது புளிக்காரமாக இருந்து திருக்குடும்ப வாழ்வை பிரதிபலிக்கின்றார்கள். இவர்கள் திருமணம் செய்வதில்லை. இறைவனுக்குத் தம்மை அர்ப்பணம் செய்திருக்கின்றார்கள். தங்கள் வாழ்வாதாரத்திற்கு தாங்களே உழைத்து ஊதியத்தை எடுத்துக் கொள்கின்றார்கள்.

**திருக்குடும்ப பொது நிலையினர்.**

தங்கள் குடும்பத்திலும், மக்கள் மத்தியிலும் திருக்குடும்ப வாழ்வை வாழ்ந்து ஏழைகள், கஸ்ரப்பட்டோருக்கு உதவி செய்தல், நோயாளர்களைச் சந்தித்தல், குடும்பங்களை தரிசித்து இன்பதுன்பங்களைப் பங்கெடுத்தல், இல்லங்களில் வழிபாடுகள் நடத்துதல் போன்ற பல பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

**திருக்குடும்ப குருக்கள்.**

இவர்கள் திருக்குடும்ப சபையின் ஆன்மீக வாழ்வையும் மற்றும் குருத்துவ அர்ப்பண வாழ்வு கடமைகளையும் நிறைவேற்றி வருகின்றார்கள். இவர்கள் அனைவரும் இறைவனுக்குத் தங்களை அர்ப்பணித்து அர்ப்பண வாழ்வை எடுத்துக் கொண்டவர்கள்.

எமது சபையில் வயோதிபத்தால் அதிகம் முதியவர்கள் இருக்கின்றார்கள், அவர்களும் தங்களுடைய இயல்புக்கு ஏற்ப பணிகளைச் செய்துகொண்டுதான் இருக்கின்றார்கள். சபையில் அழைத்தல்கள் அருகிப்போனாலும் சபையின் ஆன்மீகம் ஒருபோதும் அழிந்துபோகவில்லை. இறைவனுடைய ஆசீர் என்றும் சபையில் உள்ளது. அழைத்தல்கள் பெருக இறைவனை வேண்டுகின்றோம்.

21ஆம் நூற்றாண்டில் புதிய மறுமலர்ச்சி உருவாகி புதிய கண்ணோட்டத்தில் வாழ அழைக்கப்படுகின்றோம். எமது பழைய கண்ணோட்டத்தில் திருத்துவத்தில் விளங்கிய அன்பு, ஐக்கியம், உறவு என்பவை இறைவனோடும், சகோதர சகோதரிகளோடும் இணைந்து வாழ்வதோடு மட்டும் நின்றுவிட்டதால் பிளவுபட்டு பிரிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டு ஒன்றுடன் ஒன்று தொடர்பற்ற நிலையில் பார்க்கப்பட்டது. இயேசுவின் கண்ணோட்டத்தில் இயேசு தந்தையைப் பார்த்து செபிக்கின்றார். (யோவான். 17:11) "தந்தையே நாம் ஒன்றாய் இருப்பது போல அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக" (ஒன்றாயிருக்கும்படி அவர்களைக் காத்தருளும்.) என்று வேண்டுகின்றார். பிரபஞ்சம் முழுவதிலும் பிரசன்னமாய் இருக்கும் இறைவனை நாம் காண்போம்.

பூமித்தாய் பிரபஞ்சம் அதில் வாழும் உயிர்கள், சூரியன், சந்திரன் அனைத்தும் எமது சகோதர சகோதரிகளாக இணைவட்டும். எம் நாடும் பிரபஞ்சத்தில் ஒரு சிறு பகுதியே. அனைவரும் இறைவனின் குடும்பம். அனைவரையும் இயேசு தன்னுடைய இரத்தத்தால் மீட்டு புதுவாழ்வு அளித்துள்ளார். பிரபஞ்சம் முழுவதுமே புனிதமானது. பிரபஞ்சத்திலுள்ள அனைத்து உயிர்களுடனும் இணைந்துதான் இறைவனைப் புகழ்ந்து நன்றி கூற அழைக்கப்படுகின்றோம். இவை அனைத்துடனும் இணைந்து அன்பு, ஐக்கியம், உறவில் வாழும் பொழுதுதான் நாம் இறைவனைக் காண முடியும் என்பதையும் நாம் உணர்ந்து வாழ அழைக்கப்படுகின்றோம். இறைவன் பிரபஞ்சத்தின் படிமுறை வளர்ச்சியில் செயற்பட்டுக் கொண்டே இருக்கின்றார். பிரபஞ்சக் குடும்பத்தில் நெருக்கமான உறவிலே நாம் இருக்கின்றோம் என்ற உணர்வுடன் பிரபஞ்சம் முழுவதையும் பெறுமதியோடு நோக்கவும், மதிக்கவும், புனிதமாகப் பேணவும் வளர்ச்சியடையச் செய்யவும் நாமும் வளர்ச்சியடையவும் அழைக்கப்படுகின்றோம் என்பதை உணர்ந்துகொள்வோம்.

இத்திருக்குடும்ப சபையானது புதிய கண்ணோட்டத்தில் வாழ எம்மை ஆழப்படுத்தி நடைமுறைப்படுத்திக் கொண்டே இருக்கின்றது. இன்னும் ஆழ்நிலை தியானத்தினூடாக இறைவனுடனும் பிரபஞ்சம் அனைத்துடனும் இணைந்து வாழ்வது மகிழ்ச்சியான வாழ்வாக அமைந்திருப்பதையும் நாம் காண முடிகின்றது.

எனவே நாம் "எல்லாவற்றிலும் இறைவனையும், இறைவனில் அனைத்தையும் காண்போம்.●


**ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்**

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் எழுதி அனுப்புங்கள். தரம்கண்டு மன்னாவில் பிரசுரிப்போம்.

*- மன்னா நிர்வாகம் -*


# இலங்கையில் கார்மேல் சபை

கார்மேல் துறவற சபையானது திருச்சபையின் ஆரம்பகால பழமை வாய்ந்த துறவற சபைகளில் ஒன்றாகும். இது இஸ்ராயேலில் உள்ள கார்மேல் என்னும் மலையில் மரியன்னையின் பரிந்துரையால் அவளின் நாமத்தைச் சூட்டியதாய் 13ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் இறைவாக்கினர் புனித எலியாசியாரின் இறை தூண்டுதலினாலும், ஆன்மீக வழி காட்டலினாலும் உருப்பெற்றது.

இன்று ஏறக்குறைய 16 ஆயிரம் அருட்கன்னியர்களையும், 4000 குருக்களையும் கொண்டதாக 98 நாடுகளில் பரவியுள்ளது. இலங்கையிலும் 1952ஆம் ஆண்டு பெல்ஜியம் நாட்டிலிருந்து வந்த குருக்களால் இச்சபையானது அறிமுகப்படுத்தப்பட்டது. மீண்டுமாக கார்மேல் சபைக்கு உயிர்மூச்சுக்கொடுத்து உரம் ஊட்டும் வகையில் தென் இந்திய நாட்டிலிருந்து குருக்கள் 2014ஆம் ஆண்டு இலங்கையில் நிரந்தரமாக இறைபணியை ஆரம்பித்தனர்.

இன்று இலங்கையில் கார்மேல் சபைக் குருக்கள் 3 மறைமாவட்டங்களில் ஸ்தாபனங்களை நிறுவி தம் பணியை ஆற்றி வருகின்றனர்.

1. Avila Nivasa கார்மேல் சபைக்குருக்கள் - கந்தானை (கொழும்பு மறைமாவட்டம்)
2. St Joseph Monastery - எல்பிட்டிய (காலி மறைமாவட்டம்)
3. St. Theresa of child Jesus Monastery - கேகாலை (இரத்தினபுரி மறைமாவட்டம்)

**கார்மேல் சபையின் நோக்கம்**

**Charism of the Order**

"சேவைகளின் தலைவராம் ஆண்டவருக்காய் வெகு பக்தியுடன் ஆவலாய் காத்திருக்கின்றேன்" (1அரசர் 19:10) இறை தூண்டுதலினால் ஏவப்பட்ட புனித எலியாசியரின் வார்த்தையை மையமாகக் கொண்டு கார்மேல் சபை தனக்கென தனித்துவமான நோக்கங்களைக் கொண்டுள்ளது.

**கார்மேல் சபையின் முதல் நோக்கம்:**

நட்புறவை இறைவனுடன் ஏற்படுத்துவதே ஆகும். இந் நட்புறவு இடைவிடாத செபத்தாலும், தியானத்தாலும் ஏற்படுகின்றது. இச் செபத்தாலும் தியானத்தாலும் ஏற்படும் விளைவே இன்று இவர்கள் மேற்கொள்ளும் இறைபணியாக உள்ளது. கார்மேலின் மூன்று முக்கிய கூறுகளாக செபவாழ்வு, குழுமவாழ்வு மற்றும் பணிவாழ்வு காணப்படுகின்றது. இவை மூன்றும் ஒன்றுடன் ஒன்று மிகத் தொடர்புடையதாய் உள்ளது. எமது அர்ப்பண வாழ்வு மரியன்னையுடன் ஆழமான தொடர்புள்ள வாழ்வாக உள்ளது. அவளைப்போன்று இயேசுவை எம் உள்ளத்தில் இருத்தி சிந்தித்து வாளவே நாம் அழைக்கப்படுகின்றோம். அன்னை மரியின் மகனாய், மகளாய் உள்ள நாம் இறைவனை எவ்வேளையிலும் எம் உள்ளத்தில் தாங்கிக் கொள்ள அழைக்கப்படுகின்றோம். இறைவன் கொடுத்த அழைப்பை மனதில் இருத்தி இலங்கைத் தாய் நாட்டின் கார்மேல் சபையின் முதல் ஆண் துறவிகளாக தம்மை அர்ப்பணிப்பவர்கள்.

**அருட்சகோதரர் டிலோஷன்- மன்னார் மறைமாவட்டம், கொக்குப்படையான், சிலாவத்துறைப்பங்கு**

இவர் தனது முதல் வார்த்தைப்பாட்டை கடந்த வைகாசி மாதம் 6ஆம் நாள் பிலிப்பைன்ஸ் நாட்டின் கார்மேல் மாகாண சபைத்தலைவர் அருட்பணி. றொனால்டோ சொற்றோல்லோ OCD அவர்கள் முன்னிலையில் அந்நாட்டில் அர்ப்பணித்தார்.

→ 13


**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம் :**

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782


# தியாகத் தாய்



தாய் தன் ஒரே செல்லமகனை அன்போடு வளர்த்தார். மகன் வயதிலும், அறிவிலும் வளர வளர தன் தாயின் அரவணைப்பிலிருந்து பிரிய ஆரம்பித்தான். காரணம் அவனுடைய தாயின் கையில் கண்ட வெண் தழும்புகள். பார்க்கவே அவனுக்கு அருவருப்பாக இருந்தது. ஒருநாள் 'எப்படி அத்தழும்புகள் ஏற்பட்டன?' என தாயிடம் கேட்டான். தாய் கண்ணீருடன் சொன்னாள். 'மகனே! நீ சிறு குழந்தையாயிருந்தபோது நாமிருந்த வீடு தீப்பற்றிக் கொண்டது. வெளியே சென்று திரும்பி வந்த நான் வீடு எரிவதைப் பார்த்து பதறினேன். நீ உள்ளே தூங்கிக் கொண்டிருந்தாய். எவ்வளவு கதறியும் யாரும் உதவவில்லை. நானே எரியும் வீட்டுக்குள் புகுந்து உன்னை தூக்கிக்கொண்டு வெளியில் வரும்போது நெருப்பு தாக்கி என் கை, காலெல்லாம் வெந்து விட்டன. அந்த நெருப்புப் புண் தழும்புதான் இது.' மகன் இதயம் உடைந்து அந்த அழகிய கைகளில் முத்தமிட்டான்.

**"அன்பை வாங்கவும், விற்கவும் முடியாது அன்பிற்கு விலை அன்புதான்" ●**

# 53வது உலக தொடர்பாடல் தினத்திற்கான திருத்தந்தையின் செய்தி

## “நாம் யாவரும் ஓர் உடலின் உறுப்புக்களாய் இருக்கின்றோம்” (எபே. 4:25) சமூக வலைப்பின்னல் குழுமங்களிலிருந்து மனித சமூகத்திற்கு

**அன்புள்ள சகோதர சகோதரிகளே!**

இணையம் பாவனைக்கு வந்த நாளிலிருந்தே திருஅவை அதனை மனித நபர்களுக்கிடையிலான சந்திப்புக்களை மேம்படுத்துகின்ற அவர்களுக்கிடையே கூட்டுறவை கட்டியெழுப்புகின்ற சேவைகளுக்குப் பயன்படுத்த ஊக்கம் தந்து வருகின்றது. நான் இந்த செய்தியின் மூலமாக எமது உறவு நிலைகளின் அடிப்படை மற்றும் முக்கியத்துவம் பற்றி மீண்டும் ஆழமாக சிந்திக்கவும், தற்கால தொடர்பாடல் சூழலிலே அணிவகுத்து நிற்கக்கூடிய சவால்கள் மத்தியில் தனித்தோ, தனிமையிலோ வாழ விரும்பாத மனித நபரின் அபிலாஷைகள் எவை என்று மீண்டும் கண்டறியவும் உங்களை அழைத்து நிற்கின்றேன்.

### “வலை” மற்றும் “சமூகம்” பற்றிய உருவகங்கள்

எமது அன்றாட வாழ்விலிருந்து பிரித்துப் பார்க்கமுடியாத அளவுக்கு இன்றைய தொடர்பாடல் சூழல் எம்மிலே ஊடுருவி நிற்கின்றது. இது, ஒரு காலகட்டத்தில் கற்பனை செய்துகூட பார்த்திருக்க முடியாத அளவுக்கு இன்று உறவாடல்களினதும், அறிவியலினதும் களஞ்சியமாக மாறியிருக்கின்றது. உற்பத்தி தொழிற்பாடுகள், அவற்றின் விநியோகம், பாவனை போன்ற துறைகளில் தொழில்நுட்பம் குறிப்பிடத்தக்க அளவு மாற்றத்தை தந்துள்ளது. எனினும் நம்பகத்தன்மை வாய்ந்த தரவுகளை உலகளவில் தேடுவதிலும் பரிமாறிக் கொள்வதிலும் இருக்கக்கூடிய ஆபத்துக்களை வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அறிவைத்தேட அசாதாரண வழிமுறைகளை இணையம் கொண்டிருந்தாலும், போலித் தகவல்கள் பரிமாறப்படவும், தரவுகளையும் ஆளிடை நல்லுறவையும் வலிந்து அழிக்கவும் பெயரை நாசம் செய்யப்பயன்படவும் வாய்ப்புத்தருகின்றது.

மேலும் சமூக வலைப்பின்னல்கள் எவ்வாறு ஒரு புறத்தில் நாம் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளவும் உதவிகள் பல புரியவும் பயன்படுகின்றன என்றும் மறுபுறத்தில் அவை எவ்வாறு மனித மாண்பைக் குலைத்து அவனின் உரிமைகளை சிதைத்து பொருளாதார அரசியல் இலாபங்களுக்காக தனிப்பட்ட தரவுகளை திரிவுபடுத்துகின்ற செயற்பாடுகளுக்கும் துணைபோகின்றன என்றும் நாம் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். இளையோரில் நான்கில் ஒருவர் ‘இணைய (அநாகரீகமான செயற்பாடுகள்) அடாவடித்தனங்களில்’ ஈடுபடுவதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

இவ்வாறானதொரு சிக்கலான சூழ்நிலையில் இணையத்திற்கு அடித்தளமாக இருக்கக்கூடிய ‘வலை’ பற்றிய உருவகத்தை மீண்டும் ஆழமாக சிந்தித்து அதன் ஆக்கபூர்வமான ஆற்றல்களை மீண்டும் கண்டுபிடிப்பது பயன்தரக்கூடியதாக இருக்கும் என நினைக்கின்றேன். ஒரு மையக்குவிப்பு இல்லாது, அதிகார உயர்வு தாழ்வுகள் அற்று எவ்வாறு பல நேர்கோடுகளையும், குறுக்குக் கோடுகளையும் கொண்டு வலையொன்று உறுதியாக இருக்கின்றது என்பதை ஆழமாக சிந்தித்துப்பார்க்க வலை அமைப்பொன்று எம்மை அழைக்கின்றது. அதன் அனைத்துக் கூறுகளும் பொறுப்புக்களைப்பகிர்ந்து செயற்படுவதால் வலை இயக்கம் பெறுகின்றது.


மனித வாழ்வியல் பார்வையில் வலையானது ‘சமூகம்’ என்னும் பிறிதொரு பொருள் பொதித்து உருவகத்தைத் தருகின்றது. ஒரு சமூகமானது நம்பிக்கை உணர்வுகளால் இயக்கப்பட்டு பொதுவான இலக்கினை நோக்கி ஒற்றுமையுடன் ஒருவருக்கொருவர் துணையாக வாழ்கின்றபோது மிகவும் உறுதியுடையதாக இருக்கும். ஒருமைப்பாட்டின் வலைப்பின்னலாக இருக்க வேண்டிய ஒரு சமூகத்திற்கு பொறுப்புணர்வுடன் கூடிய மொழிப்பயன்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட பரஸ்பர உரையாடல் மற்றும் செவிமடுத்தல் ஆகிய பண்புகள் அவசியம் தேவைப்படுகின்றது.

இன்றைய சூழலில் சமூக வலைப்பின்னல் குழுமங்கள் ‘சமூகம்’ என்கின்ற பதத்தின் அர்த்தத்தை இயல்பாகவே ஏன் பெற்றுவிடுவதில்லை என்பதை நாம் ஒவ்வொருவரும் அவதானிக்கலாம். இவ்வாறான மாயக் குழுமங்களானது தமக்குள் பிணைப்பும் ஒருமைப்பாடும் கொண்டிருந்தாலும் பல தருணங்களில் அவை பொதுவான நோக்கம் மற்றும் பலவீனமான பிணைப்புக்களுடன் கூடிய பொதுவான ஈடுபாடுகள் மூலம் தம்மை அடையாளப்படுத்துகின்ற தனிமனிதர்களைக் கொண்ட சாதாரண குழுக்களாகவே இருக்கின்றன.

அத்துடன் சமூக வலைத்தளங்களில் தமது குழுமத்திற்கு வெளியே இருக்கின்ற ‘ஒருவரை’ போல் ‘இவர்’ இல்லை என்கின்ற அடிப்படையில் தான் ஒருவரின் அடையாளம் தரப்படுகின்றது. எம்மை ஒன்றிணைப்பவைகளை விடுத்து எம்மை பிரிப்பவைகளை வைத்தே நாம் எம்மை யாரெண்டு முடிவு செய்ய ஆரம்பிக்கின்றோம். இது பல்வேறு சந்தேகங்களும் இன பால் சமய சாதி அடிப்படையிலான ஓரவஞ்சனைகளும் எழக் காரணமாகிவிடுகின்றது. இவ்வாறான போக்கு பல்தன்மையை புறக்கணிக்கும் குழுக்களை உட்சாகப்படுத்துவதுடன் இந்த எண்ணியல் உலகில் கூட வெறுப்புச்சுருள்களை தூண்டக்கூடிய கட்டுக்கடங்காத தனி ஆள் கொள்கைக்கு ஊக்கமூட்டியும் விடுகின்றது. இவ்வாறு உலகில் சாரளமாக இருக்கவேண்டியதொன்று தனிப்பட்டவர்களின் பிறழ்வான ஆசைகளை காட்சிப்படுத்துகின்ற பேழையாக மாறிவருகின்றது.

பிறருடனான சந்திப்புக்களை மேம்படுத்த வலைத்தளம் ஒரு வாய்ப்பாக இருக்கின்றது.

ஆனால் ஒரு சாதாரண வலை எம்மை தன்னிலே சிக்கவைப்பதுபோல இணைய வலையும் ஒருவர் தனிமைப்படுத்தப்படுவதற்கான வாய்ப்புக்களை அதிகப்படுத்தவும் செய்கின்றது. சமூக வலைத்தளங்கள் தமது உறவுத்தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்ய வல்லவை என்ற மாயைக்குள் பெரும்பாலும் இளையோரே சிக்கியுள்ளனர். மேலும் தம்மை ‘சமூக வனத்துறவிகள்’ எனக் கருதி சமூகத்திலிருந்து தம்மை தூரப்படுத்துகின்ற அபாயகரமான போக்கும் இளையோரிடம் காணப்படுவது அவதானிக்கப்படுகின்றது. இந்த அபாயகர நிலமை



சமூகத்தின் உறவுக்கட்டமைப்பில் பாரிய சிதைவுகள் ஏற்பட்டுள்ளதை வெளிப்படுத்துவதாக இருக்கின்றது எனும் கசப்பான உண்மையை உதாசீனம் செய்துவிட முடியாது. இந்த அபாயகர யதார்த்தமானது ஒழுக்கம், சமூகம், சட்டம், அரசியல் மற்றும் பொருளாதாரம் சார் வினாக்களை எழுப்புவதுடன் எம் திருஅவைக்கும் சவால் விடுக்கின்றது. அரசாங்கங்கள் இணையத்தளங்களை நெறிப்படுத்தி அவற்றின் சுயாதீனத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த சட்ட நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கின்ற அதே வேளையில் இணையத்தளங்களில் சரியான பயன்பாட்டை நிலைநிறுத்த எமக்கு வாய்ப்பும், பொறுப்பும் இருப்பதை மறக்கக்கூடாது.

உண்மையில் பரஸ்பர புரிந்துணர்வை வளர்க்க தொடர்பாடல் இணைப்புக்களை அதிகரித்தல் மாத்திரம் பயன் தராது. பின்பு எவ்வாறு நாம் எமது உண்மையான சமூக அடையாளத்தைக் கண்டுகொள்வது? எவ்வாறு வலைப்பின்னல்களில் அடுத்தவர் மீது எமக்கிருக்கின்ற பொறுப்பினை உணர்ந்து கொள்வது?

### ஓர் உடலில் உறுப்புக்களாய் இருக்கின்றோம்.

மூன்றாவது உருவகம் ஒன்றிலிருந்து மேற்கூறிய வினாவிற்கான சரியான பதிலை நாம் பெறலாம். உறுப்புக்களை ஒற்றுமையாக வைத்திருக்கின்ற உயிரினம் ஒன்றை அடிப்படையாக வைத்து மக்களிடையே காணப்படக்கூடிய பரஸ்பர உறவை விளக்க புனித பவுல் பயன்படுத்திய ‘உடலும் உறுப்புக்களும்’ என்கின்ற உருவகமே அது. “ஆகவே பொய்யை விலக்கி ஒருவரோடு ஒருவர் உண்மை பேசுங்கள் ஏனெனில் நாம் யாவரும் ஓருடலின் உறுப்புக்களாக இருக்கின்றோம்.” (எபே. 4:25)

நாம் அனைவரும் ஓருடலின் உறுப்புக்களாக இருக்கின்றோம் என்ற மேலான உந்துசக்தி மூலமாக நாம் பொய்யை விலக்கி உண்மையை பேச திருத்தூதர் புனித பவுல் அழைக்கின்றார். பரஸ்பர உறவுகளின் ஒன்றிப்புக்கு தவறான அர்த்தம் தரப்பட்டு விடக்கூடாது என்கின்ற ஒரு தேவையிலிருந்துதான் உண்மையை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உண்டாகின்றது. உறவுகளின் ஒன்றிப்பில் உண்மை வெளிவருகின்றது. நாம் ஓருடலின் உறுப்புக்கள் என்பதை உணர மறுக்கின்ற சுயநலம் ‘பொய்’ எனப்படுகின்றது. எம்மைப் பிறருக்குக் கொடுக்க மறுக்கின்ற சுயநலம் ‘பொய்’ எனப்படுகின்றது. எம்மைப் பிறருக்குக் கொடுக்க மறுக்கும்போது பொய்யராகி விடுகின்றோம். இவ்வாறு எம்மை அடையாளம் கண்டுகொள்ளக் கூடிய ஒரே வழியையும் தொலைத்து விடுகின்றோம்.

உறவுகளின் ஒன்றிப்பினையும் பிறர்தன்மையும் அடிப்படையாகக் கொண்ட எமது அடையாளத்தைப் பற்றிச் சற்று ஆழமாகச் சிந்திக்க ‘உடலும் உறுப்புக்களும்’ என்கின்ற உருவகம் வழிகோலி நிற்கின்றது. கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்துவைத் தலைவராகக் கொண்ட உடலின் உறுப்புக்களாக இருக்கின்றோம். இது மற்ற மனிதரை எம் போட்டியாளர்களாகக் கருதாமல் எம் எதிரிகளைக்கூட மனித நபர்களாகப் பார்க்க உதவுகின்றது. நாம் எம்மை அடையாளப்படுத்த ஒரு எதிரி இனித் தேவையில்லை. ஏனெனில் கிறிஸ்துவின் அனைத்தையும் கடந்த அன்புப் பார்வை பிறர்தன்மையை எம் உறவுநிலைகளினதும், உறவு நெருக்கத்தினதும் இன்றியமையாத பகுதியாகவும் அவற்றை நிறுவுகின்ற ஒன்றாகவும் புதுவிதத்தில் கண்டுகொள்ள வழிகாட்டுகின்றது.

இவ்விதம் மனித நபர்களுக்குள் இருக்கின்ற தொடர்பாடல் மற்றும் புரிந்துணர்வு ஆற்றல்கள் இறை ஆட்களில் இருக்கின்ற அன்புறவை அடியொற்றி உருவானவை. கடவுள் ஏகாந்தமாய் இருப்பவர் அல்ல. மாறாக அவரே உறவுகளின் ஒன்றிப்பாய் இருக்கின்றார். அவரே அன்பாய் இருக்கின்றார். எனவே அவரே தொடர்பாடலுமாய் இருக்கின்றார். ஏனெனில் அன்பு எப்போதும் தொடர்புகளை உருவாக்க தன்னை வெளிப்படுத்தியவாறு இருக்கும். அன்பு பிறரைச் சந்திக்கவென தானே தொடர்பாடலை ஆரம்பிக்கும். மனிதராகிய எம்முடன் தொடர்புகொள்ளவும், தன்னை எமக்கு வெளிப்படுத்தவும் மனித வரலாற்றில் மாபெரும் உரையாடலை உண்டாக்கி எம் மானிட மொழிக்கு ஏற்றபடி தம் நிலையை கடவுள் மாற்றிக் கொண்டார்.

உறவுகளின் ஒன்றிப்பாகவும் தம்மை வெளிப்படுத்துகின்றவராகவும் இருக்கின்ற இறைவனின் சாயலிலும், பாவனையிலும், படைக்கப்பட்டிருக்கின்ற நாாம் உறவுகளின் ஒன்றிப்பில் வாழவும் ஒரு குழுமத்தில் இணைந்து இருப்பதற்குமான ஏக்கத்தை எம் இதயங்களில் எப்போதும் தாங்கியிருக்கின்றோம். “ஒருவருக்கொருவர் தேவை என்கின்ற அடிப்படையில், ஒருவர் மற்றவருடன் உறவை ஏற்படுத்திக் கொள்ளுதல் மனித இயல்புக்கு மாத்திரம் உரிய பண்பு.” என்கின்றார் புனித பசிலியார். வலைப்பின்னல்களிலும், வலைப்பின்னல்கள் வழியாகவும் உறவாடல்களில் நேரத்தைச் செலவு செய்யவும் எமது மனிதத்தின் ஆளாள்சார் இயல்பை உறுதிப்படுத்தவும் இன்றைய சூழமைவு எம்மை அழைக்கின்றது. அனைத்திற்கும் மேலாக நம்பிக்கையாளர்களாக எம்மை அடையாளப்படுத்துகின்ற உறவு ஒன்றிப்பை எம் வாழ்வில் வெளிக்காட்ட கிறிஸ்தவர்களாகிய நாம் அழைக்கப்படுகின்றோம்.

உண்மையில் நம்பிக்கையானது உறவு என்றே பொருள் பெறுகின்றது, அது ஒரு சந்திப்பு. மேலும் கடவுளின் அன்பினால் தூண்டுதல் பெற்று நாமும் தொடர்புகளை மேற்கொள்ளலாம். “பிறர்” என்றால் எமக்கு இறைவனால் தரப்பட்ட பரிசு என்பதைப் புரிந்துகொண்டு அதற்கு பதிலன்பு காட்டலாம்.

மூவொரு கடவுளில் காணப்படுகின்ற உறவு ஒன்றிப்பின் வடிவமே ஒரு “தனிநபரின்” இருந்து “மனிதநபரை” வேறுபடுத்திக் காட்டுகின்றது. மூவொரு கடவுளில் வைக்கின்ற நம்பிக்கையிலிருந்து தான் நான் நானாக இருக்க பிறர் எனக்குத் தேவை என்கின்ற உண்மை புலனாகின்றது. நான் பிறருடன் உறவாடுகின்ற போது மட்டும்தான் உண்மையான தனிமனித பண்புகளுடனான மனிதன். உண்மையான மனிதன் அவர். உண்மையிலே ஒரு ‘மனித ஆள்’ என்கின்ற பதம் ஒரு மனிதனை தனித்துவ முகத்துடன் சித்தரிக்கின்றது. அவனது முகம் பிறர்பால் திரும்பி அதன் வழியாக பிறரில் தனது ஈடுபாட்டை அவன் காட்டுகின்றான். ஒரு மனிதன் தனது ‘தனிநபர்’ தன்மையிலிருந்து ‘மனிதனவன்’ தன்மைக்கு மாற்றம் பெறுகின்றபோது அவனது வாழ்வு மேம்பட்ட மனித சுபாவத்தை அடைகின்றது. பிறரை போட்டியாளர்களாக பார்க்கின்ற ‘தனிநபர்’ தன்மையிலிருந்து பிறரை தனது உடன் பணியாளராக பார்க்கின்ற மனித நபர் தன்மைக்கு மாற்றம் பெறுகின்ற ஒருவரே மேம்பட்ட மனித சுபாவத்தை அடைகின்ற நம்பகத்தன்மை வாய்ந்த இந்த வழிமுறையை நாம் காணலாம்.

மனிதனின் உடல், இதயம், கண்கள், பார்வை சுவாசம் என்பவற்றினூடாக உயிரூட்டம் பெறக்கூடிய நெருக்கமான சந்திப்புக்களை சமூக வலைத்தளங்கள் முழுமைப்படுத்த வல்லன என்பதை ‘உடலும் உறுப்புகளும்’ பற்றிய உருவகம் எமக்கு நினைவுபடுத்துகின்றது. இவ்வாறான சந்திப்புக்களின் நீட்சியாகவோ அன்றேன் எதிர்பார்ப்பாகவோ வலைத்தளங்கள் பயன்படுத்தப்படுகின்றபோது வலைப்பின்னல் பற்றிய மனவுரு ஏமாற்றம் தராமல் உண்மையான உறவு ஒன்றிப்பின் வளமாகத் திகழ்கின்றது. ஒரு குடும்பம் மென்மேலும் தொடர்புகளைப்பேண வலைத்தளங்களை பயன்படுத்திவிட்டு உணவு மேசையில் வைத்து ஒருவரை ஒருவர் நேருக்குநேர் சந்திக்குமானால் வலைத்தளம் ஒருவளம். எமது அழகான மற்றும் துன்பகரமான அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளவும் ஒன்றுகூடி செபிக்கவும் எம்மை ஒன்றிணைக்கக்கூடிய நல்ல விடயங்களை மீளக்கண்டறியவும் வலைத்தளம் ஒருவாய்ப்பாக இருக்குமானால் அது ஒரு வளம்.

### தனிப்பட்ட விருப்புகளிலிருந்து கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டு எல்லோருக்கும் எல்லாமாக

இவ்விதம் நோயின் அறிகுறிகளைக் கண்டறிந்து குணமாக்கல் நோக்கிச் செல்லலாம். உரையாடல்களுக்கான சந்திப்புக்களுக்கான புன்னகைகளுக்கான அன்புப்பரிமாற்றங்களுக்கான வழியைத் திறந்து வைக்கலாம். இவ்விதமான வலைப்பின்னலே எமக்கு வேண்டும். சிக்கவைக்காமல் விடுதலை தரக்கூடிய மக்களின் உறவு ஒன்றிப்பை பாதுகாக்கக்கூடிய அவர்களின் சுதந்திரத்தை பாதுகாக்கக்கூடிய வலைப்பின்னல்கள் தான் எமக்குத் தேவை. திருஅவையும் நற்கருணை என்னும் உறவு ஒன்றிப்பால் பின்னப்பட்ட வலைப்பின்னலாக இருக்கின்றாள். அங்கே தனிப்பட்ட விருப்புக்கள் அடிப்படையிலல்ல மாறாக உண்மையின் அடிப்படையில்தான் ஒன்றிப்பு பேணப்படுகின்றது. இதனால்தான் அங்கே ஒவ்வொருவரும் ஆமேன் எனச் சொல்லி கிறிஸ்துவின் உடலை பற்றிக்கொண்டு பிறரை வரவேற்கின்றார்கள். ●

## உலக சமூகத் தொடர்பு தினத்தை ஒட்டி திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி

இந்நாளையொட்டி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வெளியிட்டுள்ள இரண்டாவது டுவிட்டர் செய்தியில், “கிறிஸ்தவர்கள் என்ற முறையில், உரையாடல், சந்திப்பு, புன்னகைகள் ஆகியவற்றுக்கு வழிகளைத் திறந்து, விசுவாசிகள் என்ற நம் தனித்துவத்தை இணையத்தளம் வழியாகவும் வெளிப்படுத்த அழைக்கப்பட்டுள்ளோம்” என்ற வார்த்தைகளைப் பதிவு செய்துள்ளார். ●

## மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம் :

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, ‘MANNA’
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

## மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவைக் காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள் அல்லது பொதுநிலைப் பணியாளர்கள் இது விடயத்தில் அதிக அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம். - **மன்னா நிர்வாகம்.**

# அழுது மன்றாடு மானிடமே

அருட்பணி. C.J. அன்ரனி பாலா



"நித்திய பிதாவே! எமது பாவங்களுக்காகவும் உலகின் பாவங்களுக்காகவும் பரிகாரம் செய்யும்படியாக, உமது நேசக் குமாரனாகிய எமது ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவின் உடலையும் இரத்தத்தையும் ஆன்மாவையும் தெய்வீகத்தையும் உமக்கு ஒப்புக் கொடுக்கின்றோம்". "இயேசுவின் துன்பகரமான பாடுகளைப் பார்த்து, எங்கள் மீதும் முழு உலகின் மீதும் இரக்கமாயிரும்".

மேலே தரப்பட்ட செபங்கள் இறையிரக்கப் பக்தியில் ஈடுபடுவோர் அனைவரும் செபிக்கும் இறையிரக்கச் செபமாலையின் செபங்களாகும். "வியப்புக்குரிய அன்பினால் கிறிஸ்து சிலுவையில் உயர்த்தப்பட்டுத் தம்மையே எமக்காகக் கையளித்தார். குத்தித் திறக்கப்பட்ட விலாவில் இருந்து இரத்தமும் தண்ணீரும் வழிந்தோடின. இதிலிருந்து திருச்சபையின் அருட்சாதனங்கள் வெளிப்பட்டன. மீட்பரின் திறந்த இதயத்திடம் அனைவரும் ஈர்க்கப் பெறவும் மீட்பளிக்கும் ஊற்றுக்களில் இருந்து மகிழ்ச்சியுடன் முகந்துகொள்ளவும் இவ்வாறு செய்தருளினார்." என்று இயேசுவின் திருஇருதயத் திருவிழாத் திருப்பலி நன்றிப் புகழுரை வார்த்தைகள் இயேசுவின் அன்பின் ஆழ, அகல, உயர, நீளத்தை எமக்குத் துல்லியமாக எடுத்துக்காட்டுகின்றன.

புனித பவுஸ்தீனா என்னும் இறையிரக்கத்தின் தூதுவராகிய அருட்சகோதரிக்குக் காட்சி கொடுத்த இயேசு உலகத்தின் பரபரப்புக்களால் கவரப்பட்டு மீண்டுவர முடியாமல் பாவத்திலேயே அமிழ்ந்திப் போயிருக்கும் மானிடத்தின் இறுதிக்கதி இறையிரக்கத்தை நோக்கிக் கூக்குரலிட்டு மன்றாடுவதாகும் என்றுரைத்தார். சாத்தான் பணத்தால் மனித மாண்பை விலைபேசி அழிவுக்கு இட்டுச் செல்கின்றான். பணமே இன்றைய நவீன உலகில் அனைத்தையும் கட்டுப்படுத்தி இயக்குகின்றது. உலகம் முழுவதும் உள்ள அனைத்து அமைப்புக்களும் பணமின்றி இயங்காத ஒரு கையாலாகாத அவல நிலையைக் காண்கின்றோம். போதைப் பொருள் பாவனையும் வன்முறைக் கலாச்சாரமும் பணத்துக்காகவே நிகழ்த்தப்படுகின்றன. இவற்றோடு தொடர்புடையவர்கள் கூட மூளைச்சலவை செய்யப்பட்ட கணித, விஞ்ஞான, பொறியியல் வேலையில்லாப் பட்டதாரிகளேயாவர்.

விலைவாசி உயர்வும், வேலையில்லாத் திண்டாட்டமும் அரசின் நிரந்தரமற்ற தன்மையும், கொள்கையற்ற அரசியலும் அரசின் ஏமாற்று நாடகங்களும், பொருளாதார மற்றும் தொழில்நுட்ப உற்பத்திப் பெருக்கமும், நுகர்வோர் கலாசாரமும் பணம் பெருக்குவதற்காகச் செய்யப்படும் பாவத்தின் விளைவுகளேயாகும். இவ்வாறு குற்றம் செய்வோர் தாம் செய்வது குற்றம், பாவம், துரோகம் என்ற குற்ற உணர்வு இல்லாமல் உலகம் முழுவதிலும் வாழ்கின்றனர். இதனால் இறைவனில் நம்பிக்கை வைத்து வாழ முற்படுவோர் முழு உலகின் மேலும் இறைவன் இரங்க வேண்டுமென்று தம்மை அர்ப்பணித்து மன்றாடுபவர்களாகவும் உலகத்தோரின் பார்வையில் ஒன்றும் இல்லாத ஏதிலிகளாகவும் தென்படுகின்றனர். புனித பவுஸ்தீனா, புனித பியோ அடிகள் மற்றும் பத்திமாவில் காட்சி பெற்ற பிள்ளைகள் உட்பட பல புனிதர்களுக்கு பிள்ளைகள் மயங்கி விழுமளவிற்கும், புனித பவுஸ்தீனா சாத்தானால் அச்சுறுத்தப்படுமளவிற்கும், நரகத்தின் கொடூரத்தையும் உத்தரிப்பு நிலையின் அவலத்தையும் காட்டியிருக்கின்றார் இறைவன். இறைமகன் இயேசுவே விண்ணக வாழ்வையும், (மத் 25:34) நரகத்தின் வேதனைகளையும் (மத் 25:41) அவற்றின் முடிவில்லாக்கால இருத்தலையும் (லூக் 16:19-31) நற்செய்தியில் கூறியிருக்கின்றார். இதைவிட வேறு ஆதாரங்கள் எமக்குத் தேவையா? இன்றைய நவீன யுகத்திலுள்ளோர் பலர் இதை மறுத்தாலும் இறைவனின் வார்த்தை பொய் சொல்லாது. இயேசுவின் கல்லறையருகில் முதல் காட்சி பெற்ற புனித மகதலா மரியா, இராவுணவு வேளையில் இயேசுவின் மார்பில் சாய்ந்திருந்து இதயத் துடிப்புக்களை உணர்ந்த நற்செய்தியாளர் புனித யோவான், புனித மார்க்கரீத் மரியா, புனித கேற்றூட் போன்ற பலருக்கு இயேசு தனது அன்பின் ஆழத்தையும் அதற்கெதிராக மனித குலம் செய்யும் நன்றி கெட்ட துரோகங்களையும் வெளிப்படுத்தியிருக்கின்றார். இந்த நன்றி கெட்ட துரோகங்களுக்கு எவ்வாறு பரிகாரம் செய்வது என்று மார்க்கரீத் மரியா கேட்டபோது முதல் வெள்ளிக்கிழமைப் பக்தியும் இல்லங்கள் தோறும் தமது இதய அரசாட்சியை ஏற்படுத்துவதுமாகும் என்று பதிலளித்தார். அதாவது மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமைக்கு முதல்நாள் வியாழக்கிழமை திருமணி ஆராதனையில் பங்கெடுத்து நல்ல பாவஅறிக்கை செய்து மறுநாள் முதல் வெள்ளியன்று முழுத் திருப்பலியில் பங்கெடுத்து தகுதியோடு தூய நற்கருணை பெற்று இவ்வுலகில் வாழும் மனக்கடினமுள்ள பாவிகளின் மனமாற்றத்திற்கும் உத்தரிப்பு நிலையில் உள்ள ஆன்மாக்களின் மீட்புக்கும் ஒப்புக்கொடுத்தால் தனது இதய அன்பிற்கெதிரான நிந்தைகளுக்குப் பரிகாரம் செய்யலாம் என்று கூறியிருக்கின்றார். மேலும் ஒவ்வொரு குடும்பமும் நல்ல பாவ அறிக்கை செய்து. தூய நற்கருணை பெற்று பங்குத்தந்தையை வீட்டில் வரவேற்று அயலவர்களை ஒன்று கூட்டித் திருஇருதய அரசாட்சியை வீடுகளில் ஏற்படுத்தி தமது தகுதிக்கேற்ப அந்நாளை அயலவருடன் கொண்டாடி வருடந்தோறும் புதுப்பிப்பதனூடாகத் தம்மையே குடும்பங்களின் தலைவராக அரசராக ஆண்டவராக ஏற்று நாள்தோறும் செபத்தில் நிலைத்திருந்தால் அக்குடும்பங்களின் மேல் ஆசீர்களைப் பொழிவேன் என்றும் இயேசு மார்க்கரீத் மரியாவுக்குக் கூறியிருக்கின்றார். ஒவ்வொரு பங்கும் மறைமாவட்டமும் நாடு முழுவதும் அன்பின் இதயத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படவேண்டும் என்றும் கூறியுள்ளார். இதையே கெலன் கௌவல்ஸ்கா என்னும் புனித பவுஸ்தீனா மூலம் கூறியிருக்கின்றார் இயேசு. தனது வல்லமையை இறையிரக்கப் பக்தியாக வேறொரு வடிவத்தில் வெளிப்படுத்தியுள்ளார். தான் இறந்த பெரிய வெள்ளி தொடக்கம் ஒன்பது நாள் செபம் செய்து உயிர்ப்பு ஞாயிறுக்குப் பின்வரும் ஞாயிறாகிய புனித தோமையாரின் நம்பிக்கை அறிக்கை ஞாயிறு தினத்தை இறையிரக்கப் பெருவிழாவாகக் கொண்டாடும்படியும் தன்னைக் காட்சியில் கண்டவாறே வரைந்து "இயேசுவே நான் உம்மில் நம்பிக்கை வைக்கின்றேன்", என்று எழுதி மக்களின் மன்றாட்டுக்கு வைக்கும் படியும் கூறினார். தற்போது முதல் வெள்ளி தொடக்கம் மாதாந்தப் பக்தியாக உலகம் முழுவதும் பங்குகள் தோறும் இது இடம்பெறுகின்றது. இயேசுவின் திருஇதயப்பக்தியில் ஈடுபாடு குறைந்ததற்கும் இறையிரக்கப் பக்தியில் ஈடுபாடு கூடியதற்கும் காரணங்கள் உண்டு. திருஇருதயப்பக்தியில், திருமணி ஆராதனையில் பங்கெடுத்தல், பாவ அறிக்கை செய்தல், முதல் வெள்ளியில் முழுத் திருப்பலியில் பங்குபற்றித் தகுதியோடு தூய நற்கருணை உட்கொள்ளல், நாளாந்தம் குடும்பமாக வீடுகள் தோறும் திருஇருதய அரசாட்சிப் படத்தின் முன் செபித்தல் போன்ற பல செயற்பாடுகள் காரணமாக முன்னையதில் ஈடுபாடு குறைந்திருக்க வாய்ப்புண்டு. இறைவன் தனக்கும் தனது குடும்பத்திற்கும் ஏற்பட்ட கடன் தொல்லைகள், துன்பங்கள் மட்டில் இரங்க வேண்டும் என்ற ஒருவித சுயநலத்துடன் கூடிய "தா, தா" பக்தியாக மாறியமையும் பின்னையதன் விரைவான பரம்பலுக்குக் காரணமாகலாம்.

திருச்சபையானது இவற்றை ஒருபுறம் தனிப்பட்ட வெளிப்பாடுகள் என்று ஊக்கப்படுத்தாமல் இருந்துவிட மறுபுறம் பொதுநிலையினரின் ஈர்ப்புக் காரணமாக நாம் கேட்பதெல்லாம் கிடைக்கும் என்ற சுயநலத்துடன் கூடிய பக்திமுயற்சியாகவும் மாறியுள்ளது. இறையிரக்கம் செய்தபடியால்தான் மகனுக்கு விசா கிடைத்தது, வேலை கிடைத்தது, நோய் நீங்கியது, மகளின் திருமணம் நிறைவேறியது என்று பலர் சொல்வார்கள். நம்பிக்கையோடு கேட்கும்போது இறைவன் தான் விரும்பியதைத் தருவார். அது உண்மை. ஏனென்றால் இன்றைய நெருக்கடிகளின் மத்தியில் உலகம் முழுவதும் அவநம்பிக்கை நீங்கி எல்லோரும் இறைவனை மட்டுமே நம்பும் நம்பிக்கையாளர்களாக மாற வேண்டுமென்று செபிப்பதே இறையிரக்கப்பக்தியின் நோக்கமாகும்.

எனவே நான் மனம் மாறி நல்ல பாவ அறிக்கை செய்து புதிய ஆளாக வாழ்கின்றேன். எனது குடும்பம் இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட அவருக்காகவே அனைத்தையும் தாங்கி, எல்லாம் செய்கின்ற புதிய குடும்பமாக வாழ்கின்றது. அல்லது நானறிந்த ஓர் மனக்கடினமுள்ள பாவியை மனம் மாறிவாழ இறைவன் செய்துள்ளார். அல்லது உத்தரிப்பு நிலையில் உள்ள ஓர் ஆன்மாவாவது மீட்படைய நான் மேற்சொன்ன இறையிரக்கப் பக்தியை செய்கின்றேன் என்று யாராவது சொன்னால் அது வரவேற்கத்தக்கதாகும். ஏனென்றால் ஒருபாவியின் மனமாற்றமும் ஓர் ஆன்மாவின் மீட்பும் எவ்வளவு விலைமதிப்பில்லாதது என்றால் அவை கோடிக்கணக்கான திருப்பலிகளை எதிர்பார்க்கின்றன. இவ்வுலக வாழ்வில் இரக்கத்தைப் பொழியும் இறைவன் மறு உலகில் நீதியின் அரசராகவே இருப்பார். இவ்வுலகில் அவர் தரும் சந்தர்ப்பங்களை வீணாக்கிவிட்டு மறுவுலகில் அவர் இரங்கவேண்டும் என்று மன்றாடுவது எமது மடமைத்தனமாகும். அவரது நீதியே உத்தரிப்பு நிலையாகும். ஏனெனில் பாவியும் நீதிமானும் ஒன்றாக விண்ணகம் செல்வது அவரது நீதிக்கு முரணானதாகும். இறைவன் நீதியுள்ளவர் என்றபடியால் எமது சொந்தங்களுக்காக ஒப்புக் கொடுக்கப்படும் பலிகள் யாவும் மறைமுகமாக யாரும் நினையாத ஆன்மாக்களுக்கே போய்ச் சேருகின்றன என்பதை மனதிற் கொண்டு பாவப்பரிகாரக் கொண்டாட்டமாகிய ஒவ்வொரு திருப்பலியிலும் வெளித் தியாகங்களிலும் இறையிரக்கத்தைக் கூவியழைத்து அழுது மன்றாடுவோம்.●

# சுட்டெரிக்கும் அனலா? ஒளிர்விக்கும் அகலா?

– அருட்பணி. C.J. அன்ரனி பாலா –

கத்தோலிக்க திருச்சபை தொடங்கிய பெந்தக்கோஸ்து நாளில் இடம்பெற்ற மூன்று அடையாளங்களும் தூய ஆவியில் வாழப்படவேண்டிய புதுவாழ்வை உலகிற்கு பறைசாற்றியது. "திடீரென்று கொடுங்காற்று வீசுவது போன்ற இரைச்சல்" (திப 2:2), "நெருப்புப் போன்ற பிளவுற்ற நாவுகள்" (திப 2:3), "இதோ பேசுகின்ற இவர்கள் அனைவரும் கலிலேயர் அல்லவா? அவ்வாறிருக்க நம்முடைய தாய் மொழிகளில் இவர்கள் பேசுவதை நாம் ஒவ்வொருவரும் கேட்பதெப்படி?" (திப2:78) போன்ற அடையாளங்கள் தூய ஆவியாரின் வல்லமையின் வழியான புதிய படைப்பைப் பறைசாற்றியது. பயந்து கோழைகளாகக் கதவுகளை மூடி அவமானத்தால் குறுகிப்போய் வெளியே தலைகாட்ட இயலாதவர்களாக இருந்த திருத்தூதர்களையும் ஏனைய ஆண் பெண் சீடர்களையும் ஆட்டங்காண வைத்துப் பழமையைத் தகர்த்தெறிந்து புதிய வாழ்வில் உறுதிப்படுத்தத் தேவைப்பட்டதே முதல் அடையாளமாகும். அன்னை மரியாவின் செப வழிநடத்தலின் கீழ் ஆன்மீகத்தில் படிப்படியாகத் தென்படைந்து கொண்டிருந்தவர்களை முழுமையாக ஆட்கொள்ளப் பயன்பட்டதே இரண்டாவது அடையாளமாகும். இனமதமொழி பேதமற்ற முறையில் (கத்தோலிக்கம்) எல்லோரையும் அரவணைக்கின்ற "கலிலேயரின் மொழியை மட்டும் பேசும்" கூட்டமாகவும், தத்தம் மொழிகளில் விளங்கி ஒன்றுபடும் கூட்டமாகவும், இயேசுவுக்காக முதல் மூன்று நூற்றாண்டுகளில் இரத்தச் சாட்சியம் பகரக்கூடிய கூட்டமாகவும், யோவேலின் இறைவாக்கிற்குச் (யோவே 2:28-32) சான்று பகரும் சிறுமந்தையாகவும் உருவாகிட வைத்ததே மூன்றாவது அடையாளமாகும்.

இலங்கைத் தீவைப் பொறுத்தவரை பல தசாப்தங்களாகக் காத்திருந்த தூயஆவியார் 2019 உயிர்த்த ஞாயிறு அன்று மாபெரும் ஆழமான செய்தியொன்றைக் கத்தோலிக்கத் திருச்சபைக்குக் கொடுத்துள்ளார். அரசியல் பொருளாதார கல்வி கலை கலாசார இராஜ தந்திரங்களுக்குள் மயங்கி மூழ்கிப் போயிருந்த இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையினர், மயக்கம் தெளிந்து யதார்த்தவாதிகளாக (உண்மையை உரத்துச் சொல்லி உண்மைக்காகவே தம்முயிரைக் கொடுக்கும் தியாகிகளாக) சான்று பகரவும் எதிர்ப்புகள் இடையூறுகள் அவமானங்களைப் பொருட்படுத்தாது தாங்கிக் கொண்டு இனமதமொழி பேதம் பாராது இறையரசின் விழுமியங்களை நேரடியாகப் பறைசாற்றவும், இரக்கச் செயல்களில் ஈடுபடவும், உலகோர் எல்லோரும் இறையிரக்கத்தில் நம்பிக்கை வைக்குமாறு மன்றாடவும், தூய்மையின் வழி நின்று இயேசுவுக்காகவே வாழ்வோம் என வீறுகொண்டெழவும் வேண்டுமென்ற பல செய்திகளை முன்வைத்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பில் இறந்தவர்களை இறைவன் ஏன் காப்பாற்றவில்லை என்று பலர் கேட்கின்றார்கள். அன்றைய தினம் கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றிக் கொண்டிருந்த போது குண்டு வெடித்தவேளை எவ்வித காயங்களும் இல்லாமல் தப்பிய அருட்தந்தை ஜோய் மரியரட்ணம் அடிகளாரும் அன்று தப்பிய ஏனைய மக்களும் கொண்டிருந்த உணர்வுகள் எமக்கு ஆழமான செய்திகளைத் தருகின்றன. அருட்தந்தை அவர்கள் "முதலாவது கடவுள் காப்பாற்றினார். இரண்டாவதாக உயிரிழந்த அந்தச் சின்னக் குழந்தைகள், உயிரிழந்த அந்த அம்மாமார், அப்பாமார், என்னையும் இந்தக் கோயிலில் இருந்த இன்னும் பலரையும் காப்பாற்றுவதற்குக் கேடயமாக இருந்தாங்கள். எங்களுக்காக உயிர் கொடுத்த உன்னதமான தியாகிகள்தான் அவர்கள். அவர்களுக்கு முன்னால் நாங்கள் தலை வணங்குகின்றோம். அவர்கள் அறியாமல் எங்களுக்காக உயிர் கொடுத்த உயிர்த் தியாகிகள் என்பதில் எக்க எந்தவிதமான சந்தேகமுமில்லை." என்று கூறிய வார்த்தைகள் கிறிஸ்தவ வாழ்வு ஓர் பலிவாழ்வுதான் என்பதை தெளிவாக உலகிற்குப் பறைசாறியுள்ளது. இக்கூற்று இயேசுவின் போதனையால் கருவாகி முதல் மூன்று நூற்றாண்டுகளில் தூயஆவியின் வழிநடத்தலால் உருவாகி பல்லாயிரக்கணக்கான மறைசாட்சியர்களின் இரத்தத்தால் எருவூட்டப்பட்ட கத்தோலிக்க திருச்சபையின் உண்மைத் தன்மையை எடுத்துக் காட்டகின்றது.

அதாவது குழந்தை இயேசுவைக் காப்பாற்ற தம்முயிரீந்த வாய்பேசாத மாசில்லாக் குழந்தைகள் (மத் 2:16) முதல், தொடக்க காலத் திருச்சபையில் இடம்பெற்ற யூத மற்றும் பத்து உரோமை மறைத் துன்பங்களிலும், நாங்களும் எங்களது குழந்தைகளும் கிறிஸ்தவர்களே என்று கூறி யதார்த்தவாதிகளாக (உண்மையை உறுதிபட உரைத்து வாழ்பவர்களாக) கிறிஸ்தவர்கள் பலர் ஐரோப்பிய ஆபிரிக்க நாடுகளில் கொடிய மிருகங்களுக்கு இரையாக்கப்பட்டார்கள். சிலுவைகளில் அறையப்பட்டார்கள். வாளால் வெட்டிக் கொல்லப்பட்டார்கள். தாரும் கெந்தகமும் குங்கிலியமும் உடலில் ஊற்றப்பட்டு இரவில் தீப்பந்தங்களாக எரிக்கப்பட்டார்கள். இவ்வாறு தூயஆவியாருக்குச் செவிமடுத்து உண்மைக்குச் சான்று பகர அவரால் பயிற்சிபெற்ற திருச்சபை, கி. பி. 313 இல் சுதந்திரம் கிடைத்த பின்னர் இரத்தச் சாட்சியமும், தியாகங்களும் அகன்றுபோக சீரழிவையும் அழிவையும் சந்தித்தது. இராஜதந்திர சமாளிப்புகளும், தப்பிக்கொள்ளும் தன்மைகளும், சுயநலம், பதவிமோகம், சர்வாதிகாரம், சொத்தாசை, நிலஆசை, (உலகை ஆள முற்பட்ட ஒருசிலருக்காக கோடிக்கணக்கான அடிமைகளையும் சொந்த மக்களையும் பலியெடுத்த வரலாற்று யுத்தங்கள் முடிவில்லாத தொடர்கதைகள்), பணஆசை, (கோடீஸ்வரர்களாகுவதற்காக வழங்கப்படும் மண் பெண் பொன் மற்றும் போதைவஸ்து, கருத்தடை மாத்திரைக் கொடுக்கல் வாங்கல்கள்) என்பவைகளும் ஆன்மீகத்தில் உலகியல் ரீதியான கட்டுப்பாடுகளும் இறை பயமற்ற பக்தியும் உட்புகுந்ததனால் ஏறக்குறைய 1800 வருடங்களாக தூயஆவியார் மறக்கப்பட்டு உலக ஆதாயங்கள் பெருமைகள் செல்வாக்குகளுக்காகத் தப்பிக் கொள்ளும் சமூகமாக கத்தோலிக்க திருச்சபை மாறிவிட்டது என்பதையே உயிர்த்த ஞாயிறு திருப்பலி வேளையில் கொல்லப்பட்ட சிறியோரும், இளையோரும், பெரியோரும், முதியோரும் வாய்மூடிச் சொல்லிவிட்டார்கள். கத்தோலிக்கத் திருச்சபையானது தூய ஆவியால் வழிநடத்தப்படுவதால் ஒருபோதும் ஆட்டங்காணாது, அழியாது. இதுவே உண்மை. வெட்டவெட்டத் தளைக்கும் மரம் போன்று, விழ விழ எழுவோம் என்பதற்கிணங்க, எதிர்க்காத பழிவாங்காத, எதிர்காலத்தில் தமது சாட்சியத்தைத் தொடரப் பலர் இறை உந்துதலினால் முன்வருவார்கள் என்ற இறைநம்பிக்கையுடன் பல்வேறு, விசேடமாக ஆசிய, அராபிய, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் காவல் நிலையங்களிலும், சிறைகளிலும், சித்திரவதை முகாம்களிலும் தம்மைச் சாவுக்கு இன்றுவரையும் கையளித்துக் கொண்டிருக்கும் கிறிஸ்தவர்களாலேயே கிறிஸ்தவ நம்பிக்கை அறிவிக்கப்பட்டு வாழப்படுகின்றது. தூயஆவியாரின் வல்லமை சாட்சிப்படுத்தப்படுகின்றது. மேலும் எமது பேராயர் கார்தினல் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் சாட்சியம் இங்கு தெளிவாகின்றது. இப்பாரிய அவலத்திற்கு அடுத்த ஞாயிறு திருப்பலியில் முக்கிய அரசியல் தலைமைகள் முன்பு ஆற்றிய மறையுரையில் இயேசு சிலுவையில் தொங்கியபோது தன்னை வதைத்தவர்களை மன்னிக்குமாறு தந்தையிடம் மன்றாடினார். ஆகவே எவரையும் சந்தேகப்படவேண்டாம். கோபப்படவேண்டாம். பழிவாங்க வேண்டாம்.

➡ 13



# மாணவர் மன்னா



## விவிலிய வினாவிடைப் போட்டி இல: 11 [திருத்தூதர் பணி 11 – 19 வரை]

### போட்டி விதிகள்

1. விடைத்தாளிலே விடைகளை எழுதி அனுப்புதல் வேண்டும்.
2. உங்கள் விடைகளை 01.08.2019ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஷ்டசாலிகளுக்குப் பரிசுத்தொகை அனுப்பிவைக்கப்படும்.
3. மறைக்கல்வி மாணவர்கள் மட்டும் பங்குபற்றலாம். (தரம் - 3 முதல் தரம் 12 வரை)
4. முழுமையாக சரியான விடைகளை எழுதுவோரின் பெயர்கள் மட்டும் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.
5. உங்கள் விடைப் பத்திரத்தில் பெயர், கல்விகற்கும் தரம், பங்கு, விலாசம் குறிப்பிடுதல் வேண்டும்.
6. பங்குத்தந்தையின் கையொப்பம் பெறல் வேண்டும்.
9. “விவிலிய வினாவிடைப் போட்டி - 11”, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல 202, தலைமன்னார் வீதி, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

### விவிலிய வினாக்கள்

01. “வேண்டவே வேண்டாம் ஆண்டவரே, தீட்டானதும் தூய்மையற்றதுமான எதுவும் ஒருபோதும் என்வாய்க்குள் சென்றதில்லையே” என்று கூறியவர் யார்?

02. யோவானின் சகோதரரான யாக்கோபை வாளால் கொன்றவர் யார்?

03. பேதுரு யூதேயாவை விட்டு எங்கு சென்று தங்கினார்?

04. தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட சவுல் யாரைப் பார்த்து குறிப்பிட்ட காலம் வரை நீ பார்வையற்றவனாய் இருப்பாய் என்று கூறினார்?

05. அருள் வழங்கும் கடவுளின் பணிக்கென பவுலும், பர்னபாவும் அர்ப்பணிக்கப்பட்ட இடம் எது?

06. பர்னபா யாரைக் கூட்டிக் கொண்டு சைப்பிரசுக்கு கப்பலேறிச் சென்றார்?

07. மாசிதோனியாவின் முக்கிய நகரமும் உரோமையரின் குடியேற்ற நகரமாகவும் காணப்பட்ட நகரம் எது?

08. “நான் ஆண்டவரில் நம்பிக்கை கொண்டவர் என்று நீங்கள் கருதினால் என் வீட்டுக்கு வந்து தங்குங்கள்” என்று பவுலிடம் கெஞ்சிய பெண் யார்?

09. “அஞ்சாதே பேசிக் கொண்டேயிரு நிறுத்தாதே ஏனெனில் நான் உன்னோடு இருக்கின்றேன். எவரும் உனக்கு தீங்கிழைக்கப் போவதில்லை. இந்நோக்கத்தில் எனக்குரிய மக்கள் பலர் இருக்கின்றனர்” என்ற இறைவார்த்தை வசனம் இடம்பெறும் பகுதி எது?

10. பெருந்தேவதையான அர்த்தமியின் கோவிலும் வானிலிருந்து விழுந்த அதன் சிலையும் எந்நகரில் பாதுகாப்பாக இருக்கின்றது?

## சிந்திக்க சில வரிகள்

- மரியாதை பெறும் ஒரே வழி அதனை முதலில் கொடுப்பதாகும்.
- எல்லா சந்தர்ப்பத்திலும் சமநிலையுடன் இருப்பதுதான் மகிழ்ச்சி.
- நிரந்தரமற்றதின் மீது அன்பு செலுத்துவது உன் தோல்வியின் முதல்படியாக அமையும்.
- பிடிவாதமும், கோபமும் உன் இயலாமையின் வெளிப்பாடாகும்.
- வாழ்வின் அறநெறியை தேடுபவன் தன் வாழ்வின் அன்பு நெறியை உணர்ந்திருத்தல் அவசியம்.
- பொறுமையால் வாழ்வைப் பெற்றவரும் உண்டு, இழந்தவரும் உண்டு.
- தொடங்கிய இடத்தை தெரிந்துகொள், அப்போதுதான் முடிக்கும் இடத்தை அறிந்து கொள்ளலாம்.
- அன்பு என்றும் உன் உள்ளத்திலிருந்தால் அறிவு என்றும் உன்னை விட்டகலாது.
- உன் சோம்பேறித்தனம் உன் வாழ்வின் தடைக்கல்லாய் அமையலாம், எச்சரிக்கையாய் இரு.
- வாழ்வில் உன் தோல்வியைக் கண்டு மகிழும் ஒருவரையேனும் நீ பெற்றிருப்பின், உன் வாழ்வின் பெரிய முதல் தோல்வி அதுவாகவே இருக்கும்.
- அநியாத்திற்கு ஆயிரம் வக்கீல்கள் தேவை ஆனால், நியாயத்திற்கு கடவுளின் கருணை மட்டும் போதும்.
- உன் விதியை நீயே நிர்ணயம் செய், இல்லையென்றால் மற்றவர்கள் நிர்ணயித்து விடுவார்கள்.
- வாசிப்புப் பழக்கம் என்பது அருமையான ருசி, அழகான பசி ஒரு முறை சுவைக்கப் பழகிவிட்டால் அது தொடர்ந்து வரும்.
- செபம் என்பது கடவுளிடம் ஏதாவது கேட்பதல்ல. அது ஆன்மாவின் ஏக்கமாகும்.
- தோல்வி என்றால் நீங்கள் தோற்றவர் என்று பொருளல்ல இன்னும் வெற்றி அடையவில்லை என்றுதான் பொருள்.

# கிறிஸ்தவ மறைக்கல்வியின் அர்த்தமுள்ள பரிமாணங்கள்

- அருட்சகோ. செ. டிசாந்தன், புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி, யாழ்ப்பாணம் -

இவ்வுலகில் தோன்றும் ஒவ்வொரு உயிரினங்களும் ஏதோ ஒரு வகையில் “அன்பு” என்னும் ஒரு உன்னதமான உறவினை அல்லது யதார்த்தத்தினை அனுபவிக்கின்றது என்று சொன்னால் அது மிகையாகாது. மானிட பிறவியாக இருந்தாலும் சரி, ஏனைய உயிரினங்களாக இருந்தாலும்சரி அன்பினை அனுபவிக்காமல் இவ்வுலகிலிருந்து பிரிவதில்லை. சிறப்பாக கடவுளின் சாயலாகவும், பாவனையாகவும் கடவுளால் படைக்கப்பட்ட மனிதன் இவ் அன்பினை பல்வேறுபட்ட பிரிமாணங்கள் ஊடாக அனுபவித்து மகிழ்கின்றான. சிலர் அன்பினை நட்பு மூலமாகவும், சிலர் தோழமை மூலமாகவும் பலர் பாசத்தினூடாகவும் அனுபவிக்கின்றனர். அன்பிற்கு பலரும் பல்வேறுபட்ட வரைவிலக்கணங்களைக் கொடுத்தாலும் இயேசுக்கிறிஸ்து கொடுத்த வரைவிலக்கணம் போன்று யாராலும் கொடுக்க முடியாது என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகும். இயேசு தன்னையே மற்றவருக்காக சிலுவை மரத்தில் பலியாக்கினார். இந்த மாபெரும் அன்பினை கிறிஸ்தவர்களாகிய ஒவ்வொருவரும் அனுபவிக்கின்றனர். இன்னும் உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனதோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு செலுத்து, மற்றும் உன்மீது நீ அன்பு கூர்வதுபோல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக (மத்தேயு 22:37-38) என்று முதன்மையான அன்புக்கட்டளையை கொடுத்து, அன்பு செய்து வாழும்படி அழைப்பு விடுகின்றார். இந்த அன்பின் பல பரிமாணங்களில் ஒன்று தான் கிறிஸ்தவ மறைக்கல்வி கற்பித்தல். அந்த மறைக்கல்வியின் பரிமாணங்கள் என்ன? பொதுவாக மூன்று முக்கிய பரிமாணங்கள் மறைக்கல்விக்கு உண்டு அவை.

1. அறிவித்தல் 2. வழிகாட்டுதல் 3. ஆற்றுப்படுத்துதல்

திருமுழுக்கினூடாக யாவரும் மறையறிவிப்பாளராக மாறினாலும் இந்த மறைக்கல்வியின் பரிமாணங்களாகிய அறிவித்தல், ஆற்றுப்படுத்துதல் மற்றும் வழிகாட்டுதல் பற்றி போதிய அறிவும், அனுபவமும், ஆற்றலும் முதலில் மறையாசிரியர்களுக்கும் இருக்கவேண்டும். அப்போதுதான் மறைக்கல்வியினை மற்றவர்களுக்கு கற்றுக் கொடுக்க முடியும். எனவே இந்த மறைக்கல்விப் பரிமாணங்கள் உலக கல்வியில் இருந்து பெறப்பட்டவை என்றாலும் அவை ஒவ்வொன்றும் தம்மிலே முழுமையானவை மட்டுமல்ல ஒன்றோடு ஒன்று தொடர்புள்ளவை. அர்த்தமுள்ள ஆழமான மறைக்கல்விக்கு இந்த மூன்று பரிமாணங்களும் தத்தமது பங்கேற்பை ஆற்ற வேண்டும். மறைக்கல்வி கற்பிப்பதன் நோக்கம் மற்றும் ஆற்றுப்படுத்தல் கிறிஸ்தவர்களாகிய எமக்கு கிறிஸ்தவ வாழ்வையும், நம்பிக்கையையும் எவ்வாறு வழிநடத்த முடியும் என்பதைப் பார்ப்போம்

### 1. மறைக்கல்வியின் அறிவித்தல் பரிமாணம்

பொதுவாக அறிவித்தல் என்பது பல அர்த்தங்கள், கருத்துக்களைக் கொண்டிருந்தாலும் மறைக்கல்வியில் அறிவித்தல் வழியாக போதுமான அளவு மறையறிவு புகட்டப்படுகின்றது. மறைக்கல்வி என்பது தாய்த்திருச்சபையின் தலையாகிய கடமையாகும். எல்லா கிறிஸ்தவர்களுக்கும் இந்தக்கடமை உண்டு. திருச்சபையின் பல்வேறு செயற்பாடுகளுக்கு மத்தியில் மறைக்கல்வியை கற்றுக்கொடுத்தலே மிகமிக முக்கிய செயற்பாடாக உள்ளது.



ஆகவே மறைக்கல்வி மட்டில் எனது கடமை என்ன? என்பதை நாம் எம்மை திரும்பத்திரும்ப கேட்டுப் பார்க்க வேண்டும். கிறிஸ்தவர்களுக்கு திருமுழுக்கினூடாக இறைமகன் இயேசுவைப்பற்றி அறிவிக்கும் பணி கொடுக்கப்பட்டுள்ளது. நான் இயேசுவைப் பற்றியும் அவரின் மீட்புச் செயல் பற்றியும் மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும். இயேசு தம் பன்னிரு சீடருக்கும் அறிவுரை கொடுத்து ஊர் ஊராக பல்வேறுபட்ட இடங்களுக்கும் சென்று கற்பிக்க நற்செய்தியை அறிவிக்கவும் அனுப்பி வைத்தார். தொடக்க காலத்தில் இறைவாக்கினர்கள், சீடர்கள், குருக்கள் என்று தொடங்கி இந்த இறை அறிவிப்புப் பணியானது இன்னும் தொடர்கின்றது என்று சொன்னால் அது மிகையாகாது. கிறிஸ்தவர்களை மனமாற்றத்திற்கும், நல்வாழ்விற்கும் இட்டுச்செல்வதே இந்த மறைக்கல்வியின் நோக்கமாகும். மறைக்கல்வியானது வெறுமனே சிறுவர்களுக்கு மட்டுமல்ல மாறாக இளையோர், பெரியோர் என்று அனைவருக்கும் அத்தியாவசியமான தொன்றாகும். இந்த அறிவித்தல் பரிமாணம் மூன்று நிலைகளைக் கொண்டது. அவை: மறை உண்மைகளை அறிவித்தல், அறநெறி சார்ந்த வாழ்வை அறிவித்தல், ஒருங்கிணைந்த வாழ்வுக்கான வழியை அறிவித்தல்.

இவ் வகையான அறிவித்தல்களும், அறிவுரைகளும் ஒரு மனிதனை நிறைவாக சென்றடைகின்ற போது அவன் மனம்மாறி இயேசுவை பின்பற்றி வாழ முயற்சிகள் மேற்கொள்வதோடு இயேசுவை மற்றவர்களுக்கு அறிவிக்கவும் முற்படுவார்கள்.

### 2. மறைக்கல்வியின் வழிகாட்டுதல் பரிமாணம்

ஒரு மனிதன் இன்னொரு மனிதனால் வழிகாட்டப்படுதல் நாம் இவ்வுலகில் பார்க்கக்கூடிய ஓர் யதார்த்தமாகும். அடிப்படையில் ஒரு மனிதன் அவனது பெற்றோரினால் வழிகாட்டப்படுகின்றான். பின்னர் ஆசான்கள், பெரியோர்கள், நண்பர்கள் போன்றோரினால் வழிகாட்டப்படுகின்றான். மறைக்கல்வியிலும் வழிகாட்டுதல் பரிமாணம் மிகமுக்கிய பங்கு வகிக்கின்றது. ஏனெனில் மறைவாழ்வில் சிறியவர்கள், பெரியவர்கள், இளையோர், முதியோர் என்ற எல்லா நிலையிலுள்ளவர்களையும் வழிகாட்டுவது என்பது ஒரு எளிதான காரியமல்ல. கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும் திருமுழுக்கின் வழியாக அழியாத முத்திரையைப் பெற்றுக்கொண்டு ஒருவரை கிறிஸ்துவை நோக்கி வழிநடத்தும் பணியைப் பெற்றுக் கொண்டுள்ளோம். மறைஅறிவை எம் வாழ்வாக்க வேண்டுமென்றால் இந்த வழிகாட்டுதல் பாரிய பங்காற்ற வேண்டும். ஒரு குருடன் இன்னொரு குருடனுக்கு வழிகாட்ட இயலாது. ஆகவே வழிகாட்டுபவர்கள் முதலில் மறையறிவினைப் பெற்றிருக்க வேண்டும். அதனை வாழ்வாக்க வேண்டும். மற்றவர்கள் எமக்கு வழிகாட்டும்போது அதனை நல்மனத்தோடும், தாழ்ச்சியோடும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு எம்மை நாமே முதலில் உருவாக்கிக் கொள்ள வேண்டும். பின்னர் அவ்வகை அறிவோடும், அனுபவத்தோடும், முதிர்ச்சியோடும் மற்றவர்கள் கிறிஸ்துவின் பாதையில் வழிநடத்திச் செல்ல இன்றே புறப்படுவோம். எல்லா மக்களினத்தாரையும் எமது வழிகாட்டலினாலும் முன்மாதிரிகையாலும் இயேசுவின் சீடராக்குவோம்.

### 3. மறைக்கல்வியின் ஆற்றுப்படுத்துதல் பரிமாணம்

இயல்பாகவே ஆற்றுப்படுத்துதல் என்று பிரச்சினையோடும், குழப்பங்களோடும், மன அழுத்தங்களோடும், கவலை கண்ணீரோடும் இருக்கின்றவர்களை இனிய வார்த்தைகளினாலும், அன்பு செயல்களினாலும் ஆறுதல்படுத்துதல் பரிமாணம் மிகமுக்கியமானது. ஏனெனில் கஸ்ரங்கள், துன்பங்கள், நோய்களோடு அன்றாடம் அவதியுறும் மக்களுக்கும், நிம்மதிதேடி அலைகின்ற மக்களுக்கும் இந்த மறைக்கல்வியான ஆற்றுப்படுத்தல் வடிவில் அவர்களை சென்றடைய வேண்டும். இன்னும் இயேசுவின் வார்த்தைகளையும் வாழ்வினையும் பணியினையும் முன்னுதாரணமாக எடுத்துக்காட்டி அவர்களை ஆற்றுப்படுத்துகின்றபோது உண்மையிலேயே அவர்கள் இயசுவின் மேல் கொண்டிருக்கும் விசுவாசமும், அன்புறவும், நம்பிக்கையும் மென்மேலும் ஆழப்படுத்தப்படும் என்பதில் ஐயமில்லை. இன்னும் சிறப்பாக சிறுவர்கள் தங்களது தனிப்பட்ட பிரச்சினைகளை மனம்திறந்து ஓர் மறையாசிரியரிடம் எடுத்துக்கூறும் போது ஆசிரியர் மற்றும் கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும் அவ்வகையான சிறுவர்களை ஆற்றுப்படுத்தக்கூடிய மன உணர்வுகளைக் கொண்டிருத்தல் அவசியம். இன்னும் ஒருவர் தனது ஏக்கங்கள், குறைகள், பிரச்சினைகளைக் கூறும்போது அவருடன் அன்போடும் பரிவோடும் அணுகுதல், தகுந்த சூழலை அமைத்துக்கொடுத்தல் நன்கு செவிமடுத்தல், அப்போதுதான் நாம் அவரை சிறந்த முறையில் ஆற்றுப்படுத்த முடியும்.

ஆற்றுப்படுத்தல் ஒருவனுக்கு உற்சாகத்தையும், வாழ்வின் உண்மைத் தன்மையையும், மனவுறுதியையும், நிம்மதியையும் தொலைந்த அவருடைய வாழ்வினையும் மீட்டுக் கொடுக்கின்றதொன்றாகவும் அமையும். இவ்வுலகில் உள்ள எல்லா மக்களும் ஏதோ ஒரு முதிர்ச்சிப் பாதையை நோக்கி நகர்கின்றார்கள். ஒருவன் தனது ஆன்மீக வாழ்வில் முதிர்ச்சி வேண்டுமென்றால் அதற்கு மறைக்கல்வி இன்றியமையாத தொன்றாகும். எனவே கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும் இத்தகைய விடயங்களைக் கருத்திற் கொண்டவர்களாக ஆற்றுப்படுத்தல் யார் யாருக்கு தேவையோ, எந்த சந்தர்ப்பத்தில் தேவையோ அப்போதெல்லாம் அப்பணியினை அர்ப்பணிப்போடும், விருப்போடும் செய்ய ஆயத்தமாக இருப்போம். இயேசுவில் முழுமையைக்காண முயல்வோம். இவ்வாறாக இந்த மறைக்கல்வியின் பரிமானங்களான அறிவித்தல், வழிகாட்டுதல் மற்றும் ஆற்றுப்படுத்தல் ஆகியவற்றின் நோக்கம் யாதெனில் இவை கிறிஸ்தவ வாழ்வையும், கிறிஸ்தவ நம்பிக்கையையும் வளப்படுத்தவும் ஆழப்படுத்தவும் உதவ வேண்டும் எனபதாகும்.



# இளையோர் மன்னா



## இளையோரும், இளமைக் காலமும்

மனிதர்களுடைய வாழ்க்கையின் தரத்தை இளமைக்காலமே நிர்ணயிக்கின்றது எனலாம். ஒருவர் தன்னை உருவாக்கிக்கொள்ள சிறந்த காலம் இளமைக்காலம் ஆகும். இதனால் சுவாமி விபுலானந்தர் இளைஞர்கள்மீது அனபும், அக்கறையும் கொண்டிருந்தார். ஒரு இளைஞன் சுவாமி விபுலானந்தரிடம், “நாம் வாழுகின்ற உலகில் அப்பாவிமக்கள் அநியாயமாக உயிரிழந்து போகின்றார்களே! சமயங்கள் இருந்து என்ன பயன்? சமயங்கள் எமக்குத் தேவையா?” என வினவினான். சுவாமி விபுலானந்தர் பதிலளிக்கையில், “மனித உள்ளங்களில் மறைந்திருக்கின்ற தெய்வ சாயலை உணர்வு ரீதியாக கடந்து செல்ல ஏற்படுத்தப்பட்ட ஒன்று சமயம் ஆகும். சமய உணர்வுகள் எமது அயலவர்களையும் எமக்குச் சொந்தமாக்குகின்றது” என்றார்.



சமயத்தின் பெயரில் ஏனைய மதத்தவர்களை துன்புறுத்துவதற்கு சமயங்கள் காரணமாக முடியாது. ஏன் ஆயுதங்களால் ஏற்படுகின்ற அழிவுக்கு ஆயுதங்களைக் கண்டுபிடித்த விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் பொறுப்பல்ல. மதத்தையும் மதம் சொல்லுகின்ற கடவுளையும் அன்பு செய்வதை விட, மதங்கள் தருகின்ற அடிப்படை வாதங்களை மாத்திரம் அன்பு செய்வதனால் ஏற்படுகின்ற இழப்புக்கு சமயம் பொறுப்பேற்க முடியாது. ஏனெனில் சமயங்கள் அன்பு கொண்ட சமூகங்களை மாத்திரமே உருவாக்குகின்றது. அன்பார்ந்த இளைஞர்களே! யுவதிகளே! எமது பொறுப்பற்ற நிலையில்! மதங்கள், சமயங்கள் தேவைதானா? என்பது எமது இன்றைய வினாவாக இருப்பது நல்லதன்று. நாம் அனைவரும் இறைவனின் பிள்ளைகளும், அவரது சாயலும் என்பதனை ஒருபோதும் மறக்கக்கூடாது. இன்றைய உலகில் நாடுகள் உலகைப் பிரிக்கின்றன, சாதிகள் மதத்தைப் பிரிக்கின்றது, குடும்பங்கள் சாதியைப் பிரிக்கின்றன, உறவுகள் குடும்பங்களைப் பிரிக்கின்றன. பிரிவினை கடவுளுக்குரிய கடவுளின் ஆவிக்குரிய செயற்பாடு அல்ல. அடிப்படைவாதங்களுக்கு நாம் அடிமையாகின்றபோது இறைவன் மீதும், அயலவர் மீதும் கொண்ட அன்புக்கு அடிமையாக வேண்டும். அன்புக்கு அடிமையாகாத அடிப்படைவாதக் கொள்கை பிரிவினையை ஏற்படுத்தும். பிரிவினையைத் தவிர்த்துவாழ நாம் இறைவனுடன் இணைந்திருக்க வேண்டும். எமது இளமையில் இறைவனிடமிருந்து பிரியாமல் வாழ எமது இறைவன் எமக்காக அனுப்பிய இயேசுவுடன் இணைந்திருக்க வேண்டும். அவரோடு இணைந்து ஒன்றித்து இருத்தல் உள்ளத்து அமைதி தரும். பிரிந்துபோன உறவுகள் மீண்டும் சேர்தல் நிம்மதி. பறிமுதலான உடமைகள் மீண்டும் கிடைத்தால் நிம்மதி, தொலைந்துபோன பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டால் நிம்மதி, நாம் தொலைத்த இறைவனும் அவரது பரிசுத்தமும் மீண்டும் நிலைத்தால் நிம்மதியும் அமைதியும் கிடைக்கும்.

நாம் இறைவனிடமிருந்து விலகிச்சென்ற போதும் இறைவன் எம்மைவிட்டு விலகாமல் இருக்க கிறிஸ்துவை அனுப்பினார். எனவே இறைவனுக்கு நாம் தேவை, எமக்கு இறைவன் தேவை. எம்மை இறைவனுடன் இணைக்க இயேசுவை எமக்குத்தந்த அன்னை மரியாள் எமக்குத் தேவை. அவர் இறைவனின் தாய், அன்னையர்களுக்கெல்லாம் அன்னை. அவர் போற்றுதற்குரியவர், ஏனெனில் அவர் மாசற்றவர். தூய்மையாகப் பிறந்தார். பரிசுத்தமாக வாழ்ந்தார்.

எனவே மன்னார் மறைமாவட்ட இளைஞர் யுவதிகளே உங்களுக்கு இறைவன் தேவை, இறைவனுக்கு நீங்கள் தேவை. உங்களுக்கு இயேசு தேவை, இயேசுவிற்கு நீங்கள் தேவை. இறைமகனை எமக்குக் காட்டிய அன்னை மரியாள் தேவை. இளையோராகிய நீங்கள் இளமைக் காலத்தைக் கடந்து செல்ல அன்னையின் அரவணைப்பில் இயேசுவைப் பின்தொடருங்கள். இயேசுவின் பின் இறைவனின் பிள்ளைகளாக வாழ எல்லோருக்கும் சிறந்த முன்மாதிரி அன்னை மரியாள். அவரிடம் இருந்து நல்ல கிறிஸ்தவப் பண்புகளை, விழுமியங்களைக் கற்றுக்கொள்ளுங்கள். நல்ல முதிர்ச்சியான கிறிஸ்தவ இளைஞர் யுவதிகளாக வாழ ஆசியுங்கள். இறைவன் உங்களை நீங்கள் இருக்கும் நிலையிலேயே உங்களை ஏற்றுக் கொள்கின்றார். நீங்கள் அவருக்குரியவர்களாக வாழ அவரின் திருவுளப்படி வாழ உங்களை அன்பு செய்கின்றார். ●

# கிறிஸ்தவ நாகரிகம் புதிய பாடத்திட்டம்
# கிறிஸ்தவத் துறவற வாழ்வு

**அருட்தந்தை யா. றமேஸ் அ.ம.தி**

### போர்த்துக்கேய காலத்தில் இலங்கையின் சமய நிலை

மறுமலர்ச்சியின் விளைவால் ஏற்பட்ட நாடுகாண் பயணங்கள் மூலம் பல ஐரோப்பிய நாடுகள் கீழைத்தேசங்களுக்கு வியாபார நோக்கில் வந்தனர். அத்தோடு தங்கள் மதத்தையும் பரப்பினர். இந்நிலையில் பத்ரோவாடோ ஒப்பந்தத்தின் அடிப்படையில் போர்த்துக்கேயர் இலங்கையில் செயற்பட ஆரம்பித்தனர். போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருகை தந்தபோது இலங்கையில் 3 இராசதானிகள் தனித்துவ ஆட்சியை கைக்கொண்டு இருபெரும் சமய வழக்கத்தைக் கொண்டிருந்தனர். பௌத்த சமயத்தை அடிப்படையாகக் கொண்டு சமூக அமைப்பு ஒன்றும், இந்து மதத்தை அடிப்படையாகக் கொண்ட சமூக அமைப்பும் ஒன்று காணப்பட்டது. மக்கள் மத்தியிலேயே கலாசாரமும், சமயமும், பண்பாடும், வாழ்க்கை முறையும் ஒன்றுபட்டே காணப்பட்டது. மன்னர்கள் மத சடங்காசாரங்களின்படி நாட்டை ஆண்டு வந்ததும், மத குருக்கள் அவர்களுக்குரிய மரியாதையோடு நடத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இலங்கையில் தென்பகுதியில் பௌத்த சமயத்தை அடிப்படையாகக் கொண்ட சமூக அமைப்பு காணப்பட்டது. பௌத்த சமயத்தைப் பின்பற்றிய மக்களே அதிகமாகக் காணப்பட்டனர். பௌத்த விகாரைகளே கிராமங்களின் மையங்களாகக் காணப்பட்டன. பௌத்த பிக்குகள் மிகுந்த செல்வாக்குடனும், மதிப்புடனும் போற்றப்பட்டனர். தமிழ்பேசும் மக்கள் இந்து சமயத்தை பின்பற்றுபவர்களாக காணப்பட்டனர். உள்நாட்டு குழப்பங்களில் இருந்து பாதுகாப்பையும், தம் அரச பதவிகளைத் தக்கவைக்கவும் பல அரசர்களும், அரச அதிகாரிகளும் போர்த்துக்கேயரின் உதவியை நாடி பௌத்த மதத்தைக் கைவிட்டு கத்தோலிக்க மதத்தைத் தழுவினர்.

### இலங்கையில் கத்தோலிக்க விசுவாசம் பரப்பப்படல்

இலங்கையின் கோட்டை இராட்சியத்தில் போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட புனித லோறன்ஸ் தேவாலயத்தில் பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த விசந்தி அடிகளாரால் லத்தீன் மொழியில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அவ்வாலயம் புனித லோறன்சிற்கு அர்ப்பணிக்கப்பட்டது. போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட கோட்டையில் அருட்தந்தையர்கள் இருந்து செயற்பட்டதாக குறிப்புக்கள் உள்ளன. 1543ஆம் ஆண்டு 1வது மறைபரப்புக் குழுவான பிரான்சிஸ்கன் சபையினர் இலங்கைக்கு வருகைதந்து பணியாற்றினர். கடற்கரை ஓரங்களில் சிற்றாலயங்களை அமைத்து நாட்டிலிருந்து போர்த்துக்கேயருக்கும், கிறிஸ்தவ மதத்தை தழுவியவர்களுக்கும் பிரான்சிஸ்கன் சபை துறவிகள் தமது சேவையை வழங்கினார். கடற்கரை ஓரங்களில் கத்தோலிக்க பாடசாலைகளை அமைத்து பல சேவைகளை இவர்கள் வழங்கியதால் பலர் கத்தேலிக்க மதத்தை தழுவினர். பௌத்த விகாரைகளுக்குச் சொந்தமான காணிகள் சிலவும் தர்மபால மன்னனால் பிரான்சிஸ்கன் துறவிகளுக்கு வழங்கப்பட்டதால் அவர்கள் தங்கள் பணிகளை இலகுவாக மேற்கொண்டனர். அத்தோடு மலைநாட்டு பகுதிகளிலும் பலர் மனம் திருப்பப்பட்டனர். யாழ்ப்பாணத்திலும் ஆலயங்கள் அமைக்கப்பட்டு மகத்தான சேவைகள் வழங்கப்பட்டது. இவ்வாறு பல பணிகளை ஆற்றி கத்தோலிக்கத்தை இலங்கையில் பரப்பிய பிரான்சிஸ்கன் சபை துறவிகளுடன் இயேசுசபை குருக்களும், அகுஸ்தீனர் சபை குருக்களும் இணைந்து பெரும் பங்காற்றினார்.

### மன்னார் மறைசாட்சிகளின் விசுவாச வாழ்வு

மன்னாரில் பிரான்சிஸ் சவேரியார் மூலமாக அனேகமான மக்கள் கத்தோலிக்கத்தைத் தழுவிக் கொண்டார்கள். அதேவேளை மன்னார், யாழ்ப்பாண அரசின் ஒரு பகுதியாகவே இருந்தது. யாழ்ப்பாண அரசைப் பரராஜசேகரன் (சங்கிலியன்) ஆண்டு வந்தான். மன்னார் மக்கள் கிறிஸ்தவத்தைத் தழுவியதை கேள்விப்பட்ட இந்துக் குருக்கள், இந்து ஆலயங்கள் அழிபடுமெனவும், மன்னார் கிறிஸ்தவர்கள் யாழ்ப்பாண அரசை விடுத்து போர்த்துக்கேய அரசை ஆதரிப்பார்கள் என்ற தப்பான கருத்துக்களையும் பரப்பினர். இதனால் கோவம் கொண்ட சங்கிலி மன்னன் தன்னுடைய படைகளை மன்னாருக்கு அனுப்பி கிறிஸ்தவர்களை கிறிஸ்தவத்தைக் கைவிட்டு இந்துக்களாக வரும்படி கட்டளையிட்டார். மன்னார் மக்கள் தம் விசுவாசத்தில் உறுதியான நிலையில் இருந்தனர். எனவே அரசர் சங்கிலியனின் கட்டளைப்படி யுவான் டி லிஸானோ அடிகளாருடன் ஏறக்குறைய பெண்கள் குழந்தைகள் உட்பட 700 பேர் 1544ஆம் ஆண்டு மார்கழி மாதம் தோட்டவெளி எனும் இடத்தில் மிகக் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். இவர்களே மன்னார் மறைசாட்சிகள் ஆவர். இவர்களுடைய வேதசாட்சி மரணம் மன்னாரில் இருந்து தெவுன்கர கிறிஸ்தவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடிந்தது. மன்னார் வேதசாட்சிகளின் விசுவாசத்தைக் கண்டுகொண்ட நீர்கொழும்பு மக்கள் 20000 பேர் குறிபிட்ட நாட்களுக்குள் திருமுழுக்குப் பெற்று திருச்சபையில் சேர்ந்துகொண்டனர். இலங்கையின் பல பாகங்களிலும் போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட ஆலயங்கள் அழிக்கப்பட்டது, குருமார்கள் கொலை செய்யப்பட்டனர், கிறிஸ்தவர்கள் அழிக்கப்பட்டார்கள். ஆனாலும் கிறிஸ்தவ விசுவாசம் வேரூன்றி எங்கும் பரவத் தொடங்கியது.

### பிரான்சிஸ்கன் சபை மறைப்பணியாளர்களது பணிகள்

பிரான்சிஸ்கன் சபையினரே முதலில் இலங்கைக்கு வந்த மறைப்பணியாளர் ஆவார். தாம் அமைத்த ஆலயங்களுக்கண்மையில் பாடசாலைகளை அமைத்தனர். கல்வி மூலமாக கத்தோலிக்க மறையைப் பரப்பினர். கோவில் பற்று பாடசாலை நிறுவி அங்கு செபம் செய்தல், வினாவிடை முறையிலான மறையறிவை சுதேச மொழிகளில் அம்மக்களுக்கு அளித்தனர். போர்த்துக்கேயரால் சிறைப்பிடிக்கப்பட்ட அல்லது அடைக்கலம் புகுந்த அல்லது கல்வி கற்க ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு அரச கல்வியை அளித்தனர். கொழும்பு படிப்படியாக ஒரு கிறிஸ்தவப் பட்டணமாக மாறியது. பல பங்குகளும், பக்தி சபைகளும், துறவற மடங்களும் ஆரம்பிக்கப்பட்டன. 1597இல் டொன் யுவான் தர்மபாலா இறந்த போது கோட்டே அரசில் பெரும்பாலான கத்தோலிக்கரும், தேவாலயங்களும், இருந்ததெனக் கூறப்படுகின்றது. இவையெல்லாம் பிரான்ஸிஸ்கன் சபையினரின் அயராத முயற்சியும் அர்ப்பணிப்புள்ள பணியின் பயன்களாகும்.

### இயேசு சபை மறைபாணியாளர்களது பணிகள்

1602ஆம் ஆண்டு அருட்திரு. தயோகோடா குன்கவின் தலைமையில் இயேசு சபையினர் நால்வர் இலங்கைக்கு வந்தனர். மஹா ஓயாவிற்கு வடக்கேயுள்ள பிரதேசங்கள் இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. அங்கே தமது பணிகளை ஆரம்பித்தனர். திருமலை, மட்டுநகர், யாழ்ப்பாணம் வரையான வட பகுதிகளிலும் பணியாற்றினர். இயேசு சபையினர் கொழும்பில் ஒரு கல்லூரியை நிறுவியதோடு தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பகுதிகளில் துறவற இல்லங்களை அமைத்து அப்பிரதேச மக்களுக்கு சேவையாற்றினர். ஒவ்வொரு துறவற இல்லத்திற்கும் அருகே ஆலயங்கள் கட்டப்பட்டன. கம்மல், சிலாபம், கற்பிட்டி, மாதம்பே போன்ற இடங்களில் பங்குகள் அமைக்கப்பட்டன. மொறட்டுவ, வலிகம்பிட்டி, உடுகம்பொல போன்ற இடங்களில் இயேசுசபை இல்லங்கள் அமைக்கப்பட்டன. 1643இல் இயேசு சபையினர் மன்னாரில் எட்டு தேவாலயங்களைக்கட்டி பணிபுரிந்தனர். சிலர் சுதேச மொழியினைக்கற்று நூல்களை மொழி பெயர்த்து கிறிஸ்தவ மறை வளர்ச்சிக்கு பெரிதும் சேவையாற்றினர்.

### போர்த்துக்கேய மிசனரிமாரின் பணிகள் வெற்றி அளித்தமைக்கான காரணங்கள்

மறைத்தூதுவர்களின் ஆழ்ந்த அர்ப்பணமும் முயற்சியும் அறியாத தேசத்து மக்களுக்கு பணி ஆற்றும்போது மொழி, கலாசாரம், பழக்கம் இல்லாதவை ஆயினும் அனைத்தையும் பழகிக் கொண்டு தமது வாழ்நாட்களை அர்ப்பணித்தனர். மறைத்தூதுவர்களுக்கு போர்த்துக்கேய ஆட்சியாளர்களிடம் இருந்து கிடைத்த உதவியும் மறை பிரச்சாரத்திற்கு வழங்கப்பட்ட சுதந்திரமும், மறைத்தூதுவர்களின் பிரச்சார முறையும் பொதுமக்களை மிகவும் கவர்ந்தது. தேசிய மொழியைக் கற்று அம்மொழியிலே மதத்தை போதித்தல், சமய நூல்களை தேசிய மொழியில் தயாரித்தல், சிறு பிள்ளைகளுக்கு மறையை கற்பிக்க பாடசாலைகளை அமைத்தல், இரக்க பணிகளிலும், இலக்கிய வளர்ச்சியிலும் பங்காற்றல், அத்தோடு மறைத்தூதுவர்களின் எளிமையான வாழ்க்கை முன்மாதிரிகையாக இருந்தமையாலும் போர்த்துக்கேய மிசனரிமாரின் முயற்சிகள் இலங்கைத் திருச்சபையின் பரம்பலுக்கு வழிகோலியது.

### போர்த்துக்கேயரின் வருகை இலங்கைச் சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள்

மக்களிடையே காணப்பட்ட சாதி அமைப்பு முறைகள் குறைக்கப்பட்டன. திருமணங்கள் முறைப்படி பதியும் சட்ட பூர்வமான முறை ஆரம்பிக்கப்பட்டது. இது ‘‘தோம்பு முறை’’ எனப்பட்டது. மேலும் மேலைநாட்டு வைத்திய முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. மக்களிடையே போர்த்துக்கேய மொழி பரவலாகப் பேசப்பட்டு வந்தது.

இன்றும் பல போர்த்துக்கேய சொற்பதங்கள் பாவனையில் உள்ளன. (உதாரணம் அலவாங்கு, சப்பாத்து, துவாய், விறாந்தை) மேலும் போர்த்துக்கேய உணவுப் பழக்கவழக்கங்கள் (பாண், வைன், சலாது, அச்சாறு, பஸ்தோல்), பெயர்கள் (சில்வா, பெரேரா, மென்டீஸ், அல்மேதா, வாஸ்) இசை (கப்பிறிஞ்ஞா, பைலா) போன்றன இன்றும் இலங்கை மக்களின் வாழ்க்கையில் தாக்கத்தை செலுத்துகின்றன. ஒருதாரப் பழக்கவழக்கம், ஞான உறவுமுறைகள் பேணப்பட்டன. தொழில் வேறுபாடுகள் நீக்கப்பட்டது. இவ்வாறு இலங்கை மக்களின் வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியதோடு இலங்கையில் கத்தோலிக்க விசுவாசம் தழைத்தோங்க வழியமைத்தார்கள். ●

# டெங்கு காய்ச்சலை தடுப்பதற்கான வழிகள் என்ன?

## அவசியம் தெரிந்து கொள்ளுங்கள்.



வெய்யில் காலம் முடிந்து மழைக்காலம் வந்தாலே இன்னொரு பயம் டெங்கு காய்ச்சலாகத்தான் இருக்கும். வெறும் வைரஸ் காய்ச்சலாக இருந்தால் சமாளித்துக் கொள்ளலாம். உயிரை குடிக்கும் இந்தக் காய்ச்சலை வரவிடாமல் காப்பது உங்கள் கையில்தான் உள்ளது. ஏனெனில் இதில் சுகாதாரத்தை விட விழிப்புணர்வு மிக முக்கியமாய் வேண்டும்.

**எவ்வாறு டெங்கு வைரஸ் உருவாகின்றது?**

ஏட்ஸ் அல்போபிக்டஸ் என்ற கொசு தேங்கியிருக்கும் சுத்தமான நீரிலிருந்து உருவாகின்றது. இவை அசுத்த நீரிலோ சாக்கடைகளிலோ உருவாவதில்லை என்பதை நினைவிற் கொள்க. இது டெங்கு வைரஸை பரப்பும் ஒட்டுண்ணி. இது இரண்டு விதமாக காய்ச்சலை பரப்பும். ஒன்று உயிருக்கு ஆபத்து தராத கடுமையான டெங்கு காய்ச்சல் மற்றொன்று ரத்த இழப்பை ஏற்படுத்தும் காய்ச்சல் (Dengue haemorrhagic fever-DHF). இதில் இரண்டாவது வகை உயிரை பறித்துவிடும் ஆபத்து நிறைந்தது.

**இந்த கொசுக்கள் எப்படி உருவாகும்?**

இதன் நுண்புழுக்கள் செடியின் இலைகளில், வீட்டில் அலங்காரமாக வைக்கும் நீர் நிறைந்த மலர் பானைகளில், நீர் தேங்கிய வீணான டயர்களில், நிறைய நாட்கள் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் நீர் தொட்டிகளில் வீட்டு விலங்குகளுக்கு வைக்கப்படும் நீர் பாத்திரங்களில் மழை நீர் தேங்கும் பாட்டில்கள் ஆகியவற்றில் உருவாகும். முக்கியமாய் நீரினை சேர்த்து வைக்காமல் அவ்வப்போது உபயோகப்படுத்த வேண்டும்.

**எப்போது இந்த கொசுக்கள் கடிக்கும்?**

மலேரியா போலவே, இந்த கொசுக்களும் பகலில் கடிக்கும். முக்கியமாய் காலை 5 மணியிலிருந்து 8 மணி வரை மற்றும் மாலை 3-6 மணி வரை இந்தக் கொசுக்கள் கடிக்கும். ஆகவே அந்த சமயங்களில் மிக பத்திரமாய் இருந்து கொள்ள வேண்டும்.

**எப்படி பரவும்?**

இது ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு பரவாது. கொசுக்களின் மூலமாக மட்டுமே பரவும். ஆனால் ஒரு இடத்தில் டெங்கு கொசுக்கள் உருவாகினால், அவைகளின் எண்ணிக்கை வேகமாக மற்றொரு இடத்திற்கு பரவும் அபாயம் உள்ளது.

டெங்கு காய்ச்சலின் அறிகுறி என்ன? குழந்தைகளுக்கு கடுமையான காய்ச்சலுடன் உடல் முழுவதும் சிவந்து பொறி பொறியான அலர்ஜி ஏற்படும். பெரியவர்களுக்கு லேசான தடிப்புடன் சிவந்து, காய்ச்சல் கூடிய தலைவலி, கண் எரிச்சல், வாந்தி, உடல் வலி ஆகியவை ஏற்படும்.

**முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்:**

உங்கள் சுற்றுப்புறத்தை நீர் தேங்காதவாறு சுத்தமாக பார்த்துக் கொள்வது அவசியம். எல்லா சாக்கடை குழாய்களில் அடைப்பு இல்லாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். உங்கள் சுற்றுப்புறத்தில் எங்கேயாவது பாட்டில்களில் டயர், அல்லது காலி இடங்களில் நீர் தேங்கியிருந்தால், தயக்கமேயில்லாமல் அவற்றை கட்டாயமாக அப்புறப்படுத்தவேண்டும். திறந்திருக்கும் நீர்த்தொட்டிகளை மூடி வைத்திருங்கள்.

**வீட்டில் கொசு வராமல் இருக்க**

கொசு மருந்து, கொசுவர்த்தி சுருள் ஆகியவயற்றை உபயோகப்படுத்த வேண்டும். முக்கியமாய் உடலில் கொசு கடிக்காமல் தடுக்கும் க்ரீம்களை தடவிக் கொள்ளுங்கள். பகலில் உடல் முழுவதும் முடியிருக்கின்ற முழுக்கை முழுக்கால் சட்டைகளை உபயோகப்படுத்துங்கள்.

**ஆரோக்கியமான உணவு:**

நல்ல சத்துமிக்க உணவுகளை உண்ண வேண்டும். அப்போதுதான் நோய் எதிர்ப்பு திறன் அதிகரிக்கும். வாரம் மூன்று நாட்கள் நிலவேம்பு கஷாயம் செய்து குடித்தால் இந்த அபாயம் வராமல் தடுக்கலாம்.

# ஓட்ஸ் கேசரி

## தேவையானப்பொருட்கள்



ஓட்ஸ் - ஒரு கப்
சீனி - முக்கால் கப்
நெய் - அரை கப்
ஏலக்காய் பொடி - அரை தேக்கரண்டி
காய்ச்சிய பால் - ஒரு கப்
கேசரி கலர் -
தேவைக்கேற்ப விரும்பிய நட்ஸ் - சிறிது


## செய்முறை:

தேவையான அனைத்தையும் தயாராக வைக்கவும். கடாயில் ஓட்ஸைப் போட்டு வாசம் வரும் வரை வறுத்துக் கொள ்ளவும். அத்துடன ் பாலை ஊற்றி நன்கு கிளறிவிட்டு வேகவிடவும். வெந்ததும் கேசரி கலர் மற்றும் ஏலக்காய ் பொடி சேர்த்துக் கிளறவும். பிறகு அதனுடன் நெய ் சேர்த்துக் கிளறவும். கடைசியாக சர்க்கரையைச் சேர்த்து நன்றாகக் கிளறவும். அனைத்தும் ஒன்றாகச் சேர்ந்து பாத்திரத்தில் ஒட்டாத பதத்திற்கு வந்ததும், நெய்யில் வறுத்த நட்ஸ் தூவி இறக்கவும்.

# சீரகத்தின் மருத்துவக் குறிப்புக்கள்



- ♦ சீரகத்தையும், ஏலக்காயையும் சம அளவில் எடுத்து நன்கு இள வறுப்பாக வறுத்து பொடி செய்து உணவுக்குப்பின் கால் டீஸ்பூன் அளவு சாப்பிட வயிறு உப்பசம் தீரும்.
- ♦ "எட்டு திப்பில் ஈரைந்து சீரகம் கட்டுத் தேனில் கலந்துண்ண விக்கலும் விட்டுப்போகும்" அதாவது விடாமல் இருக்கும் விக்கலுக்கு 8 திப்பிலியையும் 10 சீரகத்தையும் பொடித்து தேனில் கலந்து சாப்பிட்டால் போதும் விக்கல் நின்றுவிடும்.
- ♦ உணவு செரிமானம் ஆகாமல் எதிர்த்துக்கொண்டு வரும்போது (சாதாரண தண்ணீருக்குப் பதில் உணவருந்தும்போது இளஞ்சூடான சீரகத் தண்ணீர் அருந்தலாம்.
- ♦ சீரகத்தூளை வெண்ணெயில் குழைத்துச் சாப்பிட்டுவர எரிச்சலுடன் கூடிய அல்சர் நோய் தீரும்.
- ♦ சீரகத்தை தனித்தனியே கரும்புச் சாறு, எலுமிச்சைச் சாறு, இஞ்சிச் சாறு, முசுமுசுக்கைச் சாறு ஆகியவற்றில் மூன்று நாட்களுக்கு ஊறவைத்து, வெயிலில் காயவைக்க வேண்டும். நன்கு ஊறிய சீரகத்தை மிக்ஸியில் அரைத்து வைத்துக்கொள்ள வேண்டும். இந்த சீரகச் சூரணம், பித்தத் தலைவலி எனும் மைக்ரேன் தலைவலிக்கும், பித்தத்தால் அதிகரிக்கும் உயர் ரத்த அழுத்தத்துக்கும் சிறந்த துணை மருந்து. வீட்டில் செய்ய முடியாதவர்கள் சித்த மருந்துக் கடைகளில் 'சீரகச் சூரணம்' என்று கேட்டு வாங்கிப் பயன்படுத்தலாம்.
- ♦ இஞ்சியை தோல் சீவி சில மணித் துளிகள் ஈரம் போகும் வரை உலரவைத்து அதே அளவுக்கு சீரகத்தை எடுத்து இரண்டையும் பொன் வறுவலாக வறுத்து எடுத்துக்கொள்ளவும். இரண்டின் கூட்டு அளவுக்குச் சமமாக நாட்டுச் சர்க்கரையைக் கலக்கவும். இந்தக் கலவையை அரை டீஸ்பூன் அளவுக்கு காலை வேளையில் சாப்பிட மைக்ரேன் தலைவலி படிப்படியாகக் குறையும்.
- ♦ சீரகத்தையும் வில்வவேர்க் கஷாயத்தையும் சேர்த்து சித்த மருத்துவர்கள் செய்யும் 'சீரக வில்வாதி லேகியம்', பித்த நோய்கள் பலவற்றையும் போக்கும் மிக முக்கிய மருந்து. சீரகம், பித்தத்தைச் சீர்ப்படுத்தும் மருந்து. எனவே உளவியல் நோய்க்கும்கூட இதை ஒரு துணை மருந்தாகப் பயன்படுத்த முடியும்.
- ♦ சீரகத்தில் உள்ள விட்டமின் சி மற்றும் ஏ, குடல் புற்றுநோய் வருவதைத் தடுக்கும் ஆற்றல்கொண்டது.



**நோயாளி:** டாக்டர், என் வயித்துக்குள்ளே ஏதோ சத்தம் வருது.
**டாக்டர்:** ஐயையோ என் செல்போனை உள்ளே வைச்சிட்டேனோ...?

***************

**சாப்பிட வந்தவர்:** ஐயா கடையில என்ன சாப்பிட இருக்கு?
**கடைக்காரர்:** இட்லி இருக்கு சம்பல் இல்லை. தோசை இருக்கு சாம்பாறு இல்லை. இடியப்பம் இருக்கு சொதி இல்லை. புட்டு இருக்கு கறி இல்லை.
**சாப்பிட வந்தவர்:** அப்படி என்றால் கடையை இழுத்து மூடுங்கள்
**கடைக்காரர்:** திறப்பு இருக்கு பூட்டு இல்லை......!

***************

**அப்பா:** ஏண்டா... இன்னிக்கு உனக்கு இண்டர்வியூ இருக்கே போகலயா?
**மகன்:** நாலு பேர் நம்மைக் கேள்வி கேக்கிற மாதிரி நடந்துக்க கூடாதுனு... நீங்கதானே சொன்னீங்க!

***************

**தாய்:** ஏண்டா மகனே, குளுசை மருந்து குடிக்கும்போது சமயல் அறைக்க போய்க் குடிக்கிறா?
**மகன்:** டாக்டர் சொன்னதை அப்படியே செய்கிறேன். அவர்தான் சொன்னார் சாப்பாட்டிற்கு முன் குடிக்கனும்ண்ணு!

**ஆசிரியர்:** மாதா பிதா, குரு இவர்களில் யார் பெரியவர்?
**மாணவன்:** குருதான்...! ஒரு அம்மா தாலாட்டுப் பாடி ஒரு குழந்தையைத்தான் தூங்க வைக்க முடியும். ஆனால் நீங்க தாலாட்டு பாடாமலலே 40 பேரை ஒரே நேரத்திலேயே தூங்க வைக்கிறிங்களே!

***************

**அவள்:** அவர் ஒரு போலி டாக்டர்னு தெரிந்தும் நீ ஏன் அவரைக் கல்யாணம் செய்தே?
**இவள்:** நானும் ஒரு போலி டீச்சர்தானே அதான்...!

***************

**ஒருவர்** : என் பையன் கல்யாணமே வேண்டாங்கிறான்...
**மற்றவர்** : அவனாவது வாழ்க்கையில சந்தோஷமாக இருந்துட்டுப் போகட்டுமே!"

# அழகுக் குறிப்புக்கள்



♦ ஒலிவ் எண்ணெயுடன் சர்க்கரை கலந்து உள்ளங்கைகளில் தேய்த்து கழுவ வேண்டும். இவ்வாறு செய்ய உள்ளங்கைகளின் கடினத் தன்மை மறைந்து மிருதுவாக மாறும்.

♦ 2ஸ்பூன் முள்ளங்கி சாற்றுடன், 2ஸ்பூன் மோர் சேர்த்து முகத்தில் தடவி ஒரு மணிநேரம் கழித்து சுடுநீரில் முகத்தைக் கழு தேங்காய் தண்ணீரை முகத்தில் தொடர்ந்து 6மாதம் தடவி வர சின்னம்மையால் ஏற்பட்ட வடு மறையும்.

♦ பூசணிக்காயை சிறு துண்டுகளாக்கி அதை கண்களைச் சுற்றி வைக்க கண்களைச் சுற்றி ஏற்படும் கருவளையம் மறையும்.

♦ பப்பாளிப் பழத்தை அரைத்து முகத்தில் தொடர்ந்து தடவி வர முகப்பரு, கரும்புள்ளி ஆகியவை மறையும்.

♦ புளித்த மோரை முகத்தில் 15 நிமிடம் தடவி மிதமான சுடுநீரில் கழுவ முகம் பொலிவு பெறும். இதை தொடர்ந்து 15 நாட்களுக்கு செய்து வர நல்ல பலன் கிடைக்கும்.

♦ முழங்கை (முட்டி) கறுப்பாகவும், சொர சொரப்பாகவும் இருந்தால், தேங்காய் எண்ணெயுடன் எலுமிச்சை சாறு கலந்து தடவி வர மிருதுவாக மாறும்.

♦ தேன் மற்றும் எலுமிச்சை சாறு கலந்த கலவையை உதட்டின் மீது தொடர்ந்து தடவி வந்தால் தரம் குறைந்த லிப்ஸ்டிக் பயன்படுத்துவதால் ஏற்படும் கருமை நிறம் மறையும்.

♦ தயிருடன் கடலை மாவு கலந்து முகத்தில் தடவி 15 நிமிடம் கழித்து கழுவ வேண்டும். இவ்வாறு செய்வதால் முகத்தில் ஏற்படும் சுருக்கம் மறையும்.

# மன்னா விளம்பரப் பலகை

"பசித்த வயிறு, பணமில்லாத வாழ்க்கை பொய்யான உறவுகள் இவை மூன்றும் ஒரு மனிதனுக்கு கற்றுக் கொடுக்கும் பாடத்தை எவனொருவனாலும் கற்றுக்கொடுக்க முடியாது."

ஒழுக்கம் என்னும் உறுதியான அடிப்படையை கொண்டு தெய்வீக வாழ்க்கை வாழுங்கள். விரைவில் வாழ்வின் இலட்சியத்தை நீங்கள் எட்டிப்பிடிக்க முடியும்.

.....................

நாம் அனைவருக்கும் ஒரே மாதிரி திறமை இல்லாமல் இருக்கலாம் ஆனால் அனைவருக்கும் திறமையை வளர்த்துக்கொள்ள ஒரே மாதிரி வாய்ப்புக்கள் உள்ளன.

.....................

யாருக்காக சிரித்தாயோ அவரை ஒரு வேளை மறந்து விடலாம் ஆனால் யாருக்காக அழுதாயோ அவரை ஒரு நாளும் உன்னால் மறக்க முடியாது.

உன் நிலை எப்படிப்பட்டதாக இருந்தாலும், அதைக் குறித்து நீ கலைப்படாதே. இலட்சியத்தைப் பற்றிக்கொண்டு முன்னேறிய படியே இரு.

.....................

வெற்றி வந்தால் நம்பிக்கை வரும். ஆனால் நம்பிக்கை இருந்தால் மட்டுமே வெற்றி கிடைக்கும். அதனால் நம்பிக்கையை வளர்த்துக்கொள்.

.....................

கீழ்ப்படியக கற்றுக்கொள் கட்டளையிடும் பதவி தானாக உன்னை வந்து அடையும்.

அமைதியான மனமே உங்களின் மிக முக்கியமான மூலதனம் அதுவே எல்லா வெறிறிகளையும் கொண்டுவரும்.

"வாய்ப்புக்காக காத்திருக்காதே.. உனக்கான வாய்ப்பை நீயே ஏற்படுத்திக்கொள்."

## பிறருக்கு...

04ஆம் பக்கத் தொடர்ச்சி.

கிறிஸ்தவ வாழ்வு என்பது பணியாற்றுவதே என்றும் கிறிஸ்தவத்திற்கு மனம் மாறியவர்கள் தொடக்கத்தில் இறைமக்களுக்குப் பணியாற்றுவதற்குத் திறந்த மனதுள்ளவர்களாய் இருந்து நாளடைவில் இறைமக்களைப் பயன்படுத்தும் நிலை வருத்தமளிக்கின்றது எனவும் திருத்தந்தை கூறினார்.

**இலவசமாகக் கொடுங்கள்**

கிறிஸ்தவ வாழ்வு இலவசமாக வாழப்படுகின்றது. எந்த விலையுமின்றி அது பெற்றுக்கொள்ளப்படுகின்றது. எனவே எந்த விலையுமின்றி அதைப் பிறருக்கு அளிக்க வேண்டுமென்றும், மீட்பை விலைகொடுத்து வாங்க இயலாது, ஏனெனில் கடவுள் நம்மை இலவசமாக மீட்டார் அதற்கு எந்த விலையுமில்லை எனவும் திருத்தந்தை கூறினார். கடவுளின் கொடைகள் எல்லாம் விலையின்றி நமக்குக் கொடுக்கப்படுகின்றன. ஆனால் அதைப் பெற இயலாமல் பலவேளைகளில் நம் இதயங்களை மூடி வைத்துக்கொள்கின்றோம் எனவும் உரைத்த திருத்தந்தை கிறிஸ்தவர்கள் குறிப்பாக மேய்ப்பர்களும், ஆயர்களும், கடவுளின் அருள்வரங்களை விற்பதற்கு முயற்சிக்கக் கூடாது. மாறாக அவற்றை இலவசமாகக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். ●

## திருச்சட்டத்தை....

04ஆம் பக்கத் தொடர்ச்சி.

கிறிஸ்துவின் மீதும் அவர் உருவாக்கிய திருஅவை மீதும் ஆழ்ந்த அன்பு கொண்டுள்ள அதே வேளையில் மனிதர்கள் மீதும் குறிப்பாக வறியோர் மீதும் தனிப்பட்ட அக்கறையும் அன்பும் காட்டுவது திருத்தந்தையின் பிரதிநிதிகள் கொண்டிருக்கவேண்டிய பண்புகள் என்று கர்தினால் பரோலின் அவர்கள் தன் மறையுரையில் எடுத்துரைத்தார். ●

## மன்னார் மறைசாட்சிகள்.....

01ஆம் பக்கத் தொடர்ச்சி.

எமது மன்னார் மறைசாட்சிகளின் வாழ்வு, மறைசாட்சியத் தியாகம் இவற்றை உங்களுடைய குடும்ப, ஆலய, பங்கு மட்ட வழிபாடுகளில் புகுத்தி மன்னார் மறைசாட்சியர் பக்தி வணக்கத்தை ஊக்கப்படுத்த அழைக்கப்படுகின்றீர்கள்.

பங்குகளாக, பங்குப்பணிக்குழுக்களாக, குடும்பங்களாக தோட்டவெளி மன்னார் மறைசாட்சியர் கல்லறையினை இவ் யூபிலி ஆண்டில் ஒருமுறையாவது தரிசித்து எம் மறைசாட்சியம் மூலமாக இறையாசீரைப் பெற்றுக்கொள்ள அழைக்கின்றோம். மறைசாட்சியரின் பரிந்துரையால் நீங்கள் பெற்றுக்கொண்ட வரங்கள் அல்லது புதுமைகள் இருக்குமாயின் அவற்றை உரியவர்களுக்குத் தெரியப்படுத்த நினைவூட்டுகின்றோம்.

தொடர்புகளுக்கு:- அருட்பணி. ம.க. அருள்பிரகாசம் (0765327272), அருட்பணி. டே. அலெக்சாண்டர் சில்வா (0718612625)

(இக் குழுக்கூட்டத்தில் குருமுதல்வர் மற்றும் ஏனைய அருட்பணியாளர்களான மங்களராஜா, பிலேந்திரன், தேவராஜா கொடுதோர், அலெக்சாண்டர் சில்வா, அருள்பிரகாசம் ஆகியோர் பங்குபற்றினார்கள்.) ●

## இலங்கையில்...

07ஆம் பக்கத் தொடர்ச்சி.

**அருட்சகோதரர் யூட் றமேஸ்** (கொழும்பு மறைமாவட்டம்)

இவர் தனது முதல் வார்த்தைப்பாட்டை கடந்த புரட்டாதி மாதம் 15ஆம் நாள் மக்கோனைப் பங்கில் உள்ள புனித மரியன்னை ஆலயத்தில் (களுத்துறை) தமிழ் மானில மாகாணத்தலைவர் அருட்பணி. அருள்றாஜ் OCD அவர்கள்முன் அர்ப்பணித்தார்.

கார்மேல் சபைக்கு முதல் ஆண் துறவியராக தம்மை அர்ப்பணிக்கும் இவ்விரு சகோதரர்களின் அழைத்தல் வாழ்வு சிறக்கவும் மேலும் கார்மேல்சபை மென்மேலும் எம் மறைமாவட்டத்திலும், எம் நாட்டிலும் வளர இறை ஆசிருடன் கூடிய நல் வாழ்த்துக்களை சமர்ப்பிக்கின்றோம். ●

## மடுமாதா...

01ஆம் பக்கத் தொடர்ச்சி.

இக் கூட்டத்தில் மடுத் திருத்தலத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக முக்கியமாக ஆராயப்பட்டுள்ளது. மக்கள் மருதமடு அன்னையின் பரிந்துரையினைப் பெற்றுக்கொண்டு ஆசீர்வாதத்தின் வழியாக அவர்களின் வாழ்க்கை சிறப்புப்பெற வேண்டும். பாதுகாப்பிற்காக மேற்கொள்ளப்படும் அனைத்துவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். பாதுகாப்பு சோதனைகளுக்கு முகம் கொடுக்கும் வகையில் மக்களும், பக்தர்களும் தயாராக வரவேண்டும். நீங்களும், உங்கள் உடமைகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்பு ஆலயத்தினுள்ளே செல்ல அனுமதிக்கப்படுவீர்கள். அதனை மனதில் வைத்து ஆடி மாத திருவிழாவிற்கு உங்களை வரவேற்கின்றோம், என ஆயர் மேலும் தெரிவித்தார். ●

## பொது நிலையினர்....

03ஆம் பக்கத் தொடர்ச்சி.

புனித யோசேவ்வாஸ் பொதுநிலையினர் அருட்பணிமையத்தின் இயக்குனர் அருட்பணி. ச. எமிலியானுஸ்பிள்ளை அடிகளாரின் முயற்சியினால் அமைக்கப்பட்ட புனிதரின் திருவுருவ அமைவிடத்தை ஆசீர்வதித்த நிகழ்வின்போது திருமண அருட்சாதன முன்னாயத்த வகுப்பில் கலந்து கொண்ட இளைஞர், இளம் பெண்களும் அவர்களுக்கான வகுப்புக்களை வளங்கும் வளவாளர்களும் பிரசன்னமாகியிருந்தனர். இந்நிகழ்வின் இறுதியில் ஆயர் அவர்கள் திருமண அருட்சாதன முன்னாயத்த வகுப்பில் கலந்து கொண்ட இளைஞர், இளம் பெண்களையும் அவர்களுக்காக வகுப்புக்களை வளங்கும் வளவாளர்களையும் சந்தித்து அவர்களோடு உரையாடினார். ●

## FAO பன்னாட்டு....

04ஆம் பக்கத் தொடர்ச்சி.

ஐ.நா.வின் உணவு மற்றும் வேளாண்மை நிறுவனமான FAO உரோம் நகரில் நடத்திவரும் பன்னாட்டு கருத்தரங்கிற்கு திருத்தந்தை வழங்கிய செய்தி இந்நிறுவனத்தின் தலைமை இயக்குனர் ஹோஸே கிராசியானோ த சில்வா அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. 2019ஆம் ஆண்டு முதல் 2028ஆம் ஆண்டு வரையிலான பத்து ஆண்டுகள் குடும்பங்களை விவசாயத்தில் ஈடுபடுத்தி உருவாக்க வேண்டுமென FAO நடத்தும் இக் கருத்தரங்கின் முயற்சியை திருத்தந்தை தன் செய்தி வழியே பாராட்டியுள்ளார்.

“பட்டினியின் முடிவு, உணவு பாதுகாப்பு, முன்னேற்றமடைந்த சத்துணவு மற்றும் நீடித்திருக்கக்கூடிய வேளாண்மை” என்ற இலக்குகளைக் கொண்டுள்ள 2030ஆம் ஆண்டு திட்டத்திற்கு இக்கருத்தரங்கு நல்லதொரு தயாரிப்பு என்று திருத்தந்தை தன் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். வேளாண்மையில் குடும்பங்கள் ஈடுபடவேண்டும் என்பதை வலியுறுத்தும்போது அதில் பெண்களின் பங்களிப்பு கூடுகின்றது என்பதையும் பெண்களின் அறிவுத்திறன் பல பிரச்சனைகளைத் தீர்க்கும் என்பதையும் நாம் உணர்கின்றோம் என்று திருத்தந்தை இச்செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளார். வேளாண்மையைக் குறித்து குறிப்பாக வேளாண்மையும், பூமியின் பாதுகாப்பும் எவ்வாறு ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளது என்பது குறித்தும் இளையோருக்கு கல்வி புகட்டும் தேவை கூடியுள்ளது என்பதையும் திருத்தந்தையின் செய்தி வலியுறுத்துகின்றது. வேளாண்மை மற்றும் குடும்பம் ஆகியவற்றின் மாண்பை இளையோருக்கு உணர்த்துவது அனைத்து அரசுகள் மற்றும் உலக நிறுவனங்களின் முக்கிய குறிக்கோளாக இருக்கவேண்டும் என்ற வேண்டுகோளை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இச்செய்தியில் விடுத்துள்ளார். ●

## இன்றைய.....

05ஆம் பக்கத் தொடர்ச்சி.

4. பிள்ளைகள் தாமாகவே முன்னேறி வருவர் என்று எண்ணி வேறெதையும் செய்யாமல் சும்மா இருந்துவிடக்கூடாது. “கண்ணீரோடு விதைக்கிறவர்கள் அக்களிப்போடு அறுவடை செய்வார்கள்” (திபா 126:5). கானாவூர் திருமணத்திலே பணியாளர்கள் நடந்து கொண்டதைப் போலதான் பெற்றோரும் நடந்து கொள்ள வேண்டும். இயேசு அவர்களிடம் “இத்தொட்டிகளில் தண்ணீர் நிரப்புங்கள்” என்று கூறினார். கலப்படம் எதுவும் செய்ய முடியாதபடி அவர்கள் அவற்றை விளிம்பு வரை நிரப்பினார்கள். (யோவா 2:7) பணியாளர்கள் ஆண்டவர் இயேசுவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து அவர் கட்டளையிடும் வார்த்தைகளைத் தம் உள்ளத்தில் இருத்தி அவ்வார்த்தைகளை தம் பிள்ளைகளின் உள்ளத்தில் பதியுமாறு சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும். (இச. 6:6-7). தீயது எதுவும் மேற்கொள்ள இயலாதபடி பிள்ளைகளின் உள்ளத்தை அதன் விளிம்புவரை இறைவார்த்தைகளால் பெற்றோர் நிரப்பிவிட வேண்டும். தண்ணீரை நல்ல திராட்சை இரசமாய் மாற்றிய ஆண்டவர் இயேசுக் கிறிஸ்து நம் பிள்ளைகள் செய்வதனைத்திலும் வெற்றி பெறச் செய்து அவர்தம் வாழ்வை இனிமையாக்குவார். ●

## சமாதான....

03ஆம் பக்கத் தொடர்ச்சி.

இவர் ஆரம்பக்கல்வியை வஞ்சியன்குளம் றோ.க.த.க. பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை நானாட்டான் மகாவித்தியாலயத்திலும், உயர்கல்வியை எருக்கலம்பிட்டி மத்திய மகா வித்தியாலயத்திலும் கற்றார். சமூகப் பணியில் ஈடுபாடு கொண்ட இவர், பல சமூகமட்ட அமைப்புக்களிலே முக்கிய பதவிகளை வகித்தவர். கலையார்வம் உள்ள இவர் சில சமூக நாடகங்களை எழுதி மேடையேற்றியதுடன், பல வாழ்த்துப்பாக்களையும் இயற்றிப்பாடியுள்ளார். மேலும் அரச, உள்ளூராட்சி சேவையாளரான இவர் 21 வருடங்களுக்கு மேலாக முசலி (சிலாவத்துறை) பிரதேசசபையில் செயலாளராக பணி புரிந்து ஓய்வு பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. ●

## சுட்டெரிக்கும்.....

09ஆம் பக்கம்

வெறுக்கவேண்டாம். எதிரியாகப் பார்க்கவேண்டாம். என்ற சாரப்படக் கூறி மன்னிப்பு சகிப்புத்தன்மையை எடுத்துக் காட்டியுள்ளார். அடுத்ததாக அரசின் நடவடிக்கைகள் திருப்தியாக இல்லை என்று உண்மையை எடுத்துக் கூறியுள்ளார். தனக்கென அரசு கொடுக்கவிருந்த குண்டு துளைக்காத காரை நிராகரித்து இறைவன் என்னைக் காப்பாற்றுவார். நீங்கள் மக்களைக் காப்பாற்றுங்கள் என்று கூறி இறை திருவுளத்திற்குக் கீழ்ப்படிந்தார். நீர்கொழும்பின் பள்ளிவாசலுக்குச் சென்று முஸ்லீம் மக்களுடனான சகோதரத்துவத்தை உறுதிப்படுத்தினார். இவ்வாறான சாட்சியங்கள் கிறிஸ்தவம் என்றால் என்ன என்பதை இந்நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தின. மறைசாட்சியமே கிறிஸ்தவ வாழ்வின் உயிர் மூச்சு என்பதை இயேசுவின் பிறப்பு முதல் இன்றுவரை உணர்த்தும் தூய ஆவியாரர் உயிர்ப்பு ஞாயிறு குண்டுவெடிப்பின் மூலம் இலங்கைக் கத்தோலிக்க திருச்சபை இனியாவது துயில்கலைந்தெழுந்து, வீறுகொண்டெழுந்து, உயிர்த்துடிப்புடனும், ஆழமான நம்பிக்கையுடனும், நேர்மையான அன்பிய உணர்வுடனும் நிரந்தரமான புதுப்பித்தல் ஒன்றை ஒவ்வொரு “ஆலயத்” திருச்சபையிலும் மேற் கொள்ள வேண்டுமென்று இடித்துரைத்துள்ளார். இம்மாபெரும் பணிக்கு நாமெல்லோரும் துணிந்து முன்வருவோம். ●

## கற்கிடந்தகுளம்.......

03ஆம் பக்கத் தொடர்ச்சி.

வரிசையில் ஐந்தாவது நூலாக ‘கிளிநொச்சி மாவட்ட அரங்க மரபு’ எனும் நூலினை வெளியிட்டு நம் மண்ணிற்கு பெருமை சேர்த்துள்ளார். ‘ஈழத்து நாடக ஆய்வுப் பேராற்றில் இன்னொரு வீரியம் மிக்க நதியாக யேசுதாசன் எனும் இந்த ஆய்வுநதி இணைகின்றது’ என கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள் இந்நூலுக்கான அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளமை இவருடைய முயற்சியின் கனதியைப் பறைசாற்றுகின்றது. ஈழத்தமிழருக்கான பொக்கிசமாக, ‘கிளிநொச்சி மாவட்ட அரங்க மரபு’ நூல் வெளியீடு கிளிநொச்சியில் மிகச்சிறப்பாக நடந்தேறியது. போருக்கு பின்னர் அனேகமான கலைசார் அடையாளங்கள் அழிந்தன அல்லது ஆவணப்படுத்தத் தவறின. ஈழத்தமிழரின் பாரம்பரிய கலை வடிவங்கள் நவீன யுகத்திலே மறைந்துபோயின. கிளிநொச்சி மாவட்டத்தின் அரங்க மரபு பற்றிய தேடலுடன் கூடிய ஆய்வுத்தரவுகள் திரட்டப்பட்ட காத்திரமான ஆய்வுநூல் ச.யேசுதாசன் எழுதிய இந்நூலாகும்.

இதன் வெளியீட்டு விழாவானது 11.04.2019 வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கிளிநொச்சி கரைச்சி பிரதேசசபை மண்டபத்தில் ஆரம்பமானது. கிளிநொச்சிக் காவேரிக் கலாமன்றம் நிகழ்வினை ஒழுங்கமைத்திருந்தது. நிகழ்வுக்கு முத்துஜயன்கட்டு வலதுகரை மாகவித்தியாலய அதிபர் சி.நாகேந்திரராசா தலைமை வகித்தார். மங்கள விளக்கேற்றல், அகவணக்கம் என்பன முறையே இடம்பெற்றன. வரவேற்பு நடனத்தினை தர்மபுரம் கட்டைக்காடு கலைஒளி கலாமன்ற மாணவிகள் நிகழ்த்தினர். ஆசியுரையினை கிளிநொச்சி அன்னை இல்ல இயக்குநர் அருட்பணி. அந்தோனிமுத்து குரூஸ் (அமதி) வழங்கினார். வரவேற்புரையினை புளியம்பொக்கணையைச் சேர்ந்த ‘நினைவுகளின் நினைவோடு’ நூலாசிரியர் வேல்மகள் வழங்கினார். நூல் மற்றும் நூலாசிரியர் பற்றிய அறிமுகவுரையினை யோ.புரட்சி நிகழ்த்தினார். தொடர்ந்து காவேரிக் கலாமன்ற நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் லெபோறா ஜீவமலர் வெளியீட்டுரை ஆற்றினார். வாழ்த்துரையினை சென்.திரேசாள் மகளீர் கல்லூரின் அதிபர் செல்வி. மரியாம்பிள்ளை அன்ரனி சாந்தா வழங்கினார். நூலினை அரங்கச் செயற்பாட்டாளரும், கிளிநொச்சி வலயக்கல்வி உதவிப் பணிப்பாளருமாகிய செ.விந்தன் வெளியிட்டு வைக்க, சிவனருட்செல்வன் அரிசி ஆலை உரிமையாளர் பி.திருஞானசம்மந்தன் முதற்பிரதி பெற்றுக்கொண்டார். தொடர்ந்து பங்கேற்பாளர்கள் நூல்களைப் பெற்றுக்கொண்டனர்.

நூலின் ஆய்வுரையினை கிளிநொச்சி மத்திய கல்லூரியின் ‘நாடகமும் அரங்கியலும்’ ஆசிரியர் அருணாசலம் சத்தியானந்தம் நிகழ்த்தினார். இத்தாலியிலிருந்து வருகைதந்த அந்தோனிப்பிள்ளை ஜெயசீலன் தனது அரங்கவியல் அனுபவப் பகிர்வினை பாடலுடன் இணைந்த உரையாக வழங்கினார். சிறப்புரையினை அரங்கச் செயற்பாட்டாளரும், கிளிநொச்சி வலயக்கல்வி உதவிப் பணிப்பாளருமாகிய செ.விந்தன் நிகழ்த்தினார். ஏற்புரையினை நூலாசிரியர் ச.யேசுதாசன் வழங்கினார். கிளிநொச்சி விவசாயக்கல்லூரி விரிவுரையாளர் துஸ்யந்தினி நன்றியுரையினை வழங்கினார். மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ச.யேசுதாசன் கிளிநொச்சி மாவட்டத்தின் கலையம்சங்களை ஆய்வுக் கலாசாரச் செயல்நெறி தவறாது ஈழத்து ஆய்வுப்பரப்பில் பாச்சியிருப்பதை நிகழ்வின் பிரமுகர்களும், கல்விமான்களும் பாராட்டியமை எமது மாவட்டத்திற்கும் பெருமையாகும். இவரது வெற்றியை மன்னா பாராட்டுவதுடன் மேலும் வெளியீடுகள் மலரவேண்டுமென ஆசித்து வாழ்த்துகின்றது. ●

## நம் ஒன்றிப்பின்....

04ஆம் பக்கத் தொடர்ச்சி.

அன்புச் சகோதரர் சகோதரிகளே! திருத்தூதர்பணிகள் குறித்த நம் மறைக்கல்வித் தொடரில் நாம் இயேசுவின் உயிர்ப்போடு இணைந்ததாக திருஅவையின் நற்செய்தி அறிவிப்புப்பணி தொடங்கியதைக் குறித்து நோக்கினோம். தூய ஆவியார் குறித்த இயேசுவின் வாக்குறுதி நிறைவேற்றப்படுவதற்கென இயேசுவின் சீடர்கள் அன்னை மரியாவோடு, மேல்மாடியில் செபத்தில் ஒன்றித்திருந்தனர். தொடக்க காலத்திலிருந்தே திருஅவையானது ஓர் ஆன்மீகக் கூட்டுறவாகவும், இறைமக்கள் சமூகமாகவும் இருந்து வருவதைக் காண்கின்றோம். இயேசு பன்னிரெண்டு சீடர்களைத் தேர்ந்தெடுத்தது திருஅவைக்கும், இஸ்ராயேல் மக்களுக்கும் இடையே நிலவும் தொடர்ச்சியைக் காட்டுகின்றது. இயேசுவின் சீடர் கூட்டத்திலிருந்து யூதாஸ் விலகிச் சென்றபின் அவரின் இடம் இன்னொருவரால் நிரப்பப்படவேண்டும் என்பதை சீடர்கள் அறிந்திருந்தனர். மத்தியாவை இறைவன் தேர்ந்தெடுத்ததை அறிந்துகொள்ள புனித பேதுருவின் வழிகாட்டுதலில் சீடர்கள் சமூகம் செபத்தில் இணைந்திருந்தது. “நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லோரும் அறிந்து கொள்வர்.” (யோவான் 13:35) என ஏற்கனவே தன் சீடர்களிடம் கூறியுள்ளார் இயேசு. உயிர்த்த இயேசுவுக்கும் அவரின் மீட்பளிக்கும் அன்புக்கும் சீடர்களின் முதல் சாட்சியத் தோற்றமாக அவர்களின் வெளிப்படையான ஒன்றிப்பே இருந்தது. இறையன்பின் மீட்பளிக்கும் சக்திக்கு நம் ஒன்றிப்பின் வழியாக சான்று பகர்வோமாக. இந்த ஒன்றிப்பே வீண்பெருமைகளையும், பிரிவினைகளையும் வெற்றி கொண்டு பன்மைத் தன்மைகளிலிருந்து ஒரே இறைமக்கள் கூட்டத்தை உருவாக்குகின்றது. இவ்வாறு தன் புதன் மறைக்கல்வி உரையை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களை வழங்கி இறுதியில் தன் அப்போஸ்தலிக்க ஆசீரையும் அளித்தார். ●

## திருத்தந்தையின்....

04ஆம் பக்கத் தொடர்ச்சி.

றுமேனியாவுக்கான தனது திருத்தூதுப்பயணத்தில் இரண்டு மிகப்பெரிய நகரங்களை திருத்தந்தை தரிசித்தார். அதில் 1862இல் றுமேனியாவில் தலைநகரமாகிய புக்காறெஸ்ட் நகரின் அரசியல் மற்றும் பொருளாதாரத் தலைவர்களை சந்தித்து வறியோர், நலிந்தோர் சிறுவர் என எவரும் ஒதுக்கப்படாத ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்பும்படி கூறினார். மேலும் ஆர்த்தடாக்ஸ் சபையினரும் கத்தோலிக்கரும்பழங்கால தவறுகளை மறந்து பொதுவான இலக்கு நோக்கி நடைபயில அழைப்பு விடுத்தார். றுமேனியாவில் வரலாற்றுத் தலைநகரமாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்ட யாஜ் நகரில் அரசியாம் அன்னை மரியா ஆலயத்தில் 600 வயோதிபர்கள் நோயாளர்களைச் சந்தித்துவிட்டு அங்கு வைக்கப்பட்டிருந்த மறைச்சாட்சி Anton Durcovici அவர்களின் திருப்பண்டங்களிடம் செபித்தார். இறுதியில் மீட்பராம் கிறிஸ்துவில் பளிங்குத்திருவுருவம் ஒன்றையும் றுமேனியாவில் சந்தியாகா தெகொம்பொஸ் தெல்லாவுக்கு வழிகாட்டும் கல் ஒன்றையும் ஆசீர்வதித்தார். ●

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.203

**யோபு (அதிகாரம் 1 முதல் 8 முடிய)**

உங்கள் விடைகளை ஓகஸ்ட் மாதம் 05ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | 03 | | | 04 | | | | | 05 | |
| | ✸ | | 06 | | 07 | | | ✸ | | |
| | 08 | | | | | 09 | | | | |
| | | 10 | | | | 11 | 12 | | | |
| | | | | | 13 | | | | 14 | |
| ✸ | 15 | | | | | | ✸ | | | |
| | | ✸ | 16 | | | | | 17 | | |
| | | | | | 18 | | | | | |
| | 19 | | | | | 20 | | | | |
| 21 | | | | ✸ | | | 22 | | | 23 |

உங்கள் விடைகளை, ***குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 202, தலைமன்னார் வீதி, மன்னார்*** என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(✸ என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. கீழை நாட்டு மக்கள் எல்லாரிலும், இவரே மிகப் ............. இருந்தார்.
3. உமது கையைநீட்டி அவனுடைய ............ சதைமீது கை வையும்.
6. அல்லது .............. பெறாக் கருவைப்போலவும், ஒளியைக் காணாக் குழவியைப்போலவும் அழிந்திருப்பேன். (இறுதி எழுத்து 1வது எழுத்துக்குப் பின்னே நிற்கிறது)
8. எனக்கு ............ இல்லை, ஓய்வு இல்லை, அமைதி இல்லை, அல்லலே வந்துற்றது.
10. வணிகர் கூட்டம் தம் ............. மாற்றுகின்றது.
15. தொடரும் ............... துள்ளி மகிழ்வேன்.
16. கடற்கரை ................. இப்போது அவை கனமானவை.
19. காட்டுக் கழுதைக்குப் புல் ............ அது கனைக்குமா?
21. உமக்குரிய ............. மீண்டும் ஈந்திடுவார்.

### மேலிருந்து கீழ்

1. அப்போது திடீரெனப் ................. பாலை நிலத்திலிருந்து வீசி வீட்டின் நான்கு மூலைகளிலும் தாக்கியது.
2. சாத்தானும் ஆண்டவரின் முன்னின்று ...........ப் போனான்.
4. வானத்தை நோக்கித் தங்கள் தலையில் வாரிப்போட்டுக் கொண்டார்கள்.
5. தீவினையை உழுது ............ விதைத்தவர் அறுப்பது அதையே.
8. ......................ப் பாரும், குற்றமற்றவர் எவராவது அழிந்ததுண்டோ?
11. கடற்கரை ............... இப்போது அலை கனமானவை.
14. கற்குவியலில் பின்னிடும் அவர்களின் வேர்கள் .............. இடம் தேடும்.
17. உம் செல்வத்திலிருந்து என் பொருட்டுக் ...................க் கொடும் என்றோ சொன்னதுண்டோ?

### வலமிருந்து இடம்

2. ஒருநாள் தெய்வப் ........... ஆண்டவர் முன்னிலையில் ஒன்று கூடினர்.
5. நன்மையைக் கடவுளிடமிருந்து பெற்ற நாம் ஏன் ...........ப் பெறக்கூடாது?
9. அதைப் புதையலினும் மேலாய்க் ................த் தேடுகிறார்கள்.
11. மண் முகத்தே .................ப் பொழிபவரும் வயல் முகத்தே நீரைத் தருபவரும் அவரே.
13. படுக்கும்போது எப்போது ............... என்பேன்.
14. அடுத்திருப்போர்க்குக் ................ காட்டாதோர் எல்லாம் வல்லவரையே புறக்கணிப்போர்.
18. இதோ கடவுள் ............ மனிதர் பேறுபெற்றோர் (இறுதி எழுத்து 1வது எழுத்துக்குப் பின்னே உள்ளது)
20. காரணமின்றி அவனை ............. நீ என்னை அவனுக்கு எதிராகத் தூண்டிவிட்ட போதிலும், அவன் தன் மாசின்மையில் உறுதியாக நிலைத்துள்ளான். (இறுதி இரு எழுத்துக்கள் மாறியுள்ளன)
22. உமக்குரிய உறையுளை .......... ஈந்திடுவார் (3வது எழுத்து 1வது எழுத்துக்குப் பின்னே உள்ளது)

### கீழிருந்து மேல்

7. அது .............. யின் கண்விழிப்பைக் காணாதிருக்கட்டும் (2ம் 3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
9. பழுத்த வயதில் தளர்வின்றிக் கல்லறை செல்வீர் பருவத்தே மேலோங்கும் ............ போல். (குழம்பியுள்ளது)
12. அவரது துயரின் ..............க் கண்டு எவரும் ஒரு வார்த்தைகூட அவருடன் பேசவில்லை.
15. இறைப்பற்றில்லாரின் நம்பிக்கை ................. போம்.
17. எளியவரை வலியவரின் .............. மீட்கின்றார்.
21. இப்பொழுதோ நான் மண்ணுக்குள் ...............ப் போகின்றேன்.
22. என் ........... மன்னியாதது ஏன்?
23. இருப்பினும் உம் வாயைச் சிரிப்பாலும் ............... மகிழ்வொலியாலும் நிரப்புவார்.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 201

**சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்:**

**முதலாம் பரிசு:**
A. றொசாணி,
பள்ளிமுனை மேற்கு,
மன்னார்.

**இரண்டாம் பரிசு:**
ம. கொண்சலா,
எழுத்தூர்,
மன்னார்.

**மூன்றாம் பரிசு:**
றொ. சர்மிலன்,
ஆஸ்பத்திரி வீதி,
கிளிநொச்சி.

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 89 பேர்.**
**சரியான விடைகளை எழுதியோர் 63 பேர்.**

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 201ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. ச. ஜெயா, எழுத்தூர், மன்னார்.
02. இ. பற்றிக் கனிசியஸ் சில்வா, பெரிய பண்டிவிரிச்சான்.
03. ஐ. இருதயமேரி இல: 54, கற்குளம், சிதம்பரபுரம்.
04. செ. ஆன் நியூசின்னா துரம், மரியாள்வீதி, தாழ்வுபாடு.
05. டெபோறா மோகன்ராஜ். இல: 7 தபாலக வீதி, மன்னார்.
06. செ. இன்பென்ரா, டயஸ், மரியாள்வீதி, தாழ்வுபாடு.
07. புஸ்பாசேவியார், உவர்மலை, திருகோணமலை.
08. அ. மேரி டொறோதியா குரூஸ், 6ம் வட்டாரம், வங்காலை.
09. செ. செல்வ தர்ஷன், காத்தான்குளம், கட்டைக்காடு.
10. செ. ஆன் நிதர்சனா, மொறாய்ஸ், பட்டித்தோட்டம்.
11. அ. டிலோஜனா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
12. S. றெமோனா பறுனாந்து, 8ம் வட்டாரம், பேசாலை.
13. ஐ. அலோஜிகா, பாலைப்பெருமாள்கட்டு வட்டக்கண்டல்.
14. செ. மனோகரி, பட்டித்தோட்டம், மன்னார்.
15. ஜெ. கெபியோன், கல்நாட்டி, முருங்கன்.
16. நி. நியோவின் பறுனாந்து, முத்தரிப்புத்துறை.
17. அ. அகஸ்ரீனா, உயிர்த்தராசன்குளம், பறப்பாங்கண்டல்.
18. அ. பப்சி சதுர்சிகா, இசைமாலைத்தாழ்வு, கற்கிடந்தகுளம்.
19. செ. சரஸ்வதி, உயிர்த்தராசன்குளம், பறப்பாங்கண்டல்.
20. V. டிவைனா குரூஸ், வளனார்புரம், தாழ்வுபாடு.
21. செ. மரியறூபன், குளக்கட்டு வீதி, அடம்பன்.
22. கு. டிறோஜினி, மூன்றாம்பிட்டி, தேவன்பிட்டி,
23. K. ஜெஸ்லின், இசைமாலைத்தாழ்வு, கற்கிடந்தகுளம்.
24. சகாயறாஜன் டிலுக்சன், சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
25. நிருசாந் அக்ஷயன், அச்சங்குளம், நானாட்டான்.
26. சகாயறாஜன், டவ்சன், சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
27. L.E. மாக்றிறட் மேசி, குழந்தையேசு புரம், மன்னார்.
28. நீ. மேரி றியன்சி பெனாண்டோ, சிலாவத்துறை.
29. பா. நிஷாந்தினி, உயிர்த்தராசன்குளம், பறப்பாங்கண்டல்.
30. ச. கொண்சிக்கா குரூஸ், சவேரியார்புரம், சிலாவத்துறை.
31. பா. தர்சினி, உயிர்த்தராசன்குளம்.
32. டி. அன்ரனி ஐய்டன் குரூஸ், தலைமன்னார் கிராமம்.
33. த. அபிநயா, மாதிரிகிராமம், நறுவிலிக்குளம்.
34. நோ. சுவின்சிகா கூஞ்ஞ பெரியபண்டிவிரிச்சான், மடு.
35. வ. கெலன் தர்ஷிகா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
36. ச. கனியூட்டா, பொன்தீவுகண்டல், முருங்கன்.
37. வ. றொணி, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
38. யோகநாதன், விக்டரின் 5ம் குறுக்குத்தெரு, தலைமன்னார்.
39. அ. அனுஸ்கா ஆன்ரிகா பெரியபண்டிவிரிச்சான், மடு.
40. P. அனற்லீன், பாப்பாமோட்டை, மாந்தை.
41. S. நீக்கிலாஸ் குலாஸ், லண்டன்.
42. ச. ஜெயந்திமாலா, கல்நாட்டி, முருங்கன்.
43. ல. லருயன் லோகு, 3ம் வட்டாரம், பேசாலை.
44. ஜேம்ஸ் இலக்கியன், தோட்டவெளி.
45. கி. கீர்த்திகன், சாளம்பன், ஆண்டாங்குளம்.
46. B. சரணிக்கா, சாந்திபுரம், மன்னார்.
47. கி. அபிஷேக், சாளம்பன், ஆண்டான்குளம்.
48. கெ. சுகந்தினி, பொன்தீவுகண்டல், முருங்கன்.
49. ஜெகநாதன், மடுக்கரை, நானாட்டான்.
50. J. பிரவின், சவேரியார்புரம், சிலாவத்துறை.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
25
06
1954



மலர்வு
22
05
2019

# திரு. அந்தோனி அமலதாஸ் கூஞ்ஞ

**(தலைமன்னார் மேற்கு)**

முப்பத்தொன்று கடந்ததையா நினைவெல்லாம் துளிர்க்குதையா
கிராமத்தின் கிராமக்கூத்தரே ஒப்பில்லா ஒப்பாரிப் பாடகரே!
பிரபஞ்சமே பிரம்மித்த பிரியமான பிரசங்கியே!
உங்களின் மறைவாலே திங்களும் குமுறுகின்றதே
எங்களின் மனங்களும் எங்களிடம் இல்லையே
வேதப்பிரசங்கமும் மெட்டாய் திகட்டாமல்க் கேற்பதெப்போ
எட்டாம் பிரசங்கத்தைக் காதுகளும் கேட்பதெப்போ
லோறன்சியார் நாடகமும் நீரின்றியினி உயிர்க்குமோ
வானத்து விண்மீனாய் நினைவுகளும் மின்னிடுதே
எம்பதியின் இசையரசனே வெண்பனிக்கும் உம் குணமே
கண் திறக்கும் மழலைகளும் உம் முகத்தை மறவாதே
நரை முடியானாலும் குரல் மணிமகுடம்தானே
குறையொன்றும் உம்மிலில்லை நிறைவாய்க் கொடுத்தீரே.




***பிரிவால் நினைந்துருகும்:*** *மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.*


## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப்
பொருத்தமான
ஆக்கங்களை
சுருக்கமாகவும்,
கருத்தாழமிக்கதாகவும்
எழுதி அனுப்புங்கள்.
தரம் கண்டு
மன்னாவில்
பிரசுரிப்போம்

*-மன்னா நிர்வாகம்-*


## 08ஆம் ஆண்டு நினைவஞ்சலி



# திரு. பேதிரு வேதநாயகம்

**(சூரியகட்டைக்காடு, நானாட்டான்)**

**மலர்வு : 10 - 01 - 1930**
**உதிர்வு : 13 - 06 - 2011**

***"ஆண்டவர் தம் அன்பர்களின் மரணம் அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது."***

நிழல் போல் இருந்து நினைவான என் அப்பா!
காலமெல்லாம் எம்மைக் காத்திருப்பீர்கள் என்றிருக்க
கண் இமைக்கும் நேரத்தில் கண்ணீர் துளியாகினீர்கள்
இமைகள் நனைய, இதயம் நொருங்க,
எம்மை தவிக்க விட்டு
கடமை முடிந்ததென்று கடவுள் பாதம் அமர்ந்தீர்களோ.
நீங்கள் எங்களை விட்டு தூரத்தில் இல்லை
நீங்கா நினைவுகளில் வாழ்கின்றீர்கள்
உங்கள் ஆன்மா சாந்திபெற உள்ளத்தால்
வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்:** மகன், மருமகள், பேரப்பிள்ளைகள், பெரியகட்டைக்காடு, நானாட்டான்
*தகவல் - டோமினிக் குடும்பத்தினர்*

# நீங்காத நினைவுகள்

## 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. அகுஸ்ரின் ஜேசுதாசன் (பாலா)**
**(ஓய்வுநிலை நில அளவை உதவியாளர் - கீரி, மன்னார்)**

மலர்வு : 24 - 08 - 1954
உதிர்வு : 17 - 05 - 2018

**"மண்ணில் வாழ்ந்து சென்ற நல் இதயமே, விண்ணில் இறைவன் இன்பம் தருவார்"**

இரவு பதினொரு மணிக்கு கிணற்றின் ஆழம் பார்க்கப்போன உமக்கு மனைவி மகள் இருப்பதை மறந்து காலனுக்கு பலியானீரோ. ஒருவருட பூர்த்தி மறவாத மனைவி மகள் இரவினிலே நீராடி விட்டு வருவதாகக் கூறி கிணற்றடிக்குச் சென்ற உம்மை கிணற்றிற்குள் காத்திருந்த காலன் இழுத்துச் சென்று விட்டதோ.

**பிரிவால் நினைந்துருகும்:**
மனைவி, பிள்ளை

## 41ஆம் நாள் நினைவஞ்சலி



**அருட்பணி. ஜீவனதாஸ் பெர்னாண்டோ அ.ம.தி**
**(பேசாலை)**

மலர்வு : 24 - 09 - 1956
குருத்துவத்தில் : 08 - 12 - 1990
உதிர்வு : 16 - 04 - 2019

ஜீவா என்றழைக்க நீர் இல்லை
எம்மிடையே அன்பு, கருணை, துயர்துடைப்பு
அதனூடே ஒரு கண்டிப்பு இது தான்
நாங்கள் கண்ட ஜீவா பொறுப்புக்களில்
விருப்புண்டு ஆனால் பதவிகளில் வெறுப்புண்டு
இன்றும் உம்மை நினைக்கையிலே உம் பிரிவு
நம்பமுடியவில்லை இப்போதும் உம்மை அழைக்க
எம் மனது துடிக்கின்றது. ஆயினும் மரணம் நிஜம்
என்ற ஒன்று நீர் இறைவனிடம் சென்றதைக்கூறி நிற்கின்றது.

**பிரிவால் நினைந்துருகும்,**
அன்பு குடும்பத்தினர்

## 04ம் ஆண்டு, 60ம் ஆண்டு நினைவு





**அருட்பணி. ச. விக்ரன் அவிதப்பர்**
மலர்வு : 17 - 06 - 1959
உதிர்வு : 22 - 06 - 2015

**திரு. பிலிப்பு சவிரி**
மலர்வு : 20 - 08 - 1937
உதிர்வு : 07 - 06 - 1959

**(பிச்சகுளம்)**

அன்பின் பிறப்பிடமாய் விசுவாசத்தின் தந்தையாய்
எம் குடும்பத்தின் ஒளி விளக்காய்
எம் மறைமாவட்டத்தின் அன்புக் குருவாய்
எம்மை விசுவாசத்தில் வாழ்வித்த எம் குருவே!
அவனியிலே அன்பு பணி செய்ய மறைபோதகப் பணிக்கென
உம்மையே அற்ப்பணித்தீர்.
சிரித்த முகத்துடனே அனைவரையும் வரவேற்றீர்
உம்மைத் தேடி வருபவர்களுக்கு உதவிகள் புரிந்தீர்.
நகைச்சுவையால் மக்களின் மனதை கவர்ந்தீர்.
இப்போது உம் அன்பு வார்த்தைகள் எங்கு குருவே!
அல்லும் பகலும் அன்னையின் முகத்திலே
கண்ணீர் மழை இன்னும் ஓயவில்லையே!
இதைக் கண்டு உறவுகள் நாம் துடிக்கின்றோமே
உம் நீங்காத நினைவுகளால் தந்தையர்களே!

**பிரிவால் நினைந்துருகும்,** அன்பு அம்மா மற்றும் உறவுகள்

## 03ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 27 02 1930



உதிர்வு 01 06 2016

**திருமதி. சே. லோறன்சியா டபரேறா,**
**(ஆனந்தம்மா- சிலாவத்துறை, முத்தரிப்புத்துறை)**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இன்று எம் அனைவரையும் ஏங்க வைத்து விட்டு கண்ணீரை எம் வாழ்வில் மிஞ்சவைத்து கண்மூடி மறைத்து விட்டாயே!

உன் இறுதி நாட்களில் தியானத்திலும், செபத்திலும், வாழ்ந்து இறுதியில் இயேசுவிடம் சென்று விட்டீரே தாயே!
அனைவருக்கும் உதவிக்கரமாய் சிரிப்பின் உறைவிடமாய் அன்பின் சிகரமாய் மகிழ்ச்சியோடு வாழ்ந்தாயே!
எம்மில் நீங்காத நினைவுகளாய் கலந்துவிட்ட எம் அன்புத் தாயே உமக்காய் வேண்டுகின்றோம் இறைவனையே.

**பிரிவால் நினைந்துருகும்:**
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 23 02 1948



உதிர்வு 24 06 2018

**திருமதி. செ. கிறாசியா மரிய தட்சனி தூரம்**
**(கன்னியர் மடவீதி, சின்னக்கடை, மன்னார்)**

**"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறபினும் வாழ்வான்" (யோவான் 11:25)**

அன்பின் பிறப்பிடமாய் பண்பின் இதயமாய்
பாசத்தின் மகுடமாய் எம் குடும்பச் கூடர் ஒளியாய்
எம்மை வாழ்வித்த தெய்வம் நீரல்லவோ!
ஆண்டொன்று ஆனபோதும் ஆறவில்லை எம் துயரம்
உங்கள் நினைவுகள் எம் உயிரோடு உணர்வோடு கலந்து
இதயத்தில் இன்னும் எம்மோடு வாழ்கின்றீர்.
உங்கள் ஆன்மா இறைவனில் இளைப்பாற
நித்தமும் பிரார்த்திக்கின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
அன்புக் கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 04ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி. பிரியசாந்தி ஜெயகுமாரன்**
**(கறுக்காக்குளம், வட்டக்கண்டல்)**

மலர்வு : 28 - 06 - 1982
உதிர்வு : 16 - 06 - 2015

**"உயிர்த்தெழுதலும், வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" (யோ.11:25).**

ஆற்றலும் அறிவும் அழகாய் அமைந்த
போற்றுதற்குரிய பொன்னாபரணமே
தேற்றுதல் இன்றி தவியாய் தவித்து
இற்றுப்போன இதயத்தை சுமந்து
இந்நாள் வரைக்கும் ஏங்கியே வாழ்கின்றோம்
பிரியசாந்தியே எங்கள் பிரியமானவளே - உன்
உயிருக்கு உயிரான இரண்டு கிளிகளும்
உறவோடு உறவாகி ஒரு குறையின்றி
உலகை வெல்லும் ஆற்றலின் மக்களாய்
உருவாகி வருவதை நாங்கள் அறிகின்றோம்
உன்னத இறைவனை இறுகப் பிடிக்கின்றோம்
கண்ணான அவர்களை காலமெல்லாம் காத்திட
காசினியில் அவர்கள் பெயர்சொல்லி விளங்கிட
ஆசியால் நிறைந்திட அனுதினமும் வேண்டுகின்றோம்
அன்பு மணியே ஆசைப் பெருங்கிளியே
ஆண்டுகள் நான்கு ஓடி மறைந்தாலும்
ஆறாத்துயருடன் உமக்காய் வேண்டுகின்றோம்
அமைதியில் துயில்வீர் அமைதியில் துயில்வீர்.

**பிரிவால் நினைந்துருகும்:**
அன்புக்கணவன், பிள்ளைகள் மற்றும் தந்தை, தாய், சகோதரர்கள், மாமி, மைத்துணிமார், உறவினர்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 11 05 1953



உதிர்வு 21 04 2019

**திரு. மரியதாஸ் மிக்கேல்**
**(விடத்தல்தீவு)**

மறைசாட்சிகள் தேவ ஆலயத்தில் குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு எரியும் திரிகளுடன் அன்னாரின் ஆன்ம சாந்திக்காக இறைவேண்டல் நிறைவேற்றப்பட்டது.
அறிவால் உயர்ந்து, அன்பால் நிறைந்து, பண்பால் பெருகி பாசத்தால் இணைந்து வாழ்த எங்கள் சகோதரன் எம்மை விட்டுப்பிரிந்தது கொடுமை ஐயா! அன்பென்னும் மலர் தூவி ஆசை என்னும் நெய்விட்டு நிதம் உன் நினைவெரிய தினமும் இறைவனை வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்:**
சகோதரர், சகோதரிகள் குடும்பத்தினர்.

## 04ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 14 11 1961



உதிர்வு 08 06 2018

### திரு. சுவாம்பிள்ளை வஸ்தியாம்பிள்ளை
(றஞ்சன் - முன்னாள் அதிபர் C.C.T.M.S - வவுனியா)

அப்பா! இயற்கையின் தயக்கமற்ற சுயாதீன நியாயத்தீர்ப்பு நொடிய உயிர் துடிப்பின் முடிவின் மறுக்க முடியாத இறுதி அறிவிப்பில் சென்று ஆண்டு ஒன்று ஆனாலும், அன்பின் பிறப்பிடமாய், கல்வியில் ஆசானாய், எம் குடும்ப சுடர் ஒளியாய் எம்மை வாழவைத்த தெய்வம் நீங்களல்லவோ. அப்பா, ஒரு வருடம் சென்றாலும் கண்ணீரால் கலங்கி துடிக்கின்றோம் அப்பா. நீங்கள் எங்களோடு இருக்கின்றீர்கள் என்ற நம்பிக்கையோடு உங்கள் ஆன்மா இறைவனின் சந்நிதியில் இன்புற்றிருக்க இறைவனை பிராத்தித்து நிற்கின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
அன்பு மனைவி, மகள்.





**Head Office:** #345, Galle Road, Colombo 04, Sri Lanka.
Tel: 011 2553440, 2553441

**Jaffna Branch:** #272/1, Stanley Road, Jaffna, Sri Lanka.
Tel : 021 2224647, 2219424

**Vavuniya Branch:** #45 B/1, 2nd Cross Street, Vavuniya, Sri Lanka.
Tel: 024 2226800, 2226801

**Trincomalee Branch:** #334, Court Road, Trincomalee, Sri Lanka.
Tel: 026 2227242, 2227244





# நீங்காத நினைவுகள்

## 04ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. அ. ஜோசப் சௌந்தரநாயகம்
(இறம்பைக்குளம், வவுனியா)

**மலர்வு : 08 - 05 - 1940**
**உதிர்வு : 13 - 06 - 2015**

மக்கள் பாசம் துறந்து, மனைவி அன்பு மறந்து,
உற்றார் உறவினர் யாவரையும் விட்டு,
இறைவன் வீட்டில் இன்புடன் வாழ
சட்டென்று சென்ற எம் அப்பாவே!
ஆண்டு நான்கு மறைந்து விட்டாலும்,
விழி நீர் சொரிவது குறைய வில்லையே.
விழிப்பிலும் கனவிலும் உமது இன்முகம்,
என்றும் எம்மை விட்டு நீங்காதே அப்பா!
இறைவன் அடியில் எமக்காய் வேண்டிடும்.
உங்கள் ஆன்மா சாந்தி பெற வேண்டுமென,
பரம பாதம் இறைஞ்சி நிற்கின்றோம்.

**பிரிவை நினைந்துருகும்,**
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 04ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. சீமான் பீற்றர் குருஸ்
(முள்ளிக்குளம்)

**மலர்வு : 02 - 02 - 1931**
**உதிர்வு : 18 - 06 - 2015**

**"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"**

நாலாண்டு ஆனாலும் எம்மை விட்டு விலகாது
நித்தமும் உங்கள் நினைவலைகள் எப்பொழுதும்
மலர்ந்த உங்கள் புன் சிரிப்பு பாரினில் எம்மை
பாசமுடன் வளர்த்த அப்பா. விண்ணகம் சென்று
நாலாண்டு நீங்கள் விட்டுச் சென்ற அடிச்சுவட்டில்
நாங்கள் நடைபயில எமக்காக மன்றாடுங்கள்.
உம் ஆன்மா இறைவன் திருப்பாதத்தில் இளைப்பாற
உளமாற வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்:**
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 09 1963



உதிர்வு 03 06 2018

### திருமதி. கா. வசிகரன் அன்ரனியா அமுதா
(பெற்றா, மன்னார்)

**"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (யோவான். 11:25)**

அன்பின் உருவே! பாசத்தின் இலக்கணமே!
ஓராண்டு கடந்து போனாலும்,
நீங்கள் என்றும் எம்மோடு, எம் மத்தியில்
வாழ்ந்து கொண்டே இருக்கின்றீர்கள் அம்மா!
உங்கள் புன்னகை பூத்த முகம் எம் கண்முன்னே
நிலையாய் நிற்குதம்மா! ஆறாத் துயரத்தில்
எம்மை ஆழ்த்தி விட்டுச் சென்று விட்டீர்களே!
உங்கள் ஆன்மா இறைவனின் சந்நிதியில் இளைப்பாற
நித்தமும் இறைவனை வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
கணவன், பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

## 09ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 21 08 1995



உதிர்வு 11 06 2010

### செல்வன். நீக்கிலாஸ் கனிலன்
(சிறுக்கண்டல், முருங்கன்)

**"படைகளின் ஆண்டவரே உமது உறைவிடம் எத்துணை அருமையானது" (தி.பா. 94:1)**

இதயத்தின் ஆறாத காயங்களுடன் இன்னும் எத்தனை? நாட்கள்
நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்
(யோசுவா 24:15) ஆலயத்தில் இறுதி இரங்கல் திருப்பலியில்
பங்குத்தந்தை கூறிய வார்த்தைகள் குடும்பமாக ஆலயத்தில்
பணி செய்கின்ற இவர்களுக்கு நடந்தது என்ன?
பரலோகத்தில் உனது பரிந்துபேசுதலால் நாங்கள்
வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்,
அம்மா, அப்பா, அண்ணன், அண்ணி, றொமேல்சன்.

## 25ஆம் ஆண்டு, 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### மரியதாஸ் பிள்ளை, பொன்னுக்கோன் மாஸ்ரர்) | எலிசபேத்தம்மா (தங்கம்)
(சூரியகட்டைக்காடு, நானாட்டான்)

மலர்வு : 19 - 09 - 1950
உதிர்வு : 17 - 05 - 1994

மலர்வு : 13 - 03 - 1953
உதிர்வு : 19 - 11 - 2006

எங்கள் பாசமுள்ள பெறறோரே - நீங்கள்
எம்மைவிட்டு பிரிந்து பல ஆண்டுகள் மறைந்து போனாலும்
எம் இதயத்தில் வாழ்ந்து கொண்டே இருக்கின்றீர்கள்.
பல ஆண்டல்ல பல்லாயிரம் ஆண்டு கடந்தாலும்
உங்கள் நினைவுகள் எம் நினைவில் மறவாது என்றுமே.
உங்கள் ஆன்மா இறைவனில் இழைப்பாற இறைஞ்சி நிற்கின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
பிள்ளைகள், தீபா, றூபா, அனுஷா, கீதா, சகோதரர், சகோதரிகள்.